THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
# சுடர் ஒளி
30.00
பக்கங்கள் -28
வார சஞ்சிகை
செப்ரெம்பர் 05- செப்ரெம்பர் 11, 2012
September 05 - September 11, 2012



## நம்பிக்கை இழந்துவரும் ஆசிரிய, மாணவ சமூகம்

## கைவிடப்படும் முதியோர்கள்!

## துகிலுரியப்படும் மத நம்பிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புக்குரிய சகல DFCC வர்தன வங்கி சேமிப்புக் கணக்கு வைப்பாளர்களுக்குமான அறிவித்தல்

DFCC
Vardhana Bank
Your Most Caring and Trusted Bank

இல. 73, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2, இலங்கை.
தொலைபேசி: +94 11 237 1371
ஃபெக்ஸ்: +94 11 237 1372
மின்னஞ்சல்: info@dfcc.lk
இணையத்தளம்: www.dfcc.lk

மதிப்புக்குரிய வாடிக்கையாளரே,

உங்கள் விசுவாசத்திற்கும் நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் பிரதியுபகாரமாக, உங்கள் சேமிப்பு வைப்புக்களுக்கான வட்டி வீதங்களை அதிகரிக்கவும் எமது மற்றைய சகல சேவைகள் தொடர்பிலும் விசேட சலுகைகளை வழங்கவும் DFCC வர்தன வங்கியின் தலைவர், சபைப் பணிப்பாளர்கள் மற்றும் முகாமைப் பீடத்தினர் தீர்மானித்துள்ளனர் என்பதனை எமது மதிப்புக்குரிய சகல "சேமிப்பு" வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நாட்டிலுள்ள உறுதிமிக்கதும் சிறப்புற நிர்வகிக்கப்படுவதுமான வணிக வங்கிகளுள் DFCC வர்தன வங்கியும் ஒன்றாகும் என்பதனை AA- என்ற ஃபிச் ரேட்டிங் லங்கா தர மதிப்பீடு உறுதிப்படுத்துவதனால், நீங்கள் பாடுபட்டுச் சம்பாதித்த பணம் எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அதனை DFCC வர்தன வங்கியில் முதலீடு செய்யலாம்.

வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் மிகச் சிறந்த சேவையை வழங்குவதே DFCC வர்தன வங்கியின் கொள்கையாகும். எம்மிடம் வைப்பிலிடப்பட்டுள்ள, உங்கள் கடின உழைப்பினால் பெறப்பட்ட பணத்திற்கு அதியுயர் வருமதியினை அளிப்பதே ஆண்டுதோறும் எமது நடைமுறையாக இருந்து வந்துள்ளது. தற்போது, நாம் உங்கள் சேமிப்பு வைப்புக்களுக்கான வட்டி வீதங்களை சுயமாகவே அதிகரித்துள்ளோம். முன்னொருபோதும் இல்லாத வகையிலான இத்தகைய எமது முற்போக்கு நடவடிக்கை, உங்கள் சேமிப்புக்களுக்கு மிகச் சிறந்த வருமானம் கிடைக்கும் என்பதை நீங்கள் உறுதியாக நம்புவதற்கான ஆதாரம் எனலாம்.

நீங்கள் தொடர்ச்சியாக எம்மீது வைத்துள்ள விசுவாசத்திற்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், "உங்களுக்கு அதிநட்புறவான வங்கி" என்ற முறையில், நாம் உங்களுக்கு மிகச் சிறந்த சேவைகளையே எப்போதும் தொடர்ந்து வழங்குவதற்கு முயற்சி செய்வோம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

வெவ்வேறு பிரிவு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, பொருத்தமான சில புதிய கவர்ச்சிகர சேமிப்புத் திட்டங்களை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம் என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அவை பற்றி மேலும் அறிந்துகொள்ள அருகிலுள்ள DFCC வர்தன வங்கிக் கிளைக்கு வருகை தருமாறு அல்லது தொடர்புகொள்ளுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். உங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள விசேட நன்மைகளின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

உங்கள் நம்பிக்கைக்குரிய,

லக்ஷ்மன் சில்வா
பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
DFCC வர்தன வங்கி

DFCC வங்கியின் உப நிறுவனம்

## மெகா போனஸ், வர்தன ஜூனியர் மற்றும் வர்தன ஜூனியர் + வாடிக்கையாளர்களுக்கான மேலதிக நன்மைகள்

### அதிகரித்த வட்டி வீதங்கள்

| | | மறுசீரமைக்கப்பட்ட வீதங்கள் | முன்னர் |
|---|---|---|---|
| Mega போனஸ் சேமிப்புக் கணக்கு | 1,000.00 - 49,999.99 | = 5.00 % | (4.00%) |
| | 50,000.00 - 249,999.99 | = 6.00 % | (5.50%) |
| | 250,000.00 - 449,999.99 | = 7.00 % | (6.75%) |
| | 500,000.00 - 999,999.99 | = 8.50 % | (8.50%) |
| | 1,000,000.00 and above | = 10.00 % | (8.50%) |
| Vardhana Junior | 1,000.00 - 4,999.99 | = 5.00 % | (4.50%) |
| | 5,000.00 - 99,999.99 | = 5.50 % | (5.00%) |
| | 100,000.00 and above | = 7.00 % | (5.00%) |
| Vardhana Junior+ | 100,000.00 - 149,999.99 | = 8.25 % | (8.25%) |
| | 150,000.00 - 249,999.99 | = 8.50 % | (8.50%) |
| | 250,000.00 - 449,999.99 | = 8.75 % | (8.75%) |
| | 500,000.00 and above | = 10.50 % | (9.00%) |

### விசேட சலுகைகள்

- "ரண்வரம்" தங்க அடகுக்கு, வழமையான வட்டியைவிட ஆண்டுக்கு 0.05% குறைவான சலுகை வட்டி
- "வர்தன சந்தெல்ல" வீடமைப்புக் கடனுக்கு, வழமையான வட்டியைவிட ஆண்டுக்கு 0.50% குறைவான சலுகை வட்டி
- தனிப்பட்ட கடன்களுக்கு, வழமையான வட்டியைவிட ஆண்டுக்கு 0.50% குறைவான சலுகை வட்டி
- "வர்தன லீசிங்" குத்தகைக்கு, வழமையான வட்டியைவிட ஆண்டுக்கு 0.50% குறைவான சலுகை வட்டி
- அதிகரித்த நாளாந்த ATM மீளப்பெறுகை உச்சவரம்பு - வழக்கத்தைவிட ரூ.10,000/- அதிகம்.
- புதிய நடைமுறைக் கணக்குகளுக்கு 3 மாத காலத்திற்கு ஆகக்கூடியதாக 5 காசோலைப் புத்தகங்கள் இலவசம் (ஏனைய தகுதி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வேளையில் மாத்திரம்)
- தெரிவு செய்யப்பட்ட DFCC வர்தன வங்கி அல்லாத ATM கள் உட்பட 500 க்கு மேற்பட்ட ATMகளில் கட்டணமின்றிப் பணத்தை மீளப்பெறலாம்.

விசேட சலுகைகளைப் பெறுவதற்கு:

* தொடர்ச்சியான 6 மாதங்களுக்கு ரூபா.15000/-ஐ குறைந்தபட்ச மாதாந்தக் கணக்கு மீதியாகப் பேணுதல் வேண்டும்.
* VJ மற்றும் VJ+ கணக்குகளைப் பொறுத்தவரையில் கணக்கு மீதி ரூபா.15000/- ஆக அதிகரிக்கப்படல் வேண்டும்.

HOTLINE: (011) 266 3 888

இணையத்தளம்: www.dfcc.lk

DFCC
வர்தன் வங்கி
உங்களுக்கு அதிநட்புறவான வங்கி

வர்தன வங்கி பிட்ச் ரேட்டிங் லங்காவினால் AA-(lka) தரம் வழங்கப்பட்டுள்ளது


(குறித்த நேரத்திற்கு பணத்தை வழங்கத்தக்க உறுதிநிலையையும் நிரூபிக்கும் சான்றாக அமைகிறது)

DFFC வர்தன [illegible] செய்யப்படும் வங்கியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துகிலுரியப்படும் மத நம்பிக்கைகள்

அண்மையில் புத்தர் சிலையை முத்தமிட்டபடி படமெடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று பிரான்ஸ் நாட்டின் பிரஜைகள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். அவர்களின் இச்செயல் பௌத்த மக்களை அவமதிக்கும் வகையில் அமைந்தது எனக் கூறப்பட்டு அவர்களுக்குக் காலி நீதிமன்றம் அபராதமும் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் வழங்கியது. அதை யாரும் குறை சொல்லி விட முடியாது.



• சந்திரசேகர ஆசாத்

பஞ்சபாண்டவர்களில் மூத்தவனான தருமன் தனது ராஜ்யம் உட்பட தனது சொத்துக்களை வைத்துத் துரியோதனனுடன் சூதாடித் தோற்று பின்பு தன் சகோதரர்களையும் மனைவியையும் கூட பந்தயமாக வைத்துத் தோற்கின்றான். பாண்டவர்களின் மனைவியான பாஞ்சாலியை அடிமை கொண்ட துரியோதனன் அவளைச் சபையில் இழுத்து வந்து அவளின் சேலையை உரியுமாறு துச்சாதனனுக்குக் கட்டளையிடுகிறான். கண்ணன் அருளால் சேலை தொடர்ந்து வளர்ச்சியடையவே பாஞ்சாலியை நிர்வாணப்படுத்த முடியாமல் துச்சாதனன் சோர்ந்து விழுகிறான்.

இது மகாபாரதக் கதையில் வரும் ஒரு பகுதி.

இலங்கையில் கூட இப்போது பல துச்சாதனர்கள் துகிலுரியும் கைங்கரியத்தை மேற்கொண்டு வருகின்றனர். இங்கு கண்ணன் இல்லாத காரணத்தால் துகில்கள் முழுமையாகவே உரியப்படுகின்றன. ஆனால் இன்றைய துச்சாதனர்களோ தாங்கள் என்றுமே துகில்களை உரிவதில்லை எனவும், நிர்வாணமான பாஞ்சாலிகளைச் சுட்டிக்காட்டி அவர்கள் அலங்காரமான ஆடைகளுடன் வலம்வருவதாகவும் சத்தியம் செய்கின்றனர். இன்னும் சில துச்சாதனர்களோ தாங்கள் பாஞ்சாலி பக்தர்கள் எனவும் அவளின் மேனி வியர்வையால் துன்பப்படக் கூடாதே என்பதற்காகவே அவளின் ஆடையைக் களைவதாகவும் கூறி வருகின்றனர்.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இங்கு இனபேதம், மதபேதம், வர்க்கபேதம் எதுவும் இல்லையெனவும், சகல மதங்களும் சரிசமமாக மதிக்கப்படுகின்றன என்றும் கூறி வருகிறார். ஆனால் இங்கு பள்ளிவாசல்கள் இடிக்கப்படுகின்றன. முஸ்லிம்களின் புனித நூலான திருக்குரான் வீதியில் தூக்கி வீசப்படுகிறது. மசூதிகளில் பிக்குகள் பலவந்தமாக நுழைந்து பிரித் ஓதுகின்றனர். இந்துக் கோவில்களின் தெய்வச் சிலைகள் பகிரங்கமாகப் புத்தபிக்குகளால் தூக்கிச் செல்லப்படுகின்றன. தேவாலயங்கள் எரிக்கப்படுகின்றன.

எனினும், இலங்கையில் மத சுதந்திரம் அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒருவரின் மத விஷயங்களில் இன்னொருவர் தலையிடுவது சட்டப்படி குற்றம். ஆனால் மேற்கூறிய அத்துமீறல்களுக்கு எதிராகப் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை. மாறாக பாதிக்கப்பட்ட மதத்தினரை அமைதி காத்து சமாதானத்தைப் பாதுகாக்கும்படி கோரப்படுகின்றது.

அண்மையில் புத்தர் சிலையை முத்தமிட்டபடி படமெடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று பிரான்ஸ் நாட்டின் பிரஜைகள் நீதிமன்றத்தில் நிறுத் தப்பட்டனர். அவர்களின் இச்செயல் பௌத்த மக்களை அவமதிக்கும் வகையில் அமைந்தது எனக் கூறப்பட்டு அவர்களுக்குக் காலி நீதிமன்றம் அபராதமும் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் வழங்கியது. அதை யாரும் குறை சொல்லி விட முடியாது.

ஆனால், அம்பாறை மாவட்டம் பாணமையில் ஒரு பௌத்த பிக்குவின் தலைமையில் புகுந்த ஒரு கூட்டத்தினர் அங்கிருந்த பிள்ளையார் சிலையை எடுத்துச் சென்றுள்ளனர். அவர்கள் மேல் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவுமில்லை. அவர்கள் எந்த ஒரு நீதிமன்றத்தில் நிறுத்தப்படவுமில்லை. அதேபோன்று புனித நோன்பு ஆரம்பமான அன்று குருநாகலில் சில பிக்குகள் தலைமையிலான கூட்டம் முஸ்லிம்கள் தொழுகைக்குச் செல்வதைத் தடுத்ததுடன் மசூதிக்குள் புகுந்து பிரித் ஓதினர். அவர்கள் கைது செய்யப்படவுமில்லை. தண்டிக்கப்படவுமில்லை.

தற்சமயம் அரச பணியாளர்களை மரங்களில் கட்டி வைப்பதில் புகழ்பெற்ற அமைச்சர் மேர்வின் சில்வா இந்துக் கோவில்களில் மிருகப்பலி கொடுக்கப்படுவதைத் தடுக்கும் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். அவர் தான் ஒரு காளி பக்தன் எனவும் பல வருடங்களாகக் காளியை வழிபட்டு வருவதாகவும் காளியின் ஆலயத்தில் இரத்தம் சிந்துவதைத் தன்னால் பொறுக்க முடியவில்லை எனவும் அதனால் மிருகப்பலிக்கு எதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த வருடம் சிலாபம் காளி கோவிலில் பலி கொடுக்கக் கொண்டு வரப்பட்ட ஆடுகள், கோழிகள் என்பவற்றை அவர் ஒரு காடையர் கூட்டத்துடன் வந்து அபகரித்துச் சென்றதை மறந்து விட முடியாது. அவரின் இந்த அறிவிப்பு தொடர்பாகக் கூட ஜனாதிபதியிடமிருந்தோ அல்லது அரச தரப்பிலிருந்தோ எந்தவித விமர்சனமோ, கண்டனமோ எழவில்லை. அதன் அர்த்தம் இந்து மதத்தின் பாரம்பரிய சடங்குகளில் அவர் தலையிடுவதற்கான உரிமை அங்கீகரிக்கப்படுகிறது என்பதே என நம்ப வேண்டியுள்ளது.

இந்து மதத்தில் இரு வேறு வகையான வழிபாட்டு முறைகள் உண்டு. ஒன்று ஆகமமுறைப்படி இடம் பெறும் நியமவழிபாட்டு முறை. மற்றது ஆகமவிதிகளுக்கு உட்படாத சிறுதெய்வ வழிபாட்டு முறை. சிறுதெய்வ வழிபாட்டு முறை என்பது விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள் போன்ற உழைக்கும் மக்களால் இன்று வரை பேணிப்பாதுகாக்கும் முறையாகும். சிவன், பார்வதி, மகாவிஷ்ணு, விநாயகர், முருகன் போன்ற தெய்வங்கள் ஆகமமுறைப்படி வழிபடப்படும் தெய்வங்களாக விளங்குகின்றன. காளி, வைரவர், அண்ணமார், ஐயனார், முனியப்பர், துர்க்கை, பெரியதம்பிரான், கண்ணகை அம்மன், நாச்சிமார், மாடசாமி போன்றவை சிறுதெய்வ வழிபாட்டுக்குரியனவாக விளங்குகின்றன. இவ்வழக்கத்தில் வடமொழி மந்திரங்கள் எதுவும் பாவிக்கப்படுவதில்லை. பொங்கல், மடை பரவல், சாமியாடல், தீ மிதித்தல் என்பனவே வழிபாட்டு முறைகளாகும். இதில் மிருகபலி என்பதும் ஒரு முக்கிய சடங்காகும். பலி கொடுப்பதற்கென்றே சிறுவயது முதல் ஆடு, கோழி என்பவற்றை விசேட அக்கறையுடன் வளர்த்து மாலை போட்டு, மேளமடித்து ஊர்வலமாக அழைத்துச் சென்று பலியிடுவதுண்டு. இது இந்து மதம் சார்ந்த ஒரு பாரம்பரிய சடங்காகும்.

ஆதிமனிதன் தனது சக்திக்கு மேம்பட்ட நெருப்பு, வெள்ளம், புயல் போன்றவற்றைக் கண்டு அஞ்சினான். எனவே, அவைகளைச் சாந்தப்படுத்தும் நோக்குடன் அவற்றை வழிபட்டு ஆடிப்பாடிப் பலிகொடுக்கும் முறையான சடங்குகளை ஏற்படுத்தினான். அதே போன்று மனித குல உற்பத்தி என்பது ஆண், பெண் உறவினாலேயே ஏற்படுகிறது என்பது அறியப்பட்ட போது லிங்க வழிபாடு உருவாகியது.

இப்படியாக தெய்வ வழிபாடு என்பது படிப்படியாக பரிணாமவளர்ச்சியினூடாக விருத்தியடைந்து இன்று நிறுவனமயப்பட்டு விட்டது. அதன் காரணமாக மதம் என்பதும் ஒரு கலாசார அடையாளமாக வலிமை பெற்றுவிட்டது. அவ்வகையில் மதம் சார்ந்த சடங்குகளும் அந்த இனத்தின் [illegible]மளவுக்கு முக்கியத்துவம் பெறுகிறது.

எனவே, ஒரு இனத்தின் மதம் தொடர்பான சடங்குகளில் வேறு ஒருவர் தலையிடுவது அடிப்படை உரிமையை மீறும் ஒரு கடும் குற்றமாகும்.

இன்று பௌத்த மத வெறியாளர்களால் பள்ளிவாசல்களை இடித்தல், குர்ஆனை எடுத்து வீதியில் வீசல், மசூதிக்குள் பிரித் ஓதல், தெய்வச் சிலைகளை அபகரித்தல், வேள்விகளைத் தடுத்தல் போன்ற அத்து மீறல்கள் சுதந்திரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் ஜனாதிபதியும் அரசில் அங்கம் வகிக்கும் சில முஸ்லிம் அமைச்சர்களும் அப்படி எதுவுமே நடக்கவில்லை எனக் கூறி விடுகின்றனர். இக்கொடுமைகளை யாராவது சுட்டிக் காட்டினால் இனவாதம் பேசுவராகக் குற்றம் சுமத்துகின்றனர். ஜனாதிபதியின் இந்து மத விவகார ஆலோசகரோ இந்து மதத்திற்கும் மக்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் அடாவடித்தனங்களை நியாயப்படுத்தி வருகிறார்.

இன்று மதம் என்பது ஆன்ம ஈடேற்றத்துக்கான ஒரு வழிபாட்டு முறை என்ற கட்டத்துடன் நின்று விடாது அம்மதத்தைப் பின்பற்றும் மக்களின் கலாசார அடையாளமாகவும் மாறிவிட்ட நிலையில் மத உணர்வுகள் உயரிய இடத்தில் வைத்து மதிக்கப்படுகின்றன. மத உணர்வுகளையும் பாரம்பரியங்களையும் கொச்சைப் படுத்தும் எந்த ஒரு சம்பவமும் பெரும் பூகம்பங்களை ஏற்படுத்துமளவுக்கு வலிமைவாய்ந்தவையாக விளங்குகின்றன.

அண்மையில் பாகிஸ்தானில் ஒரு 13 வயதுச் சிறுமி திருக்குரானின் பக்கங்களைக் கிழித்தமைக்காகக் கைது செய்யப்பட்டாள். அவள் ஒரு மனவளர்ச்சி குன்றிய பெண்ணாக இருந்த போதும் அவர் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படலாம் எனக் கருதப் படுகிறது. சல்மான் ருஷ்டி என்ற பிரபல எழுத்தாளர் தனது நாவலில் இஸ்லாமியச் சட்டங்கள் பற்றி விமர் சனம் செய்த காரணத்தால் ஈரானிய அரசால் மரண தண்டனை விதிக்கப்பட்டதுடன் அவரைக் கொல்பவர்களுக்கு பெரும் தொகை பரிசாக வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. பங்களாதேஷ் பெண் எழுத்தாளர் முஸ்லிம் பெண்களின் நிலை தொடர்பாக தனது நாவலில் விமர்சனம் செய்த காரணத்தால் இன்று வரை தனது சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாமல் சுவீடனில் அஞ்ஞாதவாசம் செய்து வருகிறார். வட இந்தியாவின் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதால் எழுந்த கசப்புணர்வு இன்று வரை இந்தியாவில் நடக்கும் பல வன்முறைகளுக்கு மூலமாய் அமைந்துள்ளது.

பாரதத்தில் ஒரு ஓவியர் கல்வித் தெய்வமாகக் கருதப்படும் சரஸ்வதியை நிர்வாணமாகப் படம் வரைந்தமைக்காக இந்தியாவெங்கும் பெரும் பூகம்பமே வெடித்தது. யேசுநாதரின் கடைசி விருந்தின்போது கலந்து கொண்ட 13வது நபர் பற்றி விமர்சித்து எடுக் கப்பட்ட ஆங்கிலப் படம் திரையிடப்படவிருந்த தியேட்டரே தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. நீதிமன்றமும் படம் திரையிடப் படுவதைத் தடை செய்தது.

இப்படியாக உலகம் முழுவதுமேஏராளமான உதாரணங்கள் உண்டு. ஆனால் இலங்கையில் மட்டும் பௌத்த மதத்திற்கு ஒரு சட்டமும் ஏனைய மதங்களுக்கு ஒரு சட்டமும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது பௌத்த சிங்கள மேலாதிக்கமே நடை முறையில் உள்ளது.


அப்பட்டமாகவே தமிழ், முஸ்லிம் மக்களின் மத உணர்வுகள் மிக மோசமான முறையில் அவமதிக்கப் படுகின்றன. மனங்கள் புண்படுத்தப்படுகின்றன.

அதேவேளையில், எல்லா மதங்களும் எல்லா இனங்களும் சமஅளவில் மதிக்கப்படுவதாக ஜனாதிபதியாலும் அரசுடன் சங்கமமாகி விட்ட தமிழ், முஸ்லிம் அமைச்சர்களாலும் பிரசாரம் செய்யப்படுகின்றது.

ஆனால், இந்து கிறீஸ்தவ, முஸ்லிம் மக்களின் மத உணர்வுகள் துகிலுரியப்படுகின்றன என்பது மட்டும் உண்மை. இங்கு ஆடை தரக் கண்ணன் இல்லை. இதனால் பாஞ்சாலிகளே கண்ணனாக மாற வேண்டிய நிலை ஏற்படலாம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்பிக்கை இழந்துவரும் ஆசிரிய, மாணவ சமூகம்

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் வலுவடைந்து தொடர்ந்து நடைபெறும் வேளையிலும், அத்துடன் பரீட்சை எழுதிய மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவுக்காக 'இசற்ஸ்கோர்' வெட்டுப்புள்ளி விடயம் தொடர்பில் நீதிமன்றின் முடிவிற்காகப் பரபரப்புடன் காத்திருக்கையிலும் நாட்டிலுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என இருதரப்பினரும் ஒத்த வகையில் நாட்டின் முழுமையான கல்வி நடைமுறைகளில் நம்பிக்கையை இழந்து நிற்கின்றனர்.

உயர்தர வகுப்பு ஆசிரியர்களும் மற்றும், மாணவர்களும் உயர்தர வகுப்புப் பரீட்சை அவர்கள் முதலில் எதிர்பார்த்த விதத்தில் நல்ல வகையில் நடக்காதமையினால் ஏமாற்றத்தை வெளிப்படுத்துகின்றனர். அத்துடன் நாட்டிலுள்ள கல்விக் கட்டமைப்பு அடுத்துவரும் இளஞ்சந்ததியினரின் எதிர்காலத்தை நல்ல விதத்தில் அமையச் செய்யும் என்பதில் அவர்கள் நம்பிக்கையை இழந்து விட்டதாகவும் கூறுகின்றனர்.

கடந்தமாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களில் காணப்பட்ட தவறுகள் பரீட்சை விடயங்களில் அதிகாரிகள் மாணவர்களின் இக்கட்டான நிலைமைகளை உணர்ந்து கொள்ளாது பரீட்சைக்கான வினாத் தாள்களைத் தயாரிப்பதில் தொடர்ந்தும் அசட்டையாகவும் பொறுப்பற்றும் இருக்கின்றனர் என்பதை நிரூபிப்பதுடன், செய்யாத தவறுக்காக ஒட்டுமொத்தத்தில் மாணவர்கள் தண்டிக்கப்படுகின்றனர் என்பதும் மிக கவலைக்குரிய தொன்றாகும்.

கொழும்பிலுள்ள முதன்மைநிலை மகளிர் கல்லூரியின் மாணவி ஒருவர் தான் அரசாங்கத்தில் நம்பிக்கையை இழந்துவிட்டதாகக் கூறுகிறார். "நாங்கள் திரும்பத் திரும்ப அரசாங்கத்தினால் கைவிடப்படுகின்றோம். மாணவர்கள் 2011 ஆம் ஆண்டின் 'இஸட் ஸ்கோர்' வெட்டுப்புள்ளிகளுக்கான நியாயத்தை வற்புறுத்திக் கோருகின்றமையை தொலைக்காட்சிகளில் பார்க்கின்றோம். எங்களுக்கு என்ன நடக்குமோ என நான் அங்கலாய்க்கின்றேன்" என அவர் கூறினார்.

அதே கல்லூரியைச் சேர்ந்த மகேஷி என்ற மற்றுமொரு கணிதபாட மாணவி கூறுகையில் "கணிதபாட வினாத்தாள் நான் எதிர்பார்த்தபடி அமையவில்லை. விடைகளை அடைவதற்கு நான் ஒவ்வொன்றிற்கும் 10 தொடக்கம் 15 நிமிடங்கள் வரையில் நேரத்தைச் செலவு செய்ய வேண்டியிருந்தது. அதன் நிமித்தம் மனக் கலவரம் அடைந்த நிலையில் இருந்தேன். அவர்கள் எமது எதிர்காலத்துடன் விளையாடுகிறார்கள். இவ்வகையான தவறுகள் ஏற்படாது தவிர்ப்பதற்கு நிச்சயம் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

கல்கிசை சென்.ஜேம்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கணிதபாட மாணவனான அலெக்ஸ் "ஐந்து நிமிடங்கள் மட்டுமே விடையளிப்பதற்குச் செலவு செய்ய வேண்டிய கேள்விகளுக்கு 15 நிமிடங்கள் அளவில் வீணாக விரயம் செய்ய வேண்டி ஏற்பட்டதுடன் வினாத்தாளில் தவறுகள் இருப்பது தெரியாமல் சில வேளைகளில் அவை என்னுடைய தவறுகளாக இருக்குமோவெனக் கருதி கணக்கிடுவதிலும் நேரத்தை வீணடித்துவிட்டேன்" என்று கவலையுடன் கூறினார்.

அம்மாணவர் தொடர்ந்தும் "வினாத்தாளினைத் தயாரிக்கும் பொழுதுகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக அவதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் இருத்தல் வேண்டும். அங்கே ஓர் ஒழுங்கான நிர்வாகம் மற்றும் பொருத்தமான சிந்தனைத் தெளிவுமில்லை. இதுபோன்று ஒருபோதுமே நிகழக் கூடாது" எனத் தனது மன ஆதங்கத்தினை வெளிப்படுத்தினார்.

சென்.ஜோசப் கல்லூரி உயிரியல் மாணவரான விற்ஸ்ரி என்பவர் உயிரியல் கேள்வித்தாளில் வந்த பிழைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் "எமக்கு ஆசிரியர்களினால் கற்பிக்கப்படாத பன்முகத் தெரிவுக் கேள்விகள் இரண்டு தரப்பட்டன" எனக் குறைகூறினார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடக் கல்லூரியில் உயிரியலைக் கற்பிக்கும் ஆசிரியையான கல்யாணி சிவபாலன் உயிரியல் வினாத்தாளில் உள்ள தவறுகள் குறித்து விபரிக்கையில் "மாணவர்களுக்குக் கற்பிக்குமாறு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த செயல்முறை அறிவுறுத்தல்களுக்கு முற்றிலும்

எதிர்மாறாகவே உயிரியல் வினாத்தாள்-1இன் பன்முகத் தெரிவுக் கேள்வி இல.49 தயாரிக்கப்பட்டுள்ளது. உலகளவில் உயிரியல் பாடத்தில் பொதுப் பெயர்களைப் பயன்படுத்தியே நினைவில் நிறுத்தும்படியாகக் கற்பிக்கப்பட்டது. ஆனால் கேள்வித்தாளில் எதிர்மாறாக விஞ்ஞான ரீதியிலான பெயர்களே கேட்கப்பட்டிருந்தன. எனது மகளும் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். கேள்விகள் தெளிவாக இல்லையென என்னிடம் முறையிட்டார். அதுமட்டுமன்றி பாடத்திட்டத்தில் இல்லாத விதமாக 'எயிட்ஸ்' நோய் பற்றிய கேள்வியொன்றும் வந்திருந்தது. என்ன அடிப்படையில் அந்தவகைய கேள்வியைக் கேட்டிருந்தார்களோ எனக்குத் தெரியவில்லை" என்று அவர் விளக்கிக் கூறினார்.

அத்தோடு அவர் "நானும் விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபடுபவர்களில் ஒருவர்தான். கடந்த 10 அல்லது 12 வருடங்களாக அதே பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தான் வினாத்தாள்களைத் தயாரிக்கின்றனர். ஆனால் இதுவரையில் அவர்கள் ஒருபோதுமே கேள்வித்தாள்களைத் தயாரிக்கும் முன்னதாக ஆசிரியர்களின் கற்பித்தல் வழிகாட்டலைப் பார்ப்பதில்லை" என்பதையும் குறிப்பிடத் தவறவில்லை.

மேலும், தொடர்ந்து திருமதி கல்யாணி சிவபாலன் தற்பொழுது நடைமுறையில் உள்ள ஏனைய குறைபாடுகள் குறித்துக் கூறுகையில் "பரீட்சை நிலையங்களில் கடமையில் ஈடுபடும் மேற்பார்வையாளர்கள் மும்மொழிகளிலும் போதிய பரிச்சயமற்றவர்களாக இருப்பதன் விளைவாக தமிழ்மொழி மூலம் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட எந்த திருத்தங்களையும் உணர்ந்தறிவதில் சிரமங்கள் உள்ளன. அத்துடன் இரசாயனவியல் வினாத்தாளுடன் மாணவர்களுக்கு காலகட்ட அட்டவணைகள் வழங்கப்படுமெனக் கூறப்பட்டிருந்த போதிலும் அவை வினாத் தாள்களுடன் வழங்கப்படவேயில்லை. எனது மகள் பரீட்சைக்குத் தோற்றிய லலித் அதுலத்முதலி மகாவித்தியாலயத்தில் இரசாயனவியல் வினாத்தாளுடன் குறித்த அட்டவணை வழங்கப்படவில்லை" எனவும் தெரிவித்தார்.

இதுகுறித்து, மற்றொரு கணித ஆசிரியர் தெரிவித்த கருத்துச் சற்று மாறுபட்ட கோணத்தில் அமைந்திருந்தது. "அதிகாரிகள் தவறிழைத்து விட்டனர் தான். ஆனால் பரீட்சார்த்திகள் விடையளிக்க முயற்சித்த கேள்விகளுக்கு முழுமையான புள்ளிகளை வழங்குவதே நியாயபூர்வமானது என நான் நம்புகிறேன்" என்பதே அதுவாகும்.

இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரான மகிந்த ஜயசிங்க, பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் 2012ம் ஆண்டின் உயர்தரப் பரீட்சைத் தாள்களுக்குப் புள்ளி வழங்குவதில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடுமெனவும், அதனால் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படக் கூடுமெனவும் கூறியுள்ளார்.

அதேவேளையில், தொடரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்தவையாகவேயுள்ளன. அத்துடன் மாணவர்களும் மன அழுத்தங்களுக்குள்ளாகியுள்ளனர்.

"எமது கல்வி நடைமுறையில் அடிக்கடி நேரிடும் இவ்வித சம்பவங்களினால் நாங்கள் மனங்குழம்பிய நிலையிலும் அத்துடன் கவலையும் கொண்டவர்களாக இருக்கின்றோம்" எனக் களனிப் பல்கலைக்கழக மொழித் துறையைச் சார்ந்த இறுதியாண்டு மாணவியான நிட்மா நிரோஷினி தெரிவிக்கின்றார். மேலும் அவர் "விரிவுரையாளர்கள் தாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளை நியாயப்படுத்துகின்றனர். அரசாங்கம் நான் அவர்கள் மட்டில் அதன் நிலைப்பாட்டின் இறுக்கத்தைத் தளர்த்துதல் வேண்டும். நாங்கள் அவர்களின் கல்வியறிவிற்கான மதிப்பினை வழங்குதல் வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளையில், கொழும்பு பல்கலைக்கழக மாணவனான உபுல் விக்கிரமசிங்க "எமது கல்விக்காலம் அநாவசியமாக நீடித்திழுக்கப்படுகின்றது. எமது பரீட்சைகள் தாமதமாகின்றன. அதைவிட நாங்கள் தேவையற்ற விதத்தில் மேலதிகமாக ஒரு வருடமோ அல்லது அரைவருடமோ அதே பயிற்சி அலகுக்காகச் செலவிட வேண்டியுள்ளது" எனத் தெரிவித்ததுடன் "விரிவுரையாளர்களின் கோரிக்கைகள் நியாயமானவையே, எனவே அவர்களது கோரிக்கைகள் வழங்கப்படல் வேண்டும்" எனத் தனது ஆதரவினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

மொறட்டுவைப் பல்கலைக்கழக வடிவமைப்புத் துறையைச் சேர்ந்த மாணவரான மகேந்திரன் பிரதீப் கூறுகையில் "விரிவுரையாளர்களை மனத்திருப்தியுடன் வைத்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அவ்விதமெனில் தான் மாணவர்களுக்கு அவர்களிடமிருந்து சிறந்த விரிவுரைகளைப் பெற்றுப் பயனடைய முடியும். நாங்கள் விரிவுரைகளைப் பெறுவதற்குத் தான் செல்கின்றோமே தவிர வெறுமனே தனிமுறைப் பாடப்பயிற்சிக்குச் செல்வதில்லை. மாணவர்களின் நல் மனநிலையினைக் கொலை செய்வதை நிறுத்துங்கள்" என அரசினைச் சாடியுள்ளார்.

கல்வி அமைச்சரான பந்துல குணவர்த்தன பரீட்சைத் தாள்களில் தவறுகள் ஏற்பட்டது குறித்துத் தெரிவிக்கையில் அவருக்கும் இதற்கும் எந்த சம்பந்தமுமில்லையெனவும், இது குறித்துக் கேட்பதற்குத் தம்மால் பதிலளிக்க முடியாதெனவும், அதற்குரிய அதிகாரம் தம்மிடமில்லை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடமே கேளுங்கள் எனக் கூறியுள்ளார். இதுவும் வேடிக்கையான தொன்றே!

எதுவாயினும் நாட்டிலுள்ள அனைத்துச் சமூக மாணவர்களினதும் எதிர்காலச் சுபீட்சமும் நாட்டின் மேம்பாடும் கல்வியிலேயே தங்கியுள்ளது. எனவே, அதனைச் சீராகக் கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின் அவசியமான பாரிய பொறுப்பாகும்.

**சண்டே லீடர் பத்திரிகையில் கிரிஷாந்தி கிறிஸ்ரோபர் எழுதிய கட்டுரை.**

■ தமிழில் ஜவாஹிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

05. செப்ரெம்பர் - 11 செப்ரெம்பர், 2012

86, ஜெயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு 14. டெலிபோன்: 0115728005
பக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

# இலங்கை - இந்திய உறவு..

இந்தியாவின் கேந்திர நகரங்களில் ஐந்து துணைத் தூதரகங்களை அமைக்க இலங்கை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் இந்தியாவுடனான உறவை மேம்படுத்திக்கொள்ள முடியும் எனத் தாம் நம்புவதாகவும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தூதரங்களை அமைப்பதன் மூலம் மட்டும் இந்தியாவைத் திருப்திப்படுத்த முடியும் என்றோ, இந்தியாவுடனான உறவை வளர்க்க முடியுமென்றோ, தற்போது ஏற்பட்டுள்ள விரிசலைச் சரிசெய்து விட இயலுமென்றோ இலங்கை நினைத்தால் அது தவறானது. சீனாவுடனான நெருக்கத்தைக் குறைத்து இந்தியாவுடன் மேற்கொள்ளப்படும் உறவே இந்தியாவை சமாதானப்படுத்தும்.

ஆனால், அவ்வாறான நகர்வை இலங்கை மேற்கொள்ளாது என்றே தெரிகின்றது. ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையை இந்தியா ஆதரித்ததை பகிரங்கமாகவே இலங்கை குறை கூறிவந்தது. இதற்குப் பின்னரே சீனாவுடனான நெருக்கத்தை இலங்கை அதிகப்படுத்தி வருவதை நாம் அவதானிக்க முடிகின்றது.

சீனாவும், இந்தியாவுடனான இலங்கையின் தெறிப்புநிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருவது போலவே தோன்றுகின்றது. வடக்கு, கிழக்கில் இராணுவக் குடியேற்றங்களை அமைக்க நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களை சீனா இலங்கைக்கு வழங்கவுள்ளது என சமீபத்தில் வெளியான தகவல் மற்றும், சீனப் பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை வருகை என்பன சீன - இலங்கை உறவுகளின் மேம்பாட்டை உறுதிப்படுத்துகின்றன.

சீனா உலகின் வல்லரசாக உயரும் நோக்கில் வேகமாக வளர்ந்து வரும் நாடு. அணுவாயுதம் உள்ள நாடு. மிகப்பெரிய பாதுகாப்புப் படையை தன்னகத்தே கொண்டுள்ள நாடு. சீனாவின் ஒரே நோக்கம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தை தனது ஆளுகைக்குள் கொண்டு வருவதாகும். அதற்கான விரிவானதொரு திட்டத்தை சீனா எப்போதோ வரைந்து விட்டது. இதன் மூலமே தமது பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தை தக்கவைத்துக்கொள்ள முடியும் என சீனா முழுமையாக நம்புகின்றது.

இந்து சமுத்திரத்தில் அது மேற்கொண்டு வருகின்ற 'முத்துமாலை' திட்டம் மிக முக்கியமானது. எகிப்து, பாகிஸ்தான், பங்களாதேசம், இலங்கை, பர்மா, தாய்லாந்து என அத்தனை நாடுகளிலும் கால்களை ஆழப் பதிக்க சீனா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இலங்கையில் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தியில் பங்களிப்பதன் மூலம் அது இலங்கையில் காலடி பதித்துவிட்டது. அபிவிருத்தி, பொருளாதார, படைய உதவிகளையும் இந்நாடுகளுக்கு வழங்க சீனா முன்வந்துள்ளது. கடலில் தனது பாதுகாப்பை உறுதி செய்ய இந்த நாடுகளின் கடற்படையுடன் இணைந்து செயற்படவும் சீனா விரும்புகின்றது.

இதுவே இன்று அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் கடுப்பேறக் காரணமாகியுள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்கா இந்தியாவை முன்னிறுத்தியே அதன் நகர்வுகளை மேற்கொள்ளும். இந்தியாவை இப்பிராந்தியத்தில் தனிமைப்படுத்தும் சீனாவின் நடவடிக்கையை அமெரிக்கா பொறுத்துக் கொள்ளாது. அதனால் இந்தியாவிற்குப் பின்னால் எப்போதும் அமெரிக்கா இருக்கும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் சமநிலையைப் பாதிக்கும் வகையிலான சீனாவின் செயற்பாடுகளுக்கு இலங்கை துணைபோவதை தவிர்க்கும் வரை இலங்கை - இந்திய - அமெரிக்க உறவுகள் சீரான நிலைக்கு வராது. இந்தியாவில் புதிய தூதரகங்களை அமைப்பது போன்ற நடவடிக்கைகளின் மூலம் இந்தியாவை திருப்திப்படுத்த முடியாது.

இலங்கையில் தமிழர்கள் நிரந்தர அரசியல் தீர்வினைக் கோரி வருகின்ற நிலையில், சலுகைகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் மட்டுமே தீர்வாக முன்வைக்க முயல்கின்றமை போன்றதொரு தந்திரோபாயத்தை இந்தியாவுடன் மேற்கொள்ள இலங்கை முயலுமானால், அதனைச் சிறுபிள்ளைத் தனம் என்று கூறுவதே பொருத்தமானது.



# கைவிடப்படும் முதியவர்கள்

— சேனாதன்

முதியவர்கள் கைவிடப்படுவது பெற்றோர்களினதா? பிள்ளைகளினதா? அல்லது எமது சமூகத்தின் மாற்றமா? விரிவாக்கமடைந்து வரும் குடும்பங்களுக்கிடையிலான உறவு முறிவுகளா? அல்லது அணு உலக சகாப்தத்தின் மாறுதலா? அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவீனங்களால் இளஞ்சந்ததியினர் அதிக வருவாயீட்டும் நோக்கில் தாய், தந்தையர்களைக் கவனிப்பாரற்ற நிலையில் தனிமையில் விட்டு வேலை தேடி வெளிநாடுகள் செல்வதினாலா? மேற்படி நிகழ்வுகளுக்குக் காரணிகளாக இருப்பவை யாவை?

ஆசியாவில் வேறெந்த நாடுகளையும் விட 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் அதிகமாக இருப்பது இலங்கையில்தான் என்பது அண்மைய புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளின்படி தெரியவந்துள்ளது.

நாட்டிலுள்ள முதியோர் இல்லங்கள் நிரம்பி வழிகின்றன. இது ஓர் மனதை உறுத்தும், வேதனையை அளிக்கும் விடயமாகவே உள்ளது. மதிக்கப்பட வேண்டிய நாட்டின் மூத்த பிரஜைகளான இவர்கள் இங்ஙனம் அல்லலுறுவது உண்மையில் மனம் வருந்தத்தக்கதொன்றென்பதில் எள்ளளவு மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

சில முதியவர்கள் தமது நிலைமையை எண்ணி மனக் கசப்புக்குள்ளாகின்றனர். பலர் தம்மைக் கவனிக்காது அலட்சியப்படுத்தியமைக்காகத் தங்கள் பிள்ளைகள் மேலே பழி சுமத்துகின்றனர். இது ஓர் பாரிய பிரச்சினையாகும். பன்மடங்கு பெரிதான இப்பிரச்சினையில் வெளிப்படையாக எமக்குத் தெரிவது அதன் ஓர் சிறிய பகுதியேயாகும். வெளிப்படையாகப் புலனாகாத காரணிகளும் சிலவுண்டு.

எமது நாட்டுக் கலாச்சாரத்தின்படி நாங்கள் எமது பிள்ளைகள் புரிந்துணர்வுடனும் நன்மதிப்புடனும் அடக்கவொடுக்கமாகவும் நம்பிக்கையுடையவர்களாகவும் அத்துடன் நேர்மை தவறாதவர்களாகவும் திகழ வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். அதில் தவறேதுமில்லை.

ஆனால், அவர்கள் தமது எதிர்பார்ப்புகளுக்கு ஒவ்வாத வகையில் ஒழுகுவார்களேயாயின் தமது உயர்வான எண்ணங்களைச் சற்றும் கருத்திற் கொள்ளாது பிள்ளைகள் தம்மை ஏமாற்றிவிட்டனர் எனக் கருதி மனம் தளர்வடைந்து அவர்கள் மீது புரிந்துணர்வின்றி ஆத்திரமடைகின்றனர்.

கடுகதி வேகத்தில் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவீனமும் குடும்பங்களின் தொழில் மூலமான வருமானப் பற்றாக்குறையும் இந்நாட்களில் அநேகமான குடும்பங்களில் வறுமை நிலையை ஏற்படுத்துகின்றன. ஒருவரின் சம்பாத்தியத்தில் தங்கிவாழும் பல உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களில் இத்தகைய நிலைமை ஏற்படுவது சகஜமே. இதன் நிமித்தம் குடும்பங்களில் சகலரதும் தேவைகளைப் பூரணமாகப் பூர்த்தி செய்ய இயலாத இக்கட்டான நிலைமைகள் ஏற்படுகின்றன.

முதியவர்கள், பெற்றோர்கள் என்ற வகையில் அவர்களது பிள்ளைகளுக்கு அவர்களுக்குரிய சரியான மதிப்பு முக்கியத்துவம் என்பவற்றினைக் கொடுத்து வளர்த்தார்களா என்பதையும் சற்றுச் சிந்தித்துப் பார்த்தல் அவசியம்.

இத்தறுவாயில் உலகப் புகழ்பெற்ற தத்துவப் பேராசிரியை டொறத்தி-லோ நோல்ற் என்பவரின் கவிதை ஒன்றினை குறிப்பிடலாம்.

சிறுவர்கள் எப்படி வளர்க்கப்படுகின்றனரோ, அதனையே அவர்கள் செய்கின்றனர் என்று கூறுகிறது அவரது கவிதை.

சிறுவர்கள் பாதுகாப்புடன் வளர்ந்திருந்தால் அவர்கள் தம்மில் நம்பிக்கை கொள்வதற்கும் தம்மைச் சுற்றி வர இருப்பவர்களில் நம்பிக்கை வைப்பதற்கும் கற்கின்றனர். சிறுவர்கள் தோழமையுணர்வுடன் வளர்ந்திருந்தால் அவர்கள் இவ்வுலகமே வாழ்வதற்கு இதமான இடம் என்பதைக் கற்கின்றனர் எனக் கூறுகின்றது அக்கவிதை.

பெற்றோர்கள் என்ற வகையில் எத்தனை பேர் தமது பிள்ளைகளின் மனதில் இந்த அருமைகளைப் பதிய வைத்தார்கள்? அங்ஙனம் இல்லையாயின் நாங்களும் அவர்களைக் [illegible] கூறுவதன் மூலம் பெற்றோர்களை அலட்சியப்படுத்தும் பிள்ளைகளுக்கு வக்காலத்து வாங்க வரவில்லை. ஆயினும் அவர்கள் மட்டிலும் பல பிரச்சினைகள் உண்டென்பதையே சுட்டி நிற்கின்றது.

வருமானப் பற்றாக்குறை, குடும்பச் சுமைகளின் நிமித்தமாக மத்திய கிழக்கு மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்றால் கூடிய வருவாயீட்டுவதன் மூலம் பெற்றோர்களையும் அத்துடன் தமது குடும்பத்தையும் வளமாக வைத்திருக்கலாம் என நாடு கடந்து சென்ற பலர் ஏமாற்றப்பட்டும் அவமானத்துக்குள்ளாகியும் எதிர்பார்த்தபடி போதிய வருமானம் கிடைக்காமலும் ஏமாற்றமடைந்த நிலையில் உள்ளனர். எனவே, அவர்கள் விரும்பியவாறு பெற்றோர்களுக்கோ ஏனையவர்களுக்கோ உதவி புரிய இயலாது இருக்கலாம்.

அதைவிட எமது பெரும்பாலான பெற்றோர்களிடையே ஓர் பாரம்பரியமான போக்கு ஒன்று பொதுவாகவே குடிகொண்டு உள்ளது. தமது பிள்ளைகள் திருமணமாகிய பின்னரும் கூட தமது கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருக்க வேண்டுமென்பதே அதுவாகும். அத்துடன் நின்றுவிடாது தமது பிள்ளைகளின் இளம் குடும்பங்களின் சிறுசிறு பூசல்கள் இடையே அனாவசியமாகத் தலையீடு செய்வதும் வழக்கமாகிவிட்டது. தமது மருமகனோ அன்றி மருமகளோ தமது விருப்பிற்கேற்ப நடக்க வேண்டுமெனவே அதிகமான வயதான பெற்றோர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. அவ்வித தலையீடுகளின் காரணமாக பெற்றோர்கள், மற்றும் பிள்ளைகளின் குடும்பங்களுக்கிடையில் கசப்புணர்வுகள் தோன்றுகின்றன. ஒரு சிலர் அதனைக் காலப்போக்கில் மறந்து விடுகின்றனர். சிலரோ அதனை ஒரு வைராக்கியமாகவே எடுத்துக் கொள்கின்றனர்.

எது எப்படியிருப்பினும் முதியோர்களை பிள்ளைகளே மதித்து அவர்களைப் பேணிப்பாதுகாத்தல் வேண்டும். தவறின் இன்று முதியவர் மட்டில் நாம் செய்யும் தவறை வருங்காலத்தில் இன்றைய இளம் சமுதாயம் மூப்படையும் தருணத்தில் எம்மவர் மட்டிலும் அதே தவறினைச் செய்யும் வாய்ப்புண்டு என்பதை மறந்து விடலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கலவரமூட்ட எஸ்.எம்.எஸ்

## பாக்கிஸ்தானின் முயற்சி தோல்வி!

இந்தியாவிடம் பல வழிகளிலும் தோற்றுப் போன பாகிஸ்தான் புதிய வழிமுறைகள் மூலம் இந்தியாவை பழிதீர்க்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இந்தவகையில் கடந்த மாதம் அஸாமில் நடந்த கலவரங்களை வைத்து இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் தொழில் புரியும் ஆசாமியர்களைத் தாக்குவோம் என பயங்கரவாதிகள் பாணியில் குறுஞ் செய்திகளை தொலைபேசி மூலம் அனுப்பி பெரும் குழப்பம் ஏற்படுத்தியது பாகிஸ்தானின் உளவுத்துறையே என்ற செய்தி இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் பெரியது அஸாம் ஆகும். நிறைந்த மழை வீழ்ச்சியிருந்த போதும் கல்வி அறிவில் மிகவும் பின் தங்கியது.

மேலும், அஸாம் முக்கிய வியாபார நகர்களை கொண்ட மாநிலமும் அல்ல. துறைமுகம், விமான நிலையம் என்பனவும் பெரிதாகக் கிடையாது. இதனால் மும்பை, சென்னை, பெங்களூர், ஹைதராபாத் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த பிற மாநிலத் தலைநகர்களில் அஸாம் இளைஞர்களும் யுவதிகளும் வேலைதேடிச் செல்வது வழக்கமாகும். உதாரணமாக சென்னை, பெங்களூர் முதலிய நகர்களில் ஹோட்டல்கள், விடுதிகளில் சுப்பரவு பணி, 'ரூம் போய்' பணிகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் அசாமிய இளைஞர்களே.

இதற்கிடையே அஸாம் மாநிலத்தில் பங்களாதேஷுடனான எல்லையினூடாக பங்களாதேஷ் முஸ்லிம்கள் பெருமளவுக்கு அஸாம் மாநிலத்தினுள் புகுந்து குடியேறி வருகின்றனர். 1970-1980களிலேயே இது பெரும் பிரச்சினையாக இந்திய அரசியல்வாதிகளால் அடையாளம் காணப்பட்டது. இதற்கு தீர்வாக பங்களாதேஷுடனான எல்லையை மூடுவது உள்ளிட்ட பல தீர்வுகளை ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது கூட ஆராய்ந்து வந்தமை குறிப்பிடப்பட்டது. எனினும் தீர்க்கமான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அஸாம் மாநிலத்தில் ஏற்கனவே பூர்வீகமாக வாழ்ந்து வந்த அஸாமிய மொழிபேசும் இந்துக்களான இந்தியக் குடிமக்களும் சிறுபான்மையினராக இருந்துவந்த அஸாமிய முஸ்லிம்களும் விரோதமின்றி ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தது வரலாறு. ஆனால் பங்களாதேஷ் முஸ்லிம்கள் வருகை அதிகரித்ததால் பல அஸாமிய மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக மாறும் நிலை ஏற்பட்டது. இவர்கள் பூர்வீக அஸாமிய முஸ்லிம்களை மணமுடித்து இந்தியக் குடியுரிமை, வாக்குரிமை முதலியவற்றையும் பெற்றுவிட்டனர். இதனால் இந்துக்களான அஸாமியர் முஸ்லிம்களை விரோதமாகப் பார்க்கும் நிலை படிப்படியாக தோன்றியது. இதற்கு தூபமிடும் வகையில் பிஜேபி முதலிய இந்துத்துவ கட்சிகளும் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வை தூண்டிவிடலாயின. இதுதவிர அஸாமியர்களிலேயே பின்தங்கிய போடோ இனத்தவர் தனிமாநிலம் கோரி போராடி வருவதும் இந்திய மத்திய அரசுக்கு பெரும் தலைவலியாக இருந்துள்ளது. சீனாவின் மறைமுக ஆயுத உதவியும் இவர்களுக்கு இருந்து வருவது மற்றொரு பிரச்சினையாகும்.

இந்தப் பின்னணியில் கடந்த மாதம் இரு இனப்பிரிவினரிடையே கொக்ராஜர் மாவட்டத்தில் கலவரம் மூள, அது கடைசியில் இந்து - முஸ்லிம் கலவரமாக பரிணமிக்க பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. சொத்துக்கள் எரிக்கப்பட்டு பெருந்தொகை மக்கள் அகதிகளாயினர். மத்திய அரசின் படையினர் பெருந்தொகையில் அனுப்பப்பட்ட பின்பே நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டில் வந்தது. ஆனால் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அஸாமிய முஸ்லிம்களுக்கு ஆதரவாக, அஸாமிய இந்துக்கள் கொல்லப்படுவர் என்பதான குறுஞ் செய்திகளை பாகிஸ்தான் உளவுத்துறை பரவலாக இந்தியாவுக்கு அனுப்பியது. இதனால் கலவரமடைந்த அஸாமிய இளைஞர்கள் சென்னை, பெங்களூர், மும்பை முதலிய நகரங்களிலிருந்து சொந்த ஊருக்கு திரும்ப முயன்றதால் ரயில்களில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டது. இது தேவையற்ற பீதி என்று கர்நாடக, தமிழக முதல்வர்கள் உறுதியளித்தும் நிலைமை சீரடையவில்லை. மத்திய உளவுத்துறை இது பற்றி சரியாக விசாரிக்க உடனே களமிறங்காததால் குறுஞ்செய்திகளின் சூத்திரதாரி யார் என்பது வெளிப்படுத்தப்படவில்லை. கிட்டத்தட்ட ஒரு வாரம் சென்ற பின்பே இது பாகிஸ்தானியர்களின் கைங்கரியம் என்பது தெளிவாயிற்று. அரசும் இதுபற்றி பகிரங்க அறிவிப்புகளை வெளியிட்டது. மேலும் சென்னை முதலிய நகர்களில் அஸாமியர்களுக்கு எதிராக ஒரு சிறு வன்முறை கூட நடக்கவும் இல்லை. வீண் வதந்தி இது என்பதை புரிந்த அஸாமியர் மீண்டும் தத்தம் வேலைகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர். இதுபோன்ற உளவுத்துறை யுத்தத்தில் பாகிஸ்தான் ஈடுபடும் என்பது இந்திய மத்திய உளவுத்துறைக்கு தெரியாது போனது எப்படி என இன்று எதிர்க்கட்சிகளை கேள்வி எழுப்பத் தொடங்கி உள்ளன.

உளவுத்துறையின் தோல்வியே முக்கிய காரணம் என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரியும் உண்மையாகும். பாகிஸ்தானைப் பொறுத்தவரை இந்தியாவினை விட பல வகையிலும் பின்தங்கிய தோற்றுப்போன நிலையிலேயே அது உள்ளது. 1980களின் அமெரிக்க சோவியத் பனிப்போர் யுகத்தின் போது அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக சகல ஆதாரித்தனங்களுடனும் மேற்குலகின் இனிய நண்பனாக விளங்கிய பாகிஸ்தான் தலிபானின் அட்டகாசம் மற்றும் 11/09/2001 அமெரிக்க தாக்குதல் சம்பவத்திற்குப் பின் இன்று அமெரிக்காவாலும் மேற்குலகாலும் வெறுக்கப்பட்ட சக்தியாக மாறிவிட்டது. வெளிநாட்டு முதலீடுகள் கிட்டத்தட்ட பாகிஸ்தானில் பூஜ்யம் என்ற நிலைக்கு வந்துவிட்டன. ஒரு காலத்தில் ஆங்கில மருந்து உற்பத்தி செய்யும் கம்பனிகள் பாகிஸ்தானில் கொடிகட்டிப் பறந்தன. இந்தியாவினதும் பாகிஸ்தானினதும் மருந்துக் கம்பனிகள் ஒன்றுக்கொன்று சரிசமனாக போட்டியிட்டு வியாபாரம் செய்து வந்தன. இன்றோ பாகிஸ்தானில் இந்தக் கம்பனிகள் இழுத்து மூடப்பட்டுவிட்டன. ஏனைய தொழில்துறைகளும் முடங்கிவிட்டன. தலிபான்களின் கப்பம், கொலைகள் முதலியனவே இதற்கு பிரதான காரணமாயின. கராச்சி நகரில்தான் பெரும்பாலான தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. துறைமுக நகராக கராச்சி விளங்கியதும் மத்திய கிழக்குக்கும் தூரகிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையில் மையத்தில் அமைந்ததும் கராச்சி துறைமுகத்திற்கு வாய்ப்பாக அமைந்திருந்தது. இன்று தலிபான்கள் போடும் ஆட்டத்தினால் கராச்சி நகரம் கிட்டத்தட்ட வெறிச்சோடி, பேய்களின் நகரம் போல காட்சியளிக்கிறது. மருத்துவர்களிடம் லட்சக் கணக்கில் கப்பம் அறவிடுவதும் மறுத்தால் கொலை செய்வதுமாக இருந்ததால் பெரும்பாலான மருத்துவர்கள் கராச்சியை காலி செய்துவிட்டு லாகூர், இஸ்லாமாபாத் முதலிய நகர்களுக்கு புலம்பெயர்ந்து விட்டனர். ஏனைய தொழில் செய்பவர்களும் இவ்வாறே தலிபான் தொல்லையால் வெளியேறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் கிரிக்கெட், ஹொக்கி முதலான விளையாட்டுக்களில் ஈடிணையற்ற அசகாய சூரர்களாக விளங்கிய பாகிஸ்தானியர்கள் அதன் மூலமாகவும் கணிசமான வெளிநாட்டு வருமானத்தை ஈட்டி வந்தனர். இன்று அதுவும் மிகவும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. 2008ல் இலங்கை அணி பாகிஸ்தானில் கிரிக்கட் விளையாட சென்றிருந்தபோது அவர்களை குறிவைத்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் மயிரிழையில் இலங்கை வீரர்கள் உயிர்தப்பி நாடு திரும்பினர். அதன்பிறகு 4 வருடங்களாக எந்த வெளிநாட்டு அணியும் பாகிஸ்தானில் சென்று விளையாட மறுத்துவருகிறது. இலங்கை அணி மீதான தாக்குதல் மறக்கப்பட்டு ஓரளவு நிலைமை வழமைக்கு திரும்பி வருகையில் இந்தியாவுக்கு வந்து கிரிக்கட் விளையாட பாகிஸ்தான் அணிக்கு அழைப்பு விடுக்க இந்திய இணங்கிய நேரம் 2008 நவம்பரில் மும்பை நகர் மீதான தீவிரவாத தாக்குதல் நடந்தது. அதில் பாகிஸ்தான் தொடர்பை சுட்டிக்காட்டிய இந்தியா இருந்த எச்சசொச்ச தொடர்புகளையுமே பாகிஸ்தான் கிரிக்கட் சபையுடன் துண்டித்துக் கொண்டது. இந்திய கிரிக்கட் சபை IPL, உலக கிண்ணம் என விதவிதமான போட்டிகளை அற்புதமாக நடத்தி பில்லியன் கணக்கில் வருமானம் சேர்த்துள்ளது. IPL போட்டிகளின் முதல் வருடத்தில் பாகிஸ்தான் வீரர்களை சேர்ந்த இந்திய கிரிக்கட் சபை இரண்டாவது வருடத்தில் மும்பை தாக்குதலால் பாகிஸ்தான் வீரர்களை சேர்க்காது விட்டுவிட்டது. உண்மையிலேயே உலகத்தரம் வாய்ந்த கிரிக்கட் வீரர்கள் பாகிஸ்தானிய அணியிலுள்ளனர். ஆனால் அந்நாட்டின் அரசியலும் பயங்கரவாதமும் அவர்களுக்கான வாய்ப்புகளை கிடப்பில் போட வைத்துள்ளன.




வருமானமின்றி தவிக்கும் பாகிஸ்தான் கிரிக்கட் வீரர்கள் வெளிநாடுகளில் விளையாட சிறிய வாய்ப்பு கிடைத்தாலும் வருமானத்தை நாடிச் சூதாடி சிறைசெல்லும் அவலமும் நேர்ந்துள்ளது. தென்னாபிரிக்க வெள்ளை நிறவெறியரின் நடத்தையால் அந்நாட்டு வீரர்கள் தடை செய்யப்பட்டது போல் இன்று பாகிஸ்தான் வீரர்கள் துன்பம் அனுபவிக்கின்றனர். இந்தியாவை வீழ்த்த நினைக்கும் பாகிஸ்தானியரின் பரிதாபநிலை இதுவாகும். இயலாக்கட்டமாக குறுஞ்செய்தி மூலம் அஸாமில் கலவரமூட்ட முயன்று அதுவுமே பலிப்பான மாகிவிட்டது. பயங்கரவாதத்தை விட்டு இந்தியா போன்று முழு ஜனநாயகத்திற்கு திரும்பாதவரை தோற்றுப்போன தேசம் (Failed State) என்ற பெயரிலிருந்து பாகிஸ்தான் தப்ப முடியாது என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை



# பலி

**வ. கிருஷ்ணமூர்த்தி- மிருசுவில்.**

**மா**லை மயங்கிக் கொண்டிருந்தது. சூரியன் பரந்த வயல்வெளிகளின் எல்லையோரம் நின்று வடலிக் கூடலுக்குள் விழுந்து கொண்டிருந்தான். மேலைத் திசையெங்கும் பொன்மஞ்சளும் செம்மஞ்சளுமாக ஜொலித்துக் கொண்டிருந்தன மேகங்கள்.

பருத்து நாலாபுறமும் வேர்கள் நிலத்தின் மேல் தெரிய காற்றில் அசைகின்ற விழுதுகளோடு குடைபரப்பி நின்றது அந்த ஆலமரம். கோயில் ஆலமரம்.

ஆரவாரமின்றி அமைதியாக இருந்த அவ்விடத்தில் அரவங்கள் கேட்டன. சற்றைக்கெல்லாம் நாலாபுறமிருந்தும் மக்கள் சேரத் தொடங்கினர். முகம் தெரியா மம்மல் இருட்டு ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வோர் விளக்கு.

சேவலோ, கோழியோ, கடாவோ ஏதோவொன்று இருந்தது. அத்தனையும் அன்றைய நேர்த்திப் பலிக்கான விலங்குகள். நான் வீட்டிலிருந்து அந்த வேள்வியைப் பார்க்க வந்திருந்தேன். காலில் கட்டிய கயிற்றுடன் ஆலம் வேரொன்றில் பிணைக்கப்பட்டிருந்தது ஒரு கோழி. இப்போது அதனைப் போலச் சுற்றி ஏராளமான சேவல்களும் கோழிகளும் கட்டப்பட்டிருந்தன.

கறுப்பு நிற கடா ஒன்று கதறிக் கொண்டிருந்தது. சும்மா சொல்லக் கூடாது 'பெற்றோல் மக்ஸ்' வெளிச்சத்தில் அந்த விலங்குகளின் அழகையும் அசைவையும் பார்த்து ஆச்சரியப்பட்டேன். ஆண்டவன் படைப்பின் அற்புதம் அவை. அங்கே கட்டப்பட்டிருந்த கோழிக்கு உடல் முழுவதும் புள்ளி இறகுகளும் மயில் போன்ற நீல நிறத்தில் சிவப்பேறிய செட்டை வால் இறகுகளும் இயற்கையின் சிறப்பு. இதில் எனக்கு ஏகப்பட்ட பெருமை மனிதனாகிய நான் குண்டாக அழகாக நெஞ்சை நிமிர்த்தி அகங்காரமாக நின்றேன். சற்றுத் தொலைவில் என்னை ஓரக்கண் பார்வையால் அளந்தவாறு நின்றது ஓர் சிவப்பு நிறச் சேவல்.

அப்போது காற்சலங்கையின் சிணுங்கல் நெருங்கி வர ஒதுங்கிக் கொண்டோம். ஓடிவந்து சின்னப் பெண் குழந்தை ஒன்று சேவலின் அருகில் சென்றது. அதனைத் தொட்டது. எந்தவிதமான வெருட்சியும் இன்றி நின்றது சேவல். திடீரென அதன் கழுத்தைக் கட்டிக் கொண்ட குழந்தை 'சிவப்பா எப்படா வந்தனி' என அதனைக் கொஞ்சிவிட்டு ஓடியது. சிவப்பன் சிவப்பன்தான். இரத்தச் சிவப்பில் கொண்டை. கண்டம் உடல் முழுவதும் வர்ணஜாலம் காட்டுகின்ற சிவப்புத் தோகை-வளைந்து நீண்டு தொங்குகின்ற இடத்திற்கிடம் சிவப்பின் வெவ்வேறு பரிமாணங்களைக் காட்டுகின்ற வாற் சிறகுகள் சிவப்பன் சிவப்பன் தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சிவப்பன் என்னருகிலேயே வந்து நின்றது. மக்கள் கூடி விட்டார்கள். எங்கும் மனிதத் தலைகள் பேச்சொலி, சிரிப்பு, கும்மாளம் பேரிரைச்சலாய் இருந்தது.

முன்னால் ஒரு சிறுகோயில். சிறிது தொலைவில் ஆலமரம். அதற்கும் அப்பால் பலிபீடம் எனப்படும் பெருங்கல். சில சூலங்கள்- அதனைச் சூழ காரையும் சூரையும் பின்னிப் பிணைந்த அடர்ந்த பற்றை. பின்னணியில் கரவணை, கொக்கட்டி வேம்பு, நாவல் மரங்களின் கூடல். பின்னால் உயர்ந்த பனைகள் ஓங்காரமாய் ஆடிக் காற்றில் ஓலைத் தலைவிரித்து பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தன.

வந்தவர்களில் காதுகள், கழுத்துகள் கைகளில் மினுமினுப்போடு கசங்காத ஆடைகளும் மூக்கைத் துளைக்கும் வாசனையோடும் ஒரு கூட்டம். தாங்கள் தாங்கள் பலிகளைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன. இவர்கள் ஆலமரத்துக்கும் கோயிலுக்கும் இடையில் நின்றுகொண்டனர். காதிலும் மூக்கிலும் வெற்றுத் துளைகளோடு கசங்கிய ஆடையும் பஞ்சடைந்த கண்ணுமாக இன்னொரு கூட்டம் ஆலமரத்திற்கும் பலிபீடத்திற்கும் இடையில் நின்றது.

பேரோசையோடு பறை முழங்கத் தொடங்கியது. "வளந்து நேரப் போகிலம்" சுத்தியிருந்தவர்கள் பேசிக் கொண்டனர். நிலத்தில் வரிசையாக அடுப்புகள் என்ற பெயரில் மிடாக்குகளைத் தோண்டினார்கள்.

"பூசாரி வெளிக்கிட்டிட்டார்" யாரோ சொல்கிறார்கள். அரோகரா ஓசை வானைப் பிளக்கிறது. எட்டிப் பார்க்கிறேன். தாறுபாய்ச்சிக் கட்டிய பஞ்சகச்சம் வேட்டி. உடலெல்லாம் திருநீற்றுக் கோடுகள், இரண்டு கைகளில் ஏந்தியவாறு பெரியதொரு மண் பானை, அதிலும் திருநீறு, சந்தனம், குங்குமம், வெற்றிலை, இஞ்சி, மஞ்சள் இலை எல்லாம் சாற்றப்பட்டிருந்தது.

மேளகாரனின் தாளத்திற்கேற்ப பானை எறிந்து எறிந்து ஏந்தப்படுகிறது. மக்கள் பரவசத்தோடு பார்த்திருக்க பூசாரி ஓர் கூத்தே ஆடிவிட்டான். பானை அடுப்பில் வைக்கப்படுகிறது. பூசாரி மயங்கிச் சரிகிறான். தண்ணீர் தெளித்து அழைத்துச் செல்லப்பட்ட போது பார்க்கிறேன். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பானைகளில் பொங்கல் தொடங்கியிருந்தது. அவரவர் பானைக்கு விறகிட்டு அவரவரே எரித்தனர். புகை வானைத் தொட்டது. மூச்செடுக்க முடியாது முக்குளிக்க வைத்தது.

நேரம் விடிகாலையை நெருங்குகிறது. பானைகள் பொங்கலால் நிறைந்திருந்தது. பொற்சிறகை இரண்டு தட்டுக் தட்டி கழுத்தை வளைத்து குரலெடுத்துக் கூவினான் சிவப்பன். 'சிம்மக் குரல்' நாதப் பிரம்மமாய் ஒவ்வொருவர் காதிலும் போய் விழுந்தது. அத்தனை சேவல்களும் பொறாமையோடு பார்த்துக் கொண்டன.

"படையலைத் தொடங்குங்கோ" பூசாரி கட்டளையிட்டான். பொங்கலும் பழவகைகளும் பலகாரங்களும் தலைவாழை இலைகளில் கோயிலுக்குள்ளும் பலிபீடத்திலும் படை பரவப்பட்டது. வாசனை மூக்கைத் துளைத்தது. நாவில் எச்சிலூறியது. நடக்கப் போகிற பயங்கரத்தை அறியாது சிவப்பன் சேவல் அழகுகாட்டிக் குறுகுறுத்துக் கொண்டிருந்தான்.

பூசை தொடங்கியது. மணி ஒலித்தது. பாவனைகளோடு தெய்வங்களிற்கு பூச்சொரியப்பட்டது.

[illegible] முன்னால் கண்மூடி, கைகூப்பி இறை தியானத்திலிருந்தான் பூசாரி.

பறைமேள ஒலி கணத்துக்குக் கணம் அதிகமாகி பக்கத்தில் வயல் வெளிகளுக்கிடையே இருந்து பற்றைகளிலும் பனங்கூடலிலும் எதிரொலித்தது.

உடலை அசைத்து கைகளைப் பிசைந்து முக்கி முனகி ஒற்றைக் கால் துள்ளலில் எம்மைநோக்கி வந்தான் பூசாரி. அவன் நீட்டிய கையில் நீர்விட்டான் ஒருவன். அதனை சிவப்பன் மீது தெளித்ததும் சிவப்பன் கட்டில் இருந்து அவிழ்க்கப்பட்டான். மீண்டும் கையில் தண்ணீர் வாங்கி வேறோர் சிறிய கோழிக்குத் தெளித்து எடுத்துக் கொண்டான். எனது எண்ணத்தில் அந்தப் பிராணிகள் மீதெழுந்த அனுதாபத்தால் மனம் தளர்ந்து போனேன். சிவப்பனை கையில் வாங்கிய பூசாரி அதன் கழுத்தை வாயால் கௌவியவாறே துள்ளித் துள்ளி ஆடினான். குதித்துக் குதித்து வெறிகொண்டவன் போல ஆடினான். சிவப்பன் வலியால் துடித்தான். என்கண்கள் குளமாகின. அக்காட்சி என் உள்ளத்தை வருத்தியது.

ஊரே கூடி நின்று வேடிக்கை பார்த்தது. பலிபீடத்தின் முன்னால் சிவப்பன் கழுத்து அறுக்கப்பட்டது. தலையில் இருந்து வழிந்த இரத்தம் பொங்கலின் மீது சொட்டிக் கொண்டிருக்க தலையிழந்த சிவப்பன் தோலுக்கு வெளியே இரத்தம் தோய்ந்த இறைச்சித் தலையை நீட்டி, பறந்து, சுருண்டு இறுதியில் இறந்து போனது. சிறிதுதூரத்தில் கோழியின் உடல் கிடந்தது. இவற்றைக் கட்டுகிறவரும் மேளகாரரும் ஆளுக்கொன்றாகத் தூக்கிக் கொண்டனர்.

ஏலம் கூறுகிற நேரம் வந்தது. வந்த விலங்குகளை ஏலத்தில் விற்று கோயிலுக்கு நிதி சேகரிப்பார்கள். சேவல்கள் ஒவ்வொன்றாக விற்கப்பட்டன. கோழியில் முதலில் ஒன்றை எடுத்துக் கூவத் தொடங்கினர். பூசாரி குறைந்த விலை கேட்டதும் மற்றவர் ஒதுங்கிக் கொண்டனர். பூசாரியின் கையில் அதனைக் கொடுத்தான் ஏலக்காரனின் பிடியில் கோழியின் உடல் முழுவதும் நடுங்கியதாகத் தெரிந்தது. இவை நடந்து சில நாட்களின் பின் பூசாரியின் மகள் புதுச்சட்டையோடு நின்றாள். அது கழுத்து வெட்டப்பட்ட அந்த கோழியின் புள்ளிகளோடு தைத்த சட்டை.

திடீரென எழுந்த சத்தத்தைத் தொடர்ந்து எங்கும் புகைமயம். அயலில் பேரோசைகள் கேட்கின்றன. ஊரவர்கள் எல்லாம் ஓடுகிறார்கள்.

ஸ்ஸ்....! கூ....! டொம்! ஓசை தொடர்கிறது. அருகில் சத்தங்கள் கேட்கின்றன. வீட்டைப் பார்க்கிறேன். வீட்டைக் காணவில்லை. பயத்துடன் இடிந்த சுவர்களுக்குள் பதுங்கிக் கொள்கிறேன். அங்கே தலையற்று கழுத்து மட்டும் தெரியத் துடித்துக் கொண்டிருந்தான் பூசாரி. வீட்டின் மேல் விழுந்த செல் அவனை துண்டாடி விட்டது.

தலையைத் தேடுகிறார்கள். கவிழ்ந்திருந்த பானைச் சோற்றின் மீது இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது பூசாரியின் தலை.

ஏனோ எனக்கு அந்தச் சிவப்புச் சேவலின் நினைப்பு வருகின்றது. அருகில் பார்க்கிறேன் பலரின் உயிரற்ற உடலம் தலை அற்றுக் கிடக்கின்றன. கண்களில் நீர் சொரிகிறது. எல்லா உயிர்களுக்காகவும் பிரார்த்திக்கிறது மனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப்புனல்



## நிஜங்களின் நிழல்களை நினைவிருத்தியபடி!

கடவுளைக் காணாவிட்டாலும் — ஒருநாளில்
கண்கள் பார்ப்பது என்தோழிமுகம்
கடுப்பாக பேசினாலும் — என்றும்
கரையாத பாசம் அவளிடம்.

ஆயிரம் ஜென்மம் ஆனாலும்
மாறாது என் பாசம்
சின்னச் சின்ன சண்டைகள் — இருப்பினும்
சிரிப்பதோ வானத்தை தொடும் வரை.

எடுப்பாக வெளிக்கிடினும் — அவள்
என்னைவும் துரோகம் செய்யாள்.
என் பிரிவுக்கோ இருப்பது ஒருநாள் — என்றாலும்
என்மனதோ விடை கொடுக்கவில்லை.

பூப்போன்ற அவள் புன்னகையில் — நான்
பூரித்துப்போவேன் கவலையின்றி
நகமும் சதையும் போல — தினமும்
நாம் இருந்தோம் நட்பு எனும் வலைக்குள்.

பாசத்தை சுமந்து போகும் — நண்பியை
பலமறித்து அனுப்பும் நிலை,
பாதியிலே தனியாக அன்புக்காய்
பரிதவிக்குதடி என் உள்ளம்.

சி.சுகன்யா
திராவைவில் சிசொளவ.

## இன்னமும் துடிக்கும் மனம்



வற்றிப் போன நதி
மீண்டு வந்து
கரையை எண்ணி
வருந்துவதில்லை.

உதிர்ந்து போன பூ
கை விட்ட
காம்பை எண்ணி
கண்ணீர் விடுவதில்லை.

இறந்து போன கவி
இருந்து போன
இதயத்தை எண்ணி
இரங்குவதில்லை.

அழிந்து போன வானவில்
கலைந்து போன
வண்ணம் எண்ணி
கலங்குவதில்லை.

வீழ்ந்து போன நட்சத்திரம்
மீண்டு வந்து
வானம் எண்ணி
விம்முவதில்லை.

இறந்து போன
என் காலம் மட்டும்
உன்னை எண்ணி
உருகுகிறது.

உயிர் உருவப்பட்ட
என் உடல் மட்டும்
உன்னை எண்ணி
துடிக்கிறது.

என்னைக் கடந்து போன
உன் காதல் மட்டும்
என் மொத்தக் காலத்தையும்
சிறை செய்து சென்றது.

என்.அகநிகா.

## உண்மைகள் சில



உறவு
உன்னத மானது.
பிரிவு
துயர மானது!

இழப்பு
ஈடு செய்ய முடியாதது.
இன்பம்
மகிழ்ச்சி யானது!

மரணம்
நிச்சய மானது.
மானம்
அவசிய மானது!

காதல்
புனித மானது
காமம்
எல்லை மீறுவது!

ஆசை
அடங்காதது
ஆணவம்
பொல்லாதது!

கவிக்குயிலன்
[illegible]

## தேர்தல் மாயாஜாலம்



நிதியில்லையென்று நிறுத்திய
நீண்ட நாள் திட்டங்கள்
துரிதமாக செயல்படும்
இதமான சேதி செவியில்
இன்பமாக தேனருவியாய் பாய
பிறை கண்ட கரடியாக
மக்கள் பிரதிநிதிகளை
கண்ணுற்று பேந்த பேந்த
விழித்த மக்களின்
கைபேசியில் குறுந்தகவலாய்
தேர்தல் திகதி.

மறக்கப்பட்ட உறவுகள்
மீள் சுழற்சியில் புத்துயிர் பெற
மரண வீடு மங்கள வீடு
பேதமின்றி வருகை தந்து
மனங்களை கவரும்
வித்தையின் வித்தகனாய்
மாறும் பிரதிநிதிகள்.
செப்பனிட பணமில்லையென்ற
தெருவெல்லாம் கொங்கிறீட்
பாதையாகும் பதாகைகள்
பட்டொளி வீசிட வழிபாட்டு தலங்களுக்கு
தனத்தை வாரி வழங்கி
ஆதரவற்றோரை அரவணைத்து
உதவித் தொகை வழங்கிடும்
வைபவத்தில் ஒற்றுமையாக
குழுமிருந்து குதுகலித்திடினும்
விருப்பு வாக்கு வேண்டிடும்
வேளையில் விரிசல் வந்தாலும்
விநோதமாக மக்களை
ஏய்த்து வெற்றி வாகை
சூடி வாக்காளர்களை
மறந்திட செய்திடும் பிரதிநிதிகளின்
மாயாஜால தேர்தல்.

மங்களப் மனோரதன்
கல்முனை - 02.

## என் உயிரானவள்



புன்னகையால்
மனதிலே
ஸ்பரிசம்
தந்தவள்.

கண் நகையால்
என் விழிகளின்
தூக்கம்
பறித்தவள்.

காற்கொலுசால்
செவிகளுக்கு
ஓசை
தந்தவள்.

பாதங்களால்
கல்லூரி
முற்றத்தில்
ஓவியம்
வரைந்தவள்.

கொஞ்சும்
மொழிச்
சொல்லால்
இதயத்தில்
அழியாத
கோலமானவள்.

அ. புன்னகைவர்மன்.

## மண்வாசனை



எம் குடிமைகள் எல்லாம்
பற்றி எரியலாம்
வயல் வெளிகளில்
கணைகள் விளையலாம்
வாய்க்கால்கள் எல்லாம்
குருதி பாயலாம்
ஆல மரங்களில் பிணங்கள்
தொங்கலாம்
விழுதுகள் எங்கும்
பேய்கள் ஆடலாம்
போதி மரத்தில்
புத்தன் முளைக்கலாம்
தாயின் மணிக்கொடி
தீயில் வேகலாம்
வரலாற்று சின்னங்கள்
காணாமல் போகலாம்
ஆனாலும் மாறாது எம்
மண்ணின் வாசனை.
இவ்வரும் சரித்திரங்கள்
மறுக்கலாம் தமிழா
சாதனைகள் மறக்குமா
உன்னை.....

ப்ரியா
கொக்குவில் மேற்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்


05.09.2012 - 11.09.2012

**அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**



மனதிற்கினிய சம்பவங்கள் கூடி வரும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பெரிய நிறுவனத்தில் நிரந்தரமான வேலை அமையும். மாமியார், நாத்தனார் மூலம் மகிழ்ச்சியும், பரிசுகளும் கிடைக்கும். அலைச்சல், டென்ஷன், செலவுகள் ஏற்பட்டு விலகும். கடல் கடந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வீர்கள். குழந்தைகள் உடல் நலத்தில் கவனம் தேவை. சிறிய மருத்துவ செலவுகள் வரலாம்.

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**




உங்களின் ஆரோக்கியம் கூடும். குழப்பங்கள், தடுமாற்றங்கள் நீங்கி தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். வீண் விவாதங்கள் நீங்கும். கணவன்-மனைவிக்குள் இருந்த கசப்புணர்வுகள் நீங்கும். ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசுவீர்கள். ஓரளவு பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**




குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். உயர்கல்வி, போட்டித் தேர்வு, பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். அழகு, இளமை கூடும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்து கொள்வார்கள். நெருங்கிய உறவினர் ஒருவருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். வேலைச்சுமை அதிகரிக்கும்.

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**



நகைச்சுவையாகப் பேசுவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். கல்யாணம், காது குத்து போன்ற சுப நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் கிடைக்கும். சகோதரங்களால் பயனடைவீர்கள். பொறுமையுடன் செயல்பட்டுப் பாருங்கள். கன்னிப் பெண்களே! புதிய நண்பர்களால் உற்சாகமடைவீர்கள்.

**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**




தொலை நோக்குச் சிந்தனையால் சாதிப்பீர்கள். பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். பதவிகளும் கிடைக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும். சிலருடன் உரிமையுடன் பேசாதீர்கள். அவர்கள் தவறாகப் புரிந்துக் கொள்வார்கள். நெருங்கிய நண்பர்கள், உறவினர்களாக இருந்தாலும் இடைவெளி விட்டு பழகுவது நல்லது.

**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**



ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். அலட்சியமாக இருக்காதீர்கள். வறுத்த, பொரித்த உணவுகள், வாயுப் பதார்த்தங்களைத் தவிர்ப்பது நல்லது. சின்னச் சின்ன காரியமாக இருந்தாலும் கொஞ்சம் தடைப்பட்டு முடியும். பணவரவு அதிகரிக்கும். கல்யாணம் கூடி வரும். உறவினர்கள் உங்களின் பெருந்தன்மையைப் புரிந்து கொள்வார்கள்.

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**




வேலைச்சுமை இருந்தாலும் சமாளிப்பீர்கள். முகம் மலரும். தெளிவடைவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள், பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்து கொள்வார்கள். தந்தைவழி உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். செலவீனங்கள், தூக்கமின்மை, கனவுத் தொல்லை வரும். பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரம்மை

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**




எந்தக் காரியமாக இருந்தாலும் இரண்டாவது, மூன்றாவது முயற்சியில் தான் முடிவடைகிறது என்றெல்லாம் கொஞ்சம் ஆதங்கப்படுவீர்கள். நல்லது நடக்கும். எதிர்ப்புகள் நீங்கும். பல சூழ்நிலைகள் உங்களுக்கு ஆதரவாக அமையும். தள்ளிப்போன திருமணம் முடியும். பணவரவு இருக்கும். மனைவியின் ஆரோக்கியம் சீராகும்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**



சோர்வு, களைப்பு நீங்கி உற்சாகமடைவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். உங்களை எல்லோரும் அடையாளம் கண்டு கொள்வார்கள். மகிழ்ச்சிகரமான சம்பவங்களும் நிகழும். பணவரவு திருப்தி தரும். மனைவி கொஞ்சம் அலுத்து, சலித்துக் கொள்வார். அவருடன் கொஞ்சம் நேரம் ஒதுக்கி பேசுவது நல்லது.

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**




போராட்டங்களில் வெற்றி கிடைக்கும். தைரியம் பிறக்கும். சகோதர வகையில் நன்மை உண்டு. நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பார்கள். தந்தை ஆதரிப்பார். பிள்ளைகள் கடினமாக உழைத்தால் நல்லது என நினைப்பீர்கள். உறவினர்களுடன் கருத்து மோதல்கள் வரும். கோபப்பட்டு யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**




கோபம் குறையும். பயம் விலகும். அரைகுறையாக நின்ற பல காரியங்கள் உடனே முடியும். பிள்ளைகளால் இருந்து வந்த பிரச்னைகள் ஓயும். உறவினர், நண்பர்களுடன் சின்ன சின்ன கருத்து மோதல் வந்து போகும். எதிர்பார்த்த பணம் வரும். மகனுக்கு இருந்து வந்த கோபதாபம் குறையும். பாகப்பிரிவினை நல்ல விதத்தில் முடியும்.

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**



எதிலும் ஆர்வமில்லாமல் இருப்பீர்கள். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். ஆன்மீகவாதிகள் உதவுவார்கள். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து கவலைப்படுவீர்கள். சொந்த ஊரில் பொது விஷயங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம். சொத்துப் பிரச்சினைகளை உணர்ச்சிபூர்வமாக அணுக வேண்டாம்.

# யார் முகத்தில் முழித்தேனோ?



என்னைப் பார் யோகம் வரும் என்று கழுதை கூறும் வாசகம் படித்திருப்பீர்கள். காலையில் எழுந்தவுடன் யார் முகத்தில் முழித்தால் யோகம் வரும்? கழுதையா, நரியா, அல்லது கண்ணாடியில் உங்கள் முகமா? சத்குரு என்ன சொல்கிறார் பாருங்கள்...

காலையில் இன்னார் முகத்தில் முதலில் விழித்தேன், அதனால்தான் எதுவும் இன்று சரியாக விளங்கவில்லை என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். அது போன்ற நம்பிக்கையில் ஏதாவது பொருள் இருக்கிறதா?

கிருஷ்ண தேவராயர் ஒருநாள் காலையில் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் அரண்மனை நந்தவனத்தில் உலாவச் சென்றார். பக்கத்து நாட்டு மன்னன் இவர் மேல் போர் தொடுக்கத் திட்டம் தீட்டியிருந்தான். எனவே மிகவும் யோசனையுடன் நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது, தன்னைப் பார்த்துவிட்டு யாரோ அவசரமாக ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டதைப் பார்த்தார். இதைக் கவனித்த கிருஷ்ண தேவராயர், யாரது? என்று சத்தமாகக் கேட்டார்.

உடனே மரத்தின் மறைவிலிருந்து அரண்மனை சலவைத் தொழிலாளி தயங்கித் தயங்கி வெளிவந்தார். "ஓ, காலங்காத்தால உன் முகத்தில விழிச்சிட்டனே, இன்னிக்கு எனக்கு என்னாகப் போகுதோ," என்று உறுமியவாறு அரண்மனைக்கு கலவரமாகத் திரும்பினார்.

அன்று காலை உணவு சாப்பிட்டவுடன் அவருக்கு வயிறு வலி ஏற்பட்டது. அன்று நடந்த முக்கியமான மந்திரிகளின் ஆலோசனைக் கூட்டத்திலும் அவரால் சரியாகப் பங்கு கொள்ளமுடியவில்லை.

அவருடைய கோபம் சலவைத் தொழிலாளி மேல் திரும்பியது. இந்த மாதிரி மோசமான முகம் நம் நாட்டிலேயே இருக்கக்கூடாது என்று சொல்லி அந்த சலவைத் தொழிலாளிக்கு மரண தண்டனை கொடுக்கும்படி உத்தரவிட்டார்.

அந்த சலவைத் தொழிலாளி பதறிப்போய் தெனாலி இராமனிடம் நடந்ததை எல்லாம் கூறினார்.

இது என்ன முட்டாள்தனம் என்று நினைத்து அரண்மனைக்கு சென்றச் தெனாலிராமன் மன்னரைப் பார்த்தவுடனே துணியை எடுத்து முகத்தை மறைத்துக் கொண்டு சென்றார். உடனே மன்னர், "என்ன முகத்தை மூடிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு தெனாலிராமனோ, இல்லை அபசகுனமான முகம் பார்க்கக் கூடாது என்றுதான் நான் முகத்தை மறைத்துக் கொண்டு இருக்கிறேன் என்று சொன்னார். இங்கே எங்கே அபசகுனமான முகம் இருக்கிறது? என்று கேட்டார் மன்னர்.

இல்லை, ஒரு சலவைத் தொழிலாளியைப் பார்த்ததால் உங்களுக்கு வயிற்று வலி வந்துவிட்டது. அவருக்கோ உங்கள் முகம் பார்த்ததால் உயிரே போகப்போகிறது. எது பெரிய அபசகுனமான முகம் பாருங்கள். அதனால்தான் நான் முகத்தை மறைத்துக் கொண்டு போகிறேன் என்று சொன்னார்.

நம் வாழ்க்கையில் நம்மால் எவற்றையெல்லாம் நன்றாக நடத்தி கொள்ளத் தெரியவில்லையோ அதற்கு எல்லாமே இன்னொருவர் மேல் பழி போட வேண்டும் என்னும் ஆசை நமக்கு இருக்கிறது. நம் முகம் மிகவும் மங்களமானதாக இருந்தால் காலையில் எழுந்தவுடன் முதன்முதலில் நம் முகத்தை கண்ணாடியில் பார்த்துக் கொள்ளலாமே.

இந்த மாதிரி முட்டாள்தனத்தை விட்டுவிட்டு, நம் வாழ்க்கையில் நடக்கின்ற நன்மை, தீமை இரண்டுக்குமே நாம் தான் முழுமையான பொறுப்பு என்பதை பார்த்துக் கொள்ளலாமே.

நமக்கு நடந்த தவறுக்கு பிறர் மேலே பழிபோட நினைப்பது மிகவும் மோசமான ஒரு மனநிலை. இந்த மனநிலை தாண்டி வந்தால்தான் ஒவ்வொரு தனிமனிதனும், சமூகமும் முன்னேற்றமாகப் போவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மைச் சம்பவம்



# விமானத்திலிருந்து குதித்த போது...!

■ ஜெகன்

சான்பிரான்சிஸ்கோவுக்கு கிழக்கேயுள்ள அன்ரியோ விமானத்தளத்தில் நண்பிகளான டெபியும், ஜெனும் அத்துடன் டெபியின் கணவனான சுமித்தும் உற்சாக மாக நின்றிருந்தனர்.

டெபி, ஜெனி மற்றும் சுமித் மூவருக்கும் முறையே 30, 28, 32 வயதாகியிருந்தது. சுமித் ஒரு வருடத்திற்கு முன்புதான் டெபியைத் திருமணம் புரிந்திருந்தான்.

சான்கார்லோஸ் உயர்நிலைக் கல்லூரியில் மாண வர்களாக இருந்த காலந்தொட்டு சுமித்துக்கும் டெபிக் கும் இடையில் இருந்த நட்பு அவர்கள் சிக்கோவி லுள்ள கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வரையில் நீடித்து, பின்னர் அதுவே காதலாகப் பரிணமித்து அவர்களைத் தாம்பத்திய வாழ்வில் இணைத்தது.

டெபியும் ஜெனும் ஒரு பிரபல நிறுவனத்தில் நவீன வடிவமைப்பாளர்களாகவும் சுமித் தீயணைப்புப் படைப் பிரிவில் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகவும் பணிபுரி கின்றனர்.

வசந்தகால விடுமுறையை உல்லாசமாகக் கழிப் பதற்கு ஓர் புதுமுறையை மூவரும் கூடித் தீர்மானித்தனர். அப்போது நிலவிய பருவகாலம் பனிச் சறுக்கல், பனி வேட்டையாடுதல், பரசூட் மூலம் விமானத்தில் இருந்து குதித்துத் தரையிறங்கல் போன்ற விளையாட்டுகளுக்கு உரியதாக அமைந்திருந்தது. இவர்கள் பரசூட் மூலம் விமானத்தில் இருந்து குதித்துத் தரையை அடைவது எனத் தீர்மானம் எடுத்தனர். அதன்பொருட்டு செஸ்னா-206 ரக சிறிய விமானமொன்றை வாடகைக்கு அமர்த் தியிருந்தனர்.

அன்றைய தினம் செஸ்னா-206 வெள்ளை நிற விமானம் 2800 அடி உயரத்தில் பறந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தது. விமானத்திலுள் குதிப்பதற்கு ஆயத்த மாகப் பரசூட் அணிந்தவண்ணம் மூவருடன் அவர் களுடன் அறிமுகமான விக்டஷியோ எனும் இளைஞ னும் தயார் நிலையில் இருந்தான்.

விமானத்தில் அவர்களுடன் விமானியும் பரசூட் பாய்ச்சலில் அனுபவம் வாய்ந்த மேற்பார்வையாளரான விக்டரும் இருந்தனர். 2800 அடி உயரத்தில் இருந்து கீழே பார்த்தவர்களுக்கு பனி படர்ந்து, மலைகளின் மத் தியில் பசும்புல்வெளி போன்று தரை தெரிந்தது. அத னுள் 60 அடி வட்டமான இடம் அவர்கள் தரையிறங்க வேண்டிய இலக்கு இடமாக அடையாளப்படுத்திக் காட்டப்பட்டிருந்தது.

நால்வரும் குதிப்பதற்கு ஆயத்தமாக விமானக் கதவின் வாயில் ஓரத்தில் கை, கால்களை வளைத் துக் குனிந்து தயார் நிலையில் நின்றனர். டெபி அரு கில் நின்ற ஜெனைத் தனது முழங்கையால் இடித்து "எனக்கு ஏதாவது நேரிட்டால் உனக்கு எனது செல்லப் பிராணியான நாய் சார்லி தேவையா?" என்று கேட்டாள். ஜெனியின் முகம் இருண்டது. அவளின் உடல் முழுவதும் சிலிர்த்துக் கொண்டது. இதனைக் கண்ணுற்ற டெபி "நான் சும்மா கேலிக்குத் தான் அவ்விதம் சொன்னேன்" என ஜெனை ஆசுவாசப்படுத்தினாள்.

"எல்லோரும் ஆயத்தமா இருங்கள்" மேற்பார்வை யாளர் விக்டர் குரல் கொடுத்தார். நால்வரும் தங்கள் தலைகளை மேலும் கீழுமாக ஆட்டிச் சம்மதத்தைத் தெரிவித்தனர். சுமித் முன்னரும் இவ்விதம் குதித்து அனுபவம் பெற்றவன். ஆதலால் அவனே முதலில் விமானத்திலிருந்து குதித்தான். அவன் குதிக்கையில் டெபி செல்லமாக அவனது கையில் தட்டிக் கொடுத்தாள்.

சுமித் குதித்து 30 விநாடிகளில் பரசூட் விரிந்து கொடுத்து குடையோடு கீழ் நோக்கிச் செல்வதைக் கண்டனர். அவன் குறித்த இலக்கினை அடைந்து சுகமாகத் தரையிறங்கினான். அடுத்ததாக விக்டஷியோ குதித்தான்.

அதனைத் தொடர்ந்து டெபியின் முறை வந்தது. அவள் பார்வையாலேயே ஜெனுக்கு விடை கொடுத்து விட்டுக் கண்களை மூடிய வண்ணம் கீழே குதித்தாள். உடனடியாகவே ஏதோ தவறு நேர்ந்துவிட்டது போல டெபியின் உள்ளுணர்ச்சிக்கு உறுத்தியது. எதிலோ மாட்டிக் கொண்டுவிட்டது போல அவளுக்குத் தோன் றிற்று. அவள் தோளின் மேலாகப் பின்புறமாகப் பார் வையைச் செலுத்தினாள். காற்று உள் புகுந்து விரியத் தொடங்கிய அவளது பரசூட்டின் ஒரு பக்கக் கயிறு விமானத்தின் இறக்கையில் சிக்கிக் கொண்டுவிட்டது புரிந்தது. அது காற்றின் வேகத்தில் சிக்கி முறுக்குப் பட்டு இழுபட்டு பரசூட்டின் ஒரு பகுதியைக் கிழித்த துடன் திடீரென அறுந்தும் விட்டது. இப்பொழுது டெபிக்கும் விமானத்திற்கும் எதுவித தொடர்புமில்லை.

அவள் விண்வெளியினூடாகத் தரையை நோக்கி காற்றின் வேகத்துடன் அரைபட்டுச் சுழன்று கொண்டு கடும்காயம் ஏற்படக் கூடிய வகையில் விழுந்து கொண்டி ருந்தாள். சற்றும் எதிர்பாராமல் டெபிக்கு நேர்ந்ததைக் கண்ட ஜென் "ஐயோ கடவுளே டெபி..." என்றவாறே விமானத்தினுள்ளேயே மூர்ச்சையடைந்தாள். விக்டர் விமானியிடம் "உடனடியாக எங்களைக் கீழே கொண்டுபோ" எனக் கட்டளையிட்டார்.

பரசூட்டின் உதவியுடன் கீழே இறங்குவதாயின் அது ஓர் சீரான வேகத்திலேயே கீழ் நோக்கி அசைந்தாடிய வண்ணம் இறங்கும். ஆனால் டெபியின் நிலைமையோ மோசமானது. பரசூட் கிழிந்து சேதமடைந்ததால் டெபி இப்பொழுது தரையை நோக்கி மணிக்கு 125 மைல் வேகத்தில் விழுந்து கொண்டிருந்தாள். அவள் உயிர் தப்புவதே அரிதி லும் அரிது.

அவள் விண்வெளியினூடாகத் தரையை நோக்கி காற்றின் வேகத்துடன் அடிபட்டுச் சுழன்று கொண்டு கடும்காயம் ஏற்படக் கூடிய வகையில் விழுந்து கொண்டிருந்தாள். சற்றும் எதிர்பாராமல் டெபிக்கு நேர்ந்ததைக் கண்ட ஜென் "ஐயோ கடவுளே டெபி..." என்றவாறே விமானத்தினுள்ளேயே மூர்ச்சையடைந்தாள். விக்டர் விமானியிடம் "உடனடியாக எங்களைக் கீழே கொண்டுபோ" எனக் கட்டளையிட்டார்.

சில விநாடிகளுக்கு முன்னராகத் தரையிறங் கிய சுமித் தனது உடலில் பிணைக்கப்பட்டிருந்த பரசூட்டின் பெல்டுகளை அகற்றிக் கொண்டிருந் தான். அந்நேரத்தில் அவனருகே நின்றிருந்த ஒருவன் மேலே வானத் தைச் சுட்டிக் காட்டியபடி "யாரோ ஒருவர் ஆபத்தில் சிக்கியுள்ளார்" எனக் கத் தினான். உடனே அத் திசை நோக்கி மேலே பார்த்த சுமித்துக்கு ஒரு உருவம் தரையை நோக்கி வெகுவேகமாக வந்து தரையில் மோதி விழுவது பார்வையில் பட்டது. அதிர்ந்து போன வனாக "டெபி... டெபி..." என வீறிட்டு அலறினான்.

டெபியின் உடல் அவன் நின்றிருந்த இடத் திலிருந்து கால்மைல் தூரமளவில் இருக்கும். அவ்விடத்தை நோக்கித் தட்டுத்தடுமாறி விரைந்து சென்றான் சுமித். அவன் அவ்விடத்தை அடைந்த சமயத்தில் எவரோ ஒருவர் குனிந்த நிலையில் டெபி யின் அருகில் நின்று அவள் வாயிலும் கழுத்தைச் சுற்றியும் உள்ள அழுக்குகளையும் புற்களையும் துப் பரவு செய்து கொண்டிருந்தான். டெபி முற்றிலுமாக உணர்வற்ற நிலையில் சடலம் போலக் கிடந்தாள்.

சில கணங்களுக்குள் அம்புலன்ஸ் வாகனத்தில் அன்ரியோவில் உள்ள டெல்ரா மெமோறியல் மருத்துவ மனைக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டாள்.

அங்கு உடனடியாக எடுக்கப்பட்ட எக்ஸ்றே படங் கள் அவளது உடம்பில் உள்ள ஒவ்வொரு எலும்புக ளிலும் முறிவுகள் அல்லது உடைவுகள் ஏற்பட்டிருப் பதைக் காட்டின. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவளது கைகள் இரண்டும் சேதம் எதுவுமின்றித் தப்பியிருந்தன.

அவளது நுரையீரல்கள் சிதைந்திருந்தன. மண்ணீ ரல் கிழிந்திருந்தது. அத்துடன் சிறுநீரகங்கள் மற்றும் தலையிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. சுவாசிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. அவளது சுவாசிப்பை சீராக்குவதற்காக அவளது தொண்டைக் குழாயினுள் ஓர் துவாரத்தை ஏற்படுத்தி அதனுள் சுவாசிக்கும் கருவியை உட்செலுத்தினார்கள் மருத்துவர்கள்.

மருத்துவர்கள் நம்பிக்கையிழந்த நிலையிலேயே இருந்தனர். முயற்சிகள் எதுவும் பயனளிக்காத நிலை யில் அவளது நிலைமை விநாடிக்கு விநாடி பலவீன மடைந்து கொண்டேயிருந்தது. அங்கிருந்த மருத்துவர் கலந்துகூடி ஒரு முடிவை எடுத்தனர். டெபிக்கு உடன டியாக மூளையில் சத்திரசிகிச்சை செய்தாக வேண்டும். அதற்கான வசதியும் நிபுணர்களும் அம்மருத்துவ மனையில் இல்லை.

எனவே, அங்கிருந்து 20 நிமிடங்களில் கொண்டு செல்லக் கூடிய தூரத்தில் சகல வசதிகளுடனும் அமைந்திருந்த ஜோன் மெமோறியல் மருத்துவம னைக்குக் கொண்டு சென்றனர். தாமதமெதுவுமின்றி அங்குள்ள சிறந்த சத்திரசிகிச்சை நிபுணர் குழுவின ரால் டெபிக்குச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனினும் டெபி தொடர்ந்தும் கோமா நிலையிலேயே இருந்தாள்.

"220 அடி மட்டுமே உயரமுடைய சான்பிரான் சிஸ்கோ பாலத்தில் இருந்து இவ்விதம் குதித்த 801 பேரில் 22 பேர்கள் மட்டுமே உயிர் தப்பினார்கள். அந்தவகையில் டெபி இன்னமும் உயிருடன் இருப் பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே. ஏனெனில் டெபி 220 அடியைப் போலக் கிட்டத்தட்ட 13 மடங்குகள் அதிகமான உயரத்திலிருந்து குதித்துள்ளாள்" எனக் கூறி வியந்தனர் மருத்துவ நிபுணர்கள்.

டெபியின் சுவாசம் நிற்கவில்லை. ஆனால் உடம் பில் இயக்கமெதுவும் இன்றி உணர்விழந்த நிலையில் இருந்தாள். அவளின் உடல்நிலை படிப்படியாகச் சீர் கெடத் தொடங்கியது. இரண்டு வாரங்களில் அவளது உடல் எடை 128 இறாத்தல்களில் இருந்து 80 ஆகக் குறைந்தது. அவளது உடலில் சத்தோட்டத்தை அதிக ரிப்பதற்காக அவளது குருதி நாளங்களினூடாக 1500 தொடக்கம் 4000 கலோரிகள் வரையிலான சத்துணவுத் திரவம் ஏற்றப்பட்டது.

எது எப்படியிருந்த போதிலும் ஏக காலத்தில் அவ ளது எலும்பு முறிவுகள் மற்றும் காயங்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் தவறாமல் அளிக்கப்பட்டன. ஆயினும் அவள் கோமா நிலையில் தொடர்ந்தும் இருப்பதனால் மருத்துவர்களால் மேற்கொண்டு எதனையும் செய்ய முடியவில்லை.

உளவியல் நிபுணரான கிறிஸ்ரோபர் "அவளால் இந்நிலையில் எதனையும் பார்த்து அறியமுடியாது. எனினும் காதினால் கேட்டுணரும் ஆற்றல் இருக்கும் சாத்தியம் இருக்கக் கூடும்" எனத் தெரிவித்தார்.

நிலைமையைப் புரிந்து கொண்ட சுமித், டெபியுடன் அன்பு கொண்ட நண்பர்கள் மற்றும் உறவினர்களைத் தினமும் வரவழைத்து அவளருகில் அமர்ந்து அவள் காதில் விழும்படியாக அன்பான வார்த்தைகளை அவ ளுடன் உரையாடும்படியாகப் பார்த்துக் கொண்டான். நாளாந்தம் இந்நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள் ளப்பட்டது. அவளது பெற்றோர், நண்பர்கள், உறவினர் கள் எனப் பலரும் வந்து அன்பு வார்த்தைகளைக் கூறிச் சென்று கொண்டிருந்தனர்.

ஆசையற்றிருந்த அவள் உடலில் சிறிதுசிறிதாக மாற்றங்கள் தென்படத் தொடங்கின. அவளது நண் பியான ஜென் 60கி.மீ. தொலைவிலிருந்து தினமும் டெபியைப் பார்க்க வரத் தவறவேயில்லை.

ஏழுவாரங்கள் வரையில் கோமா நிலையில் கழிந் தது. தாதியொருத்தி டெபியின் அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த வேளையில் யாரோ "சுமித்... சுமித் டார்லிங்" என்றழைப்பது கேட்டுத் திரும்பியவள் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

டெபி தான் அவ்விதம் அழைத்தவள் என்பதை உணர்ந்து கொண்ட தாதி மருத்துவ நிபுணரைத் தாமதியாது சென்று அழைத்துவந்தாள். சுமித்தும் தகவல் அறிந்து மருத்துவமனைக்கு விழுந்தடித்துக் கொண்டு விரைந்து வந்தான்.

மருத்துவமனையில் இருந்து ஏழு வாரங்களின் பின்னர் வெளியேறி உளவியல் நிபுணரிடம் இடையி டையே ஆலோசனைகளையும் அதேசமயத்தில் முறிவு களுக்கான மருத்துவ சிகிச்சைகளையும் கிரமமாகப் பெற்றாள் டெபி.

விபத்து நடந்த நான்கு மாதங்களின் பின்பு டெபி தனது காரினைத் தானே செலுத்தக் கூடிய நிலைமைக் குத் தேறியிருந்தாள். டெபிக்கு உண்மையில் இது ஓர் மறுபிறப்பே என வியக்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருடனும் பேசும்போது, அவர்களுக்குத் தெம்பு தரும்படியாகப் பேசுங்கள். நேர்மையான வாழ்த்து, உற்சாகமூட்டும் உபசார வார்த்தைகள், பிறர் அவர்களைப் பற்றி வெளியிட்ட நல்ல அபிப்பிராயங்கள், உங்கள் நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்துகள் என பிறருக்கு தெம்பு ஊட்ட நீங்கள் சொல்லக் கூடிய விஷயங்கள் ஏராளம் உண்டு.

பிறர் தெம்பு அடையும் வண்ணம் நீங்கள் குறிப்பிடக்கூடிய வித்தியாசமான விஷயங்களைப் பட்டியலிடுங்கள். யாருடனும் எப்பொழுது பேசும் போதும் இந்தப் பட்டியல்கள் உங்கள் கவனத்தில்

# உங்களால் பிறர் உற்சாகமடையட்டும்!

இருக்கட்டும்.

நேரில் பேசும் போது, தொலைபேசியில் பேசும் போது இதைக் கவனத்தில் கொள்ளுங்கள். யாருடன் எப்படிப் பேசினாலும் உங்களால் அவர் உற்சாகம் அடையட்டும்.

சிறிய குழுக்களில் கூடிப் பேசும் போது வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ, நேரிலோ, பொதுப் பிரச்சாரங்கள் புரியும் போதும் இது உங்கள் கவனத்தில் இருக்கட்டும். உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் உற்சாகமுற்றால் அதுவே உங்கள் பேச்சில் கவனத்தை ஏற்படுத்தும். எப்பொழுதும் நன் பேச்சைக் கேட்கும் ரசிகர்களை உற்சாகமூட்டும் பேச்சாளர் விரும்பி எங்கும் அழைக்கப்படுவார்.

பள்ளிக்கூட வகுப்புகளிலும் இதே விதி பொருந்தும். தம் வகுப்புக்கு வரும் மாணவர்களை உற்சாகமூட்டும் ஆசிரியர் பாடம் மட்டும் போதிப்பதில்லை. மனோதிடம், உணர்ச்சிகளை சமனப்படுத்துதல் ஆகிய விஷயங்களையும் கற்றுத் தருகிறார். பாடம் அறிவை மட்டும் வளர்க்கும் உணர்வு நிலை உயர்ந்து மனோதிடம் ஏற்படும் போது ஆளுமையும் கண்ணோட்டமும் சீர்பெறுகின்றன.

வெற்றிலும் முக்கியமானது மனக் கண்ணோட்டம், நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழக வேந்தர் டொக்டர், வோல்டர் ஸ்கொட் கூறுவதைப் போல மனக் கண்ணோட்டங்கள்தாம் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கின்றன. மன வளர்ச்சியோ, மன வளர்ச்சி யின்மையோ அன்று.

தனிப்படவோ, வியாபார ரீதியாகவோ கடிதங்கள் எழுதும் போதும் பெறுபவர் மனம் உற்சாகம் பெறும் படியாக ஏதேனும் எழுதுங்கள்.

மொத்த தகவல் - பல காரணங்களால் ஏமாற்றமானவையாய் இருக்கலாம். ஆனால் கடித இறுதியில் ஒரு புகழ்ச்சி, உற்சாக வரி, நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்துகள் - நேர்மையாய் வெளிப்படுத்துங்கள்.

உங்களால் பிறர் உற்சாகமடையும்படி செய்ய நீங்கள் சிறிது சிந்திக்க வேண்டும். சிறிது நேரம் ஒதுக்க வேண்டும். ஆனால் இது பல மடங்கு பயன் விளைவிக்கும்.

உங்களால் பிறர் மட்டும் கூடுதலாய் உற்சாகம் கொள்ள மாட்டார்கள். நீங்களே நல்லபடியாய் அதை உணர்வீர்கள்.

வாழ்க்கை அவர்களைக் கடிக்கிறது!

பழைய ரோமாபுரியைச் சேர்ந்த வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் புளூடார்க் திசரென்று எரிச்சலுள்ள, ஆத்திரமுள்ள ஒரு நபர் பற்றி எழுதுகிறார்.

அவரது நண்பர்கள் அவரது திடீர் மனமாற்றத்தை விமர்சித்தார்கள். அப்பொழுது அந்த மனிதர் புதிய தரமான காலணி ஒன்றைக் காட்டினார்.

காலணியை அனைவரும் பரிசீலித்தனர். அப்பொழுது அந்த நபர் கேட்டார். 'இந்தக் காலணி நன்கு தயாரிக்கப்பட்டிருக்கிறதா? நல்ல தரமானதா?'

அவரது நண்பர்கள் (விமர்சகர்கள்) அந்தக் காலணி நன்கு செய்யப்பட்டிருக்கிறது; அது மிகுந்த தரமானது, அழகானது என்று ஒப்புக் கொண்டனர்.

அப்பொழுது அந்த நபர் சொன்னார், பார்வைக்கு உயர்ந்த இந்தக் காலணி நான் காலில் அணியும் போது என் காலைக் கடிக்கிறது. கண்ணை பரிச்சல் காரணமாக மாற்றி அசௌகரியம் ஏற்படுத்துகிறது.

வாழ்க்கையும் சமயங்களில் அந்தக் காலணி போன்றதுதான்.

மேலோட்டமாய்ப் பார்க்கும் போது பிறர் வாழ்க்கை நமக்கு ரம்மியமாய், கவர்ச்சிகரமாய் தென்படலாம். ஆனால் வாழ்க்கை அவர்களை எங்கு கடிக்கிறது என்று நாம் உணர்வதில்லை.


நாம் வெளிப் பார்வையில் புரிந்து கொள்ள முடியாது - மூடிய காலகளுக்குள் வலி ஏற்படுவதை.

பிறர் உங்களுக்கு எரிச்சல் மூட்டுகிறார்கள், அவமரியாதையாக நடந்து கொள்கிறார்கள் என்று விமர்சிக்கும் முன்னர்: வாழ்க்கை அவர்களை எங்கே கடிக்கிறது என்று தெரிந்து கொள்ள முயலுங்கள்.

அவர்களை நீங்கள் விமர்சித்தால், கடிந்து கொண்டால், அவர்கள் வலி தீராது மாறாக உங்கள் போக்கு உங்கள் நிலையை மேலும் பாதகமாக்கும்.

பிறர் எரிச்சல் அடைகிறார்கள், விரும்பத்தகாத முறையில் நடந்து கொள்கிறார்கள் என்றால் அவர்களை வாழ்க்கை எங்கேயோ கடிக்கிறது. அவர்கள் வலியை உணர்ந்து அவர்களிடம் மென்மையாய் நடந்து கொள்ளுங்கள். அவர்களிடம் இரக்கமாய், புரிந்த ரீதியில் பொறுமையாய்ப் பரிவுடன் நடந்து கொள்ளுங்கள்.

உங்கள் இருவருக்குமே அது நல்லது.



நீங்கள் தெர்மா மீட்டரோ தெர்மோ ஸ்டாட்டா?

நம்மில் மிகப் பலர் தெர்மா மீட்டர் (உஷ்ணமானி) போல இருக்கிறார்கள்.

உஷ்ணமானி எதையும் மாற்றுவதில்லை. எதையும் கட்டுப்படுத்துவதில்லை. அது மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட தகவலை எடுத்துக் காட்டும் கருவி.

அவர்கள் உஷ்ணமானி போல செயல் படுகிறார்கள். அவர்கள் எதையும் மாற்றுவதில்லை. அவர்கள் எதையும் கட்டுப்படுத்துவதில்லை. பிறருக்கு வசதியான குறிப்பிட்ட பணிகளை மட்டுமே அவர்களால் ஆற்ற முடியும்.

உஷ்ணமானி போலவே இவர்களும் வெளியில் நடக்கும் விஷயங்களால் பாதிக்கப்படுகிறார். உஷ்ணமானி போலவே அவர்கள் புரிதலுக்கு அடங்கி விஷயங்களை முகத்தில் காட்டி விடுகிறார்கள். ஆனால் உஷ்ணமானி போலவே வெளியில் நடக்கும் எந்த விஷயத்தையும் இவர்களால் மாற்ற இயலாது.

மற்ற மனிதர்கள் தெர்மோ ஸ்டாட் (உஷ்ண கட்டுப்பாடு கருவி) போன்றவர்கள்.

வெளியில் நடக்கும் விஷயங்களைத் தெர்மோ ஸ்டாட் விழிப்புடன் இருந்து கவனிக்கிறது. முன்னமேயே திட்டமிட்டபடி சூழ்நிலையை மாற்றி அமைக்கும் விதத்தில் அது இயங்குகிறது.

மாறிய சூழ்நிலைக்கேற்ப தன்னைச் சுற்றியுள்ள பிரதேசத்தை மாற்றி அமைக்கிறது. தெர்மோ ஸ்டாட் கட்டுப்பாடு ஏற்படுத்தும் நிலையில் இருக்கிறது. அதனுடைய அமைப்புக்கு மாறுபட்ட சூழ்நிலையை அது ஏற்றுக் கொள்வதில்லை. முன்னரே திட்டமிட்டபடி அது சூழ்நிலையை மாற்றி அமைக்கிறது.

உஷ்ணமானி வெறுமே வாழ்கிறது.

தெர்மோ ஸ்டாட் கட்டுப்படுத்தி அதிகாரமாய் திகழ்கிறது. நீங்கள் வெறும் உஷ்ணமானி போல இயங்கலாம். எதையும் மாற்றாமல், எதையும் கட்டுப்படுத்தாமல் திறமையாகப் பணியாற்றலாம். மக்களின் நன்மைக்காக.

அல்லது தெர்மோ ஸ்டாட் போலத் திகழலாம். சுற்றி நடப்பதை விழிப்புடன் அறிந்து கட்டுப்பாடு ஏற்படுத்தி சுறுசுறுப்பாய் இயங்கி முன்னரே திட்டமிட்டபடி நிலைப்பாடுகளை மாற்றி அமைக்கலாம்.

இன்றைய சூழ்நிலையால் மட்டும் நீங்கள் பாதிக்கப்பட வேண்டாம். நீங்களாக விட்டு விட்டால் ஒழிய மற்றவர்கள் உங்கள் மீது அதிகாரம் செலுத்த வேண்டாம். நீங்களாக அனுமதித்தால் தவிர!

நீங்கள் விரும்பும் எதையும் நீங்கள் பெறுவதிலிருந்து பின்வாங்காதீர்கள். நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளை நீங்கள் கடைப்பிடிக்கத் தவறினால் ஒழிய!

நிர்ணயம் செய்ய வேண்டியது நீங்கள் - நீங்கள் மட்டுமே.

நீங்கள் விரும்பும் எந்த நிலையையும் நீங்கள் அடையலாம்.

நீங்கள் விரும்பும் எந்தப் பொருளையும் நீங்கள் பெறலாம்.

நீங்கள் எதைச் செய்ய நினைத்தாலும் அதைச் செய்யலாம்.

நிர்ணயிக்க வேண்டியது நீங்கள் - நீங்கள் மட்டுமே.

நிறைய மனிதர்கள் தங்களைச் சுற்றிக் கற்பனையான ஒளி வட்டங்களைச் சிருஷ்டித்துக் கொள்கிறார்கள்.

மகத்தான மனிதர்களிலிருந்து சாதாரண மனிதர்கள் வரை வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஒளிவட்டம் தயாரிப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாங்களாகவே கற்பனையில் உதித்த ஒளிவட்டங்களைத் தங்களைச் சுற்றி அமைத்துக் கொள்கிறார்கள். தங்களுடைய நல்ல நடவடிக்கை குடும்ப அமைப்பிற்குள்ளேயோ, சமூக சேவை ஸ்தாபனங்களிலேயோ, கோவில்களிலேயோ, சங்கங்களிலேயோ தாங்கள் செய்த நற்காரியங்கள் இவற்றின் பொருட்டு, சுய திருப்திக்காக ஒளிவட்டங்களை அமைத்துக் கொள்கிறார்கள்.

இவர்கள் சுயமாகத் தயாரித்த ஒளிவட்டங்களை அணிந்து கொண்டு நல்ல பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். நல்ல பணிகள் ஆற்ற தலைவர்கள் தேவை. உழைப்பாளர்களும் தேவை. ஆனால் உழைப்பாளர்களுக்கு மதிப்பும் விளம்பரமும் கொடுக்கிற தலைவர்கள் விருப்பத்திற் குரியவர்கள்.

மேற்குறிப்பிட்ட ஆசாமிகளே ஏழைகளுக்காக, ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் பேசுகிறேன் என்று அவர்கள் முதுகின் மேல் ஏறி நின்று தங்கள் பிம்பங்களை வளர்த்துக் கொள்ள மேடையாக அதைப் பயன்படுத்துகிறார்கள்.

தங்கள் தலைமை ஸ்தானத்தை நிரூபிக்க எப்பொழுதும் இவர்கள் முதல் வரிசையிலேயே வலம் வருவார்கள். குறிப்பாகத் தொலைக் காட்சிக்காக உணர்ச்சிகளைக் கிளறி விடும் அறிக்கைகளுக்கு அடுத்த படியாக, தொலைக் காட்சியே தலைமை பிம்பங்களை உருவாக்கும் சாதனம். அதில் இடம்பெறக் கூடியவர்கள் யார் என்பதில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்.

தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் எல்லாமே அவற்றில் உருவாக்கப்பட்ட தலைவர்கள் வெளியிடும் வெற்று கோட்டு (உணர்ச்சிகளைக் கிளறிவிடும்) அறிக்கைகளை ஒதுக்கிவிட்டு யாருடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமோ, யார் அடிமட்ட அளவில் பிரச்சினைகளைத் தீர்க்கப் பாடுபடுகிறார்களோ அவர்களின் அபிப்பிராயங்களை, அறிக்கைகளை வெளியிட்டுப் பொதுஜன சேவையைச் சிறப்பாக்க வேண்டும்.

இப்படிச் செய்தால்தான் விவரம் தெரிந்த ஆக்கபூர்வமான மக்கள் உருவாகுவார்கள். தலைவர்களின் பிம்பங்களைக் கட்டிக் காப்பதில் தொலைக்காட்சியும், இதர தொடர்பு சாதனங்களும் காட்டும் அக்கறையை குறைக்க வேண்டும்.


அறிவுபூர்வமான, கவையான மாற்றங்கள் வராமல் போனாலும் நமக்கு இப்பொழுது ஒரு திருப்தி இருக்கிறது. பொதுஜனப் பார்வையில் அதிக நேரம் ஜொலிக்கும் சுயமாய் உருவான தலைவர்களின் பிரசார ஒளிவட்டங்கள் நாளாக நாளாக மங்கிப் போகின்றன.

நிலைமை வெப்பமடையும் போது ஒளிவட்டம் உருகி வழியும் நிலையில் இந்த சுயநலக்கார தலைவர்களைப் பார்க்கப் பரிதாபமாகவே இருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் - விமானங்களை உள்ளே இழுக்கும் மர்ம பெர்முடா !



ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா கண்டங்களுக்கு இடையே அட்லாண்டிக் கடலில் 'பெர்முடா டிரையாங்கிள்' என்ற மர்மக் கடல் பகுதி உள்ளது.

இது மியாமி, பெர்முடா மற்றும் பெட்ரோரிகோ பகுதிகளை உள்ளடக்கியது. பெர்முடா பகுதிக்குள் பயணம் செய்யும் கப்பல்கள் மற்றும் விமானங்கள் திடீரென மாயமாகி வருகின்றன. இங்கு அவை உள்ளிழுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

அப்பகுதியில் பறக்கும் பறவைகளும் காணாமல் போகின்றன. ஏனெனில் இங்கு அளவுக்கு அதிகமான பேய் மழை, சூரிய சக்தியின் தாக்கம் மற்றும் ஈர்ப்பு விசை என்பன இதற்கு காரணம் எனக் கருதப்படுகிறது.

இங்கிலாந்தில் புறாக்கள் பறக்கவிடும் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் ஸ்காட்லாந்தில் இருந்து புறா போட்டியாளர்கள் திர்ஸ்க், வெதர்பி, கான்செட் ஆகிய பகுதிகளில் இருந்து 232 புறாக்களை பறக்க விட்டனர். ஆனால், அவற்றில் 13 புறாக்கள் மட்டுமே திரும்பி வந்தன. மற்றவை மாயமாகிவிட்டன.

எனவே, காணாமல் போன புறாக்கள் பெர்முடா பகுதியில் கடலுக்குள் உள்ளே இழுக்கப்பட்டிருக்கலாம் என்ற பீதி ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே, நீண்டதூரம் பறக்க முடியாமல் பல புறாக்கள் கடலுக்குள் விழுந்து இறந்து இருக்கலாம் அல்லது வேறு இடங்களில் தங்கி இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. எனவே பெர்முடா பற்றிய மர்மங்கள் இன்னும் தொடர்கின்றன.

# தரை, கடல், பனிக்கட்டியில் பறக்கும் புதிய ரக விமானம்

ரோட்டில் ஓடும் கார், படகு மற்றும் விமானம் ஆக மாறுவதை ஜேம்ஸ்பாண்ட் படங்களில் பார்த்திருக்கிறோம். அதுபோன்ற அதிசய வாகனத்தை நிஜவாழ்வில் காண இருக்கிறோம்.

தரை, கடல் மற்றும் பனிப்பிரதேசத்தில் பறக்கும் விமானத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் தயாரித்து உள்ளனர். அமெரிக்காவின் லிசா அகோயா என்ற நிறுவனம் அதி நவீன விமானத்தை வடிவமைத்துள்ளது.

தரையில் பறக்கும்போது அதன் 2 இறக்கைகள் விரியும். தண்ணீரில் பறக்கும்போது அது படகு போன்று மாறும். அதே நேரத்தில் பனிப் பிரதேசத்தில் செல்லும்போது அதன் 2 இறக்கைகளும் பனிக்கட்டிகளை உடைத்து, நொறுக்கி, சீரமைத்து அதில், பயணிக்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் 2 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும். இதில் 2011 கி.மீற்றர் தூரம் பயணம் செய்ய முடியும். மணிக்கு 135 மைல் முதல் 155 மைல் வேகத்தில் பறக்கும். இந்த அதிநவீன விமானத்தின் விலை ரூ.185 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்னும் 2 ஆண்டுகளில் அதாவது 2014-ம் ஆண்டு ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் இது விற்பனைக்கு வருகிறது.


அதற்கு முன்னதாக இந்த விமானங்கள் 70 தடவை வெற்றிகரமாக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன் விற்பனைக் கண்காட்சி அமெரிக்காவின் வின்கான்சின் மாகாணத்தில் உள்ள ஒஸ்காஷ் ஏர்வென்ஞ்சர் நிறுவனத்தில் கடந்த மாதம் நடந்தது.



# இப்படியொரு பூனையை நீங்கள் பார்த்ததுண்டா?

இரட்டைத் தலைகளைக் கொண்ட உயிரினங்களைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் இப்படி வினோதமான தலையைக் கொண்ட உயிரினங்களை எங்காவது பார்த்திருக்கின்றீர்களா?.


ஆம், பூனைக் குட்டி ஒன்று ஒரு தலையைக் கொண்டுள்ள போதிலும் அதன் முகப்பகுதியில் இரு வெவ்வேறு நிறங்களைக் கொண்டுள்ளமை வியத்தகு விடயமாகக் கருதப்படுகின்றது.



# செயற்கை விழித்திரை தயாரித்து விஞ்ஞானிகள் சாதனை

கண் பார்வையற்றவர்களுக்காக செயற்கை விழித்திரையைத் தயாரித்து விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர். உலகம் முழுவதும் 2 கோடியே 50 லட்சம் பேர் கண் பார்வையின்றித் தவிக்கின்றனர். எனவே செயற்கையான முறையில் விழித்திரையை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். இந்த சோதனையில் கண் பார்வையற்ற எலிக்கு செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட அதிநவீன லென்சுடன் கூடிய விழித்திரை பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

இதன் மூலம் பார்வை கிடைத்த எலி துள்ளிக் குதித்து விளையாட ஆரம்பித்தது. எனவே இதே தொழில்நுட்பத்தை மனிதர்களுக்கும் பயன்படுத்தி அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற முடியும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மேலும் மனிதர்களிடம் இச்சோதனை இன்னும் ஓரிரு ஆண்டுகளில் தொடங்கும் என்றும் அறிவித்துள்ளனர்.



# ஏலம் போகாத மிகவும் விலைமதிப்பான கார்



ஏலத்திற்கு விடப்பட்ட GT40 Gulf காரானது இதுவரையில் விற்கப்படவில்லை என்பது பலருக்கு ஆச்சரியம் தரும் விடயமாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் அதன் பெறுமதியே ஆகும்.

1968 காலப்பகுதிகளில் உருவாக்கப்பட்ட இக்காரானது 1971 ஆம் ஆண்டு கார்ப்பந்தயத்தில் கலந்துகொண்டுள்ளதுடன் 'Le Mans' என்ற ஹொலிவுட் படத்திலும் தோன்றியுள்ளது. இதன் பெறுமதி 11 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சாருலதா' படத்தில், ஒட்டிப் பிறந்த இரட்டையர் வேடத்தில் நடித்துள்ள பிரியாமணி, எந்தப் படத்திலும் இல்லாத அளவுக்கு, இந்தப் படத்தில் கடுமையாக உழைத்திருப்பதாக சொல்கிறார். ஸ்பொட்டுக்கு வரும் முன்பே, நிறைய ஹோம் வேர்க்; வந்த பிறகு, சளைக்காமல் நிறைய டேக் என்று, உடலை வருத்தி நடித்துள்ளேன் என்கிறார் பிரியாமணி

## உடலை வருத்திய பிரியாமணி

## விளம்பர போர்ட் எழுதியவர் இயக்குநர் ஆனார்



சினிமா ஆசையில் விளம்பர போர்ட் கடையில் வேலை பார்த்தேன். நண்பர்களின் உதவியால், 'புத்தக மூட்டை' என்ற ஆவணப் படம் இயக்கினேன். தொடர்ந்து ஆவணப் படங்கள் உருவாக்கினேன். 'பூவம் பட்டி' மூலம் இயக்குநர் ஆனேன். தற்போது 'ரேகை' என்ற படத்தை இயக்குகிறேன் என்கிறார் 'பூவம் பட்டி' படத்தின் இயக்குநர் புதுகை மாரிசா,

## குத்துப்பாட்டு எழுதிய பாரதியார் எள்ளுப் பேரன்



'பாகன்' படத்தில் பாரதியாரின் எள்ளுப் பேரன் நிரஞ்சன் பாரதி ஒரு குத்துப் பாடலை மிக சரளமாக எழுதி உள்ளார் . சிம்பா சம்பா ரம்பா... ஏஞ்சலினா அவ லவ்வர்னா... என்று ஏகத்துக்கும் வார்த்தைகளைக் கொட்டி எழுதி விட்டாராம். பாடல் வெளிவந்தால் ரசிகர்களிடம் பலத்த பாராட்டை பெறும் என்று இப்போதே படக்குழு உற்சாகமாகியுள்ளனர்.



## தமிழில் வில்லனாக நடிக்கவில்லை : சுதீப்



'நான் ஈ' படத்தில் நடித்த சுதீப், அடுத்து தமிழ், தெலுங்கில் கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கும் படத்தில் வில்லனாக நடிப்பதாக செய்தி வெளியானது. இதில் விஜய் ஹீரோவாக நடிக்கிறார் என்றும் கூறப் பட்டது. அந்த செய்தியில் உண்[illegible] இல்லை. கவுதம் இயக்கத்தி[illegible] நடிப்பது பற்றி யாரும் என்னிடம் பேசவில்லை' என்றார் சுதீப்.

## இன்னொரு மைனா



சென்னையில் நடந்த உண்மை சம்பவம் ஒன்றின் அடிப்படையில் கன்னடத்தில் உருவாகி உள்ள படம், 'மைனா'. சரத்குமார், சுகாசினி, மாளவிகா, நித்யா மேனன் உட்பட பலர் நடித்துள்ளனர். தமிழில் 'மைனா' என்ற பெயரில் ஏற்கனவே படம் வந்துள்ளதால் இங்கு மட்டும் 'பூர்வி' என்ற பெயரில் வெளியாகிறது என்று இயக்குநர் நாகசேகர் கூறுகிறார்.

## புதுவை மாநகரம்



மலையாளத்தில் ரிலீசான ட்வின்ஸ்', தமிழில் 'புதுவை மாநகரம்' என்ற பெயரில் டப் ஆகிறது. மம்மூட்டி, டாப்ஸி, நதியா, சுரேஷ், ஆனந்தராஜ் நடிக்கின்றனர். சாலை விபத்தில் சிக்கும் டாப்ஸியை காப்பாற்றுகிறார்கள் மம்மூட்டியும் நதியாவும். அதனால் பெரும் பிரச்சினை ஏற்படுகிறது. அது என்ன, பிரச்சினையில் இருந்து மம்மூட்டி எப்படித் தப்பித்தார் என்பது கதை என்றார் இயக்குநர் சோஹறன்.

## த்ரீ மங்கீ

(துருக்கிய




ஒரு சிறிய பொய், ஒரு நம்பிக்கைத் துரோகம் குடும்பத்தின் உறவுக்குள் எத்தகைய சிக்கல்களை ஏற்படுத்துகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு 'த்ரீ மங்கீஸ்' திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. எளிமையான கதை, நேரடியான கதை சொல்லல் நமக்குள் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றால் அதற்கு நூரி பில்கே சைலனின் இயக்கமே பிரதான காரணம்.

செர்வட் என்ற நடுத்தர வயது அரசியல்வாதி தூக்கக் கலக்கத்தில் காரை மோதி ஒருவனை கொன்று விடுகிறார். இரவுவேளை. ஒருவரும் கவனிக்கவில்லை. கார் ஒன்று அந்த விபத்தைப் பார்த்தும் நிற்காமல் செல்கிறது. ஒருவேளை காரில் இருந்தவர்கள் செர்வட்டின் காரை அடையாளம் கண்டு கொண்டால் அவரின் அரசியல் வாழ்க்கை பாதிக்கும். அது தேர்தல் நேரம் வேறு. செர்வட் தனது டிரைவர் எயூப்புக்கு போன் செய்கிறார். நள்ளிரவில் செர்வட்டை சந்திக்கிறார் எயூப். தனக்குப் பதில் அந்த விபத்தின் பொறுப்பை எயூப்பை ஏற்கச் சொல்கிறார் செர்வட். அதற்கு கைமாறாக அவர் ஜெயிலிலிருந்து திரும்புகையில் பெரிய தொகை ஒன்றை தருவதாகவும், அதுவரை அவரது சம்பளம் அவரது குடும்பத்துக்கு மாதம்தோறும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கிறார். தனது வழக்கறிஞரிடம் பேசியதாகவும், ஒரு வருடத்திற்குள்தான் தண்டனைக்காலம் இருக்கும் என்றும் செர்வட் கூறுகிறார். எயூப் சம்மதிக்கிறார்.

நாட்கள் செல்கிறது. எயூப்பின் மகன் இஸ்மாயில் கல்லூரிக்க[illegible] தேர்வில் மீண்டும் தகுதியிழக்கிறான். அவனிடம் ஏதாவது வேலைக்குப் போ என்கிறாள் ஹேசர், இஸ்மாயிலின் தாய். ஒரு [illegible] வாங்கினால் குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் கொண்டுவிடும் வேலையை பார்க்கலாம் என்கிறான் இஸ்மாயில். ஆனால் கார் வாங்க அவர்களிடம் பணம் இல்லை. ஜெயிலில் இருக்கும் தந்[illegible] தெரியாமல் செர்வட்டிடம் கொஞ்சம் முன் பணம் வாங்கலாம் என[illegible]

## ரஜினி ரசிகர் ஆகிறார் சசிகுமார்




கம்பெனி புரொடக்ஷன்ஸ் சார்பில் சசிகுமார் தயாரித்து, நடிக்கும் படம், சுந்தரபாண்டியன்'. லஷ்மி மேனன் ஹீரோயின். படத்தை இயக்கும் எஸ்.ஆர்.பிரபாகரன், நிருபர்களிடம் கூறியதாவது: ஒரு இளம்பெண்ணை ஹீரோ மீட்டெடுக்கும் கதை. இதில் ரஜினி ரசிகராக சசிகுமார் நடிக்கிறார்.காதலியை தேடும் கண்ணியமான [illegible] பையும், [illegible] நடித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் மிரள வைக்[illegible] படத்தில் நடிக்க வேண்டும் என[illegible] செய்துள்ளார். ஷாமின் நண்ப[illegible] துரை ஒரு கதையோடு வந்தார். [illegible] பிடித்துவிட தானே தயாரிக்க[illegible] செய்தார். இந்தப் படத்துக்காக[illegible] மிகவும் வருத்திக் கொண்டிருக்கி[illegible] எடை, அழகு அத்தனையும் [illegible] படத்துக்காக உயிரைக் கெ[illegible] உழைத்துக் கொண்டிருக்கிற[illegible]

## ஜார்ஜியா காட்டுக்குள் அனுஷ்கா!



செல்வராகவன் இயக்கி வரும், 'இரண்டாம் உலகம்' படப்பிடிப்பு தற்போது, ஜார்ஜியா காட்டுக்குள் நடைபெற்று வருகிறது. ஆதிவாசி பெண் வேடத்தில் அனுஷ்கா நடிக்கும் காட்சிகள் இங்கு தான் படமாகி வருகின்றன. ராட்சஷ வண்டுகள், பூச்சிகள் நிறைந்த இந்த அடர்ந்த காட்டுக்குள், இலை தழைகளையே ஆடைகளாக அணிந்து நடிக்கிறார் அனுஷ்கா.

## மாமனார் மாமியாரை கௌரவிக்கும் படம்



பெண் குழந்தை இல்லாத பெற்றோர்கள் வயதானதும் அனாதையாகி விடுகிறார்கள் என்பது பொதுவான கருத்து. இதற்கு காரணம் பெண்ணின் கணவன் தன் மாமனார், மாமியார் பற்றி கண்டு கொள்ளாததுதான். பெற்றவர்களைப் போலவே பெண் கொடுத்தவர்களும் பேணப்பட வேண்டும் என்பதை மையமாக வைத்து அத்துடன் காதலை கமர்சியலாகச் சொல்லும் படம். சிறுவர் பூங்கா ஒன்றில் நடக்கும் ஒரு சம்பவம்தான் படத்தின் முக்கிய திருப்பம். மகிழ்ச்சியைக் கொண்டாடவும் துக்கத்தை ஆற்றுப்படுத்தவும் உதவும் இடம் பூங்கா. அதுவே சில நேரங்களில் பயங்கரமான முகத்தை உடையதாக மாறிவிடுகிறது. அது என்ன என்பதை ஆக்ஷன் கலந்து சொல்கிறோம் என்கிறார் இயக்குநர் பாலமுருகன்.

## இலியானாவை ஓரம் கட்டும் கோலிவுட்...!




'கேடி' படத்தில் அறிமுகமான இலியானா, அதன்பிறகு, விஜய்க்கு ஜோடியாக, 'நண்பன்' படத்தில், ரீ-என்ட்ரி ஆனாலும், தமிழ் சினிமாவில் அவரால் தொடர்ந்து நிலைக்க முடியவில்லை. அம்மணியின் சம்பளம் தடாலடியாக உயர்ந்து நிற்பதே இதற்குக் காரணம். கோலிவுட் படாதிபதிகள் யாரேனும், இலியானாவுக்கு வாய்ப்பு கொடுக்க அணுகினால், அவர்களிடம் கோடிக்கணக்கில் படக்கூலி கேட்டு, ஷொக் கொடுக்கிறார். தமிழில் வாய்ப்பு இல்லாத நடிகை, இப்படி தடாலடியாக பேசுவதால், அவரை ஓரம் கட்டுகிறது கோலிவுட்.

...ஸ்

...ய திரைப்படம்

## உலக சினிமா




யோசனை தருகிறான் இஸ்மாயில். முதலில் மறுக்கும் ஹேசர் பிறகு சம்மதிக்கிறாள்.

செர்வட்டை அவரது அலுவலகத்தில் சந்திக்கிறாள் ஹேசர். தேர்தலில் தோல்வியடைந்ததைச் சொல்லும் அவர் பேருந்துக்காக காத்திருக்கும் ஹேசரை அவளது வீட்டிற்கு அருகில் காரில் ட்ராப் செய்கிறார். உனக்காக எதுவும் செய்வேன் என்கிறார் செர்வட்.

தந்தையைப் பார்க்க இஸ்மாயில் ரயில்வே ஸ்டேஷனுக்கு வருகிறான். எதிர்பாராமல் தனது சட்டையிலேயே வாந்தி எடுப்பவன் உடை மாற்ற வீட்டிற்கு வருகிறான். வீட்டில் யாரோ இருப்பது அவனுக்குத் தெரியவருகிறது. அது செர்வட். தாய் தனது தந்தைக்கு துரோகம் செய்வதைக் கண்டு கொள்கிறான். ஹேசரை அடிக்கிறான் இஸ்மாயில்.

ஒன்பதாவ்து மாதமே எயூப் விடுதலையாகி றான். வீட்டில் எதுவுமே சரியில்லை என்பது அவனுக்கு தெரிகிறது. ஹேசரிடம் கடுமையாக நடந்து கொள்கிறவன் வீட்டிற்கு அருகிலிருக் கும் தேனீர் விடுதிக்கு சென்று நண்பர்களுடன் பேசுகிறான். அவர்கள் சென்ற பிறகு அங்கேயே தங்கியிருக்கும் கடைப் பையன் பைராமிடம் பேச்சைத் தொடர்கிறான்.

ஹேசரால் செர்வட்டை மறக்க முடியவில்லை. அவரது வீட்டிற்கு வந்து பார்க்கிறாள். அவளை தனியாகச் சந்திக்கும் செர்வட் இனி என்னை பார்க்காதே என்று கடுமையாக எச்சரிக்கிறார். ஹேசரால் அதைத் தாங்க முடியாமல் அவர் காலை பிடித்து அழுகிறாள்.

அன்றிரவு போலீசார் விசாரணைக்கு ஹேசரையும், எயூப்பையும் அழைத்துச் செல்கிறார்கள். செர்வட்டை யாரோ கொலை செய்து விட்டனர். வீட்டிற்கு இருவரும் திரும்பி வருகின்றனர். செர்வட்டை கொன்றது நான்தான் என்கிறான் இஸ்மாயில். யாராவது பார்த்தார்களா என்று அவனிடம் எயூப் கேட்கிறார். தெரியாது என்கிறான் இஸ்மாயில். இறுதியில் குடும்பத்தில் எவ்வாறு சமாதானம் ஏற்படுகிறதா என்பது தான் படம்.

...கான

...கார்

...தைக்கு

...ா

## தேவயானிக்கு வயது 16!



ராஜகுமாரன் இயக்கி, கதாநாயகனாக நடிக்கும் படம், 'திருமதி தமிழ்!' இந்தப் படத்தில், அவரது மனைவியும், நடிகையுமான தேவயானியே, அவருக்கு ஜோடியாக நடிக்கிறார். இதில் அவர்களுக்கு, இரண்டு டூயட் பாடல்கள் உள்ளதாம். அதில் ஒரு பாடல் காட்சியில், பதினாறு வயது பெண்ணாக, பாவாடை, தாவணி உடை அணிந்து நடித்துள்ளார் தேவயானி.

## எப்படி இருந்த ஷாம் இப்படி ஆயிட்டார்

...க்கும் ஒரு
...ன்று முடிவு
...பர் வி.இசட்
... அந்த கதை
...வும் முடிவு
...க தன்னை
...கிறார். தனது
... குறைத்து
...காடுத்து
...றார் ஷாம்



## முகமூடி – நூறாவது படம்

இந்த வருடத்தில் 99 படங்கள் வெளியாகியிருக்கின்றனவாம். அதில் நூறாவதாக 'முகமூடி' திரைப்படம் வெளியாகப் போகிறது. இது எதேச்சையாக நடந்தது. இதை ஒரு அதிர்ஷ்மாக நினைக்கிறோம் இப்படி புல்லரித்திருக்கிறார் யுடிவி நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் தனஞ்செயன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் சுடர்

இரண்டு படத்துக்கும் இடையில் உள்ள ஐந்து வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்



## வன்முறைக்குத் தண்டனை மரணம்!



ஒரு பெரிய மரத்தின் உச்சியில், தேன் கூடு ஒன்று அமைந்திருந்தது. தேனீக்களின் தலைவியாகிய ராணி தேனீக்கு, கடவுளைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அது கடவுளை நினைத்து தவம் செய்தது.

ராணித் தேனீயின் முன்னால் தோன்றினார் கடவுள்.

"ராணித் தேனீயே... உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார் கடவுள்.

கடவுளே தன் முன் பிரசன்னமாகியிருக்கும் போது, உயர்ந்த நோக்கத்துடன் கூடிய ஒரு வரத்தைக் கேட்கும் நல்ல புத்தி ராணித் தேனீக்கு ஏற்படவில்லை.

இறைவனே! என்னிடமிருக்கும் தேனை நாடி வருபவர்களைக் கொட்டி, அவர்கள் சகிக்க முடியாத வேதனையை அனுபவிக்குமாறு செய்தருள வேண்டும்," என்று ராணித் தேனீ கேட்டுக் கொண்டது. அதைக் கேட்டு கடவுள் மிகவும் வருத்தம் கொண்டார்.


ராணித் தேனீயே! பிறருக்கு உதவி செய்யக்கூடிய நல்ல வாய்ப்பை, வசதியை நீ கேட்டிருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். நீயோ பிறருக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காகவே வரம் கேட்கிறாய்! நீ கேட்ட வரத்தை கொடுக்காமலிருக்க முடியாது. வரம் கொடுக்கும் அதே சமயம், உனக்கு ஒரு பாடமும் போதிக்க விரும்புகிறேன். என்னுடைய வரத்தின் மூலம் உனக்கு கொடுக்கு ஒன்று ஏற்படும். அந்தக் கொடுக்கால் மற்றவர்களைக் கொட்டி வேதனைக்குள்ளாக்கும்போது, உனது கொடுக்கின் நுனி, உன்னால் கொட்டப்படுபவர்களின் உடலில் தொற்றிக் கொள்ளும். உடனே நீ உயிரிழந்து விடுவாய்." இவ்வாறு கூறிவிட்டு மறைந்தார் கடவுள்.




வன்முறையில் விருப்பம் கொண்டவர்கள், தாங்கள் கையாளும் வன்முறையாலேயே அழிந்து விடுவர். மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்துச் செயல்படுபவர்களுக்கு நன்மையே வந்து சேரும்.

அப்போ நீங்க எப்படி?

புள்ளிகளை இணைத்து மறைந்திருப்பதைக் கண்டுபிடியுங்கள்



## அபிமன்யு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நிறைவுப் பகுதி)

# நிராகரிக்கப்பட்டவன்

செக்யூரிட்டி அவனையே பார்த்துக்கொண்டு இருந்தான். அவன் கையெழுத்து வைத்தான். நடப்பது நடக்கட்டும். லண்டனில் இருந்து அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டவர்களை, ஒவ்வொரு நாளும் இலங்கைக்கு அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அது வெளியில் தெரிவது இல்லை. இங்கு வாழ்ந்துவிட்டு இலங்கையில் போய் வாழ்வது என்பது எல்லோருக்கும் விருப்பமானது அல்ல. தமிழனாக திருநீறு பூசி, சந்தனப் பொட்டு வைத்துக் கொண்டு, கொழும்பில் சுதந்திரமாகத் திரிய முடியாது.

இப்போது சிங்களவர்கள் தமிழர்களை வெற்றி கொண்ட புளுகில் திரிகிறார்கள்.

"கூட், அவருடன் போங்கோ" பூனைக் கண் அதிகாரி, செக்யூரிட்டியுடன் போகச் சொன்னார்.

செக்யூரிட்டி வேறு ஒரு வழியில் கொண்டுபோய் ஒரு வாகனத்தில் ஏற்றினார். வாகனம், ஹாமன்ஸ் வேத் தடுப்பு முகாமை நோக்கிப் போய்க்கொண்டு இருந்தது.

அரைமணி நேர ஓட்டத்தில் தடுப்பு முகாமில் கொண்டுபோய் விட்டார்கள். அங்கு அவனைப் பதிவு செய்து, ஒரு பெரிய அறைக்குக் கொண்டு போனார்கள். அங்கு பேயனைப்போலத்தான் பார்த்தான். அவனோடு சேர்த்து 56 பேர் இருந்தார்கள். அழுத கண்களுடன் கலவரமான மனிதர்களாக இருந்தார்கள். எல்லோரும் தமிழர்கள். நான்கு சுவர்களுக்குள் தமிழர்கள் அடைபட்டுக் கிடந்தார்கள்.

வெளிநாட்டிலே, அகதிகள் முகாமில் தமிழர்கள் அடைபட்டுக் கிடக்கிறார்கள். லண்டனில் தடுப்பு முகாமில் அகதிகள் அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் என்று எல்லோரும் இருக்கிறார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான பிரச்சினைகளைச் சுமந்துகொண்டு இருப்பது தெரிகிறது. இங்கு வைத்து இவர்களை என்ன செய்யப்போகிறார்கள் என்று தெரியாது.

பிரிட்டன், அகதிகளுக்கு வாய்ப்பான ஓர் இடம் என்றும், சட்ட விரோதக் குடியேறிகளுக்கு உவப்பான இடம் என்றும் நினைக்கக் கூடாது என்று உள்துறை அமைச்சர் டேமியன் கிறீன் சொன்னது... திரும்பத் திரும்ப அவனுக்கு நினைவு வந்தது.

"இப்போது வெயில்காலம் ஆகையால், அந்தச் சதுர மண்டபத்தில் ஒரே புழுக்கமாக இருந்தது. மனிதச் சூடு வெப்பமாக இருந்தது.

"அண்ணை புதுசோ?"- அங்கு நின்றுகொண்டு இருந்த இளம் பெடியன் ஒருவன் விசாரித்தான்.

"ஓம். நீங்கள்?"

"நானும்தான். நான் ஸ்ருடன்ட் விசாவில் இருந்து கொண்டு முழு நேரமாக வேலை செய்தனான். வேலை செய்த இடத்தில் வெச்சு பிடிச்சுப் போட்டினம். அப்படியே இங்கை கொண்டு வந்திட்டினம்" என்றான் அந்தப் பெடியன்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினையில் இருந்தார்கள். நேரம் கரைந்துகொண்டு இருந்தது. மாலையில் பிஸ்கட்டும் பால் தேநீரும் தந்தார்கள். எல்லோரிடமும் பதற்றம் அதிகரித்துக் காணப்பட்டது. தாங்கள் தாங்கள் சட்டத்தரணிகளோடு பேசுவதற்குத் தொலைபேசி வசதி செய்து தரும்படி, ஒரு சிலர் போய் அதிகாரிகளைக் கேட்டார்கள். ஒவ்வொருத்தராகப் பேசுவதற்கு அனுமதி கொடுத்தார்கள். பிறகுதான் தெரிந்தது, இங்கு பிடிக்கப்பட்டவர்களில் பலதரப்பட்டவர்கள் இருந்தார்கள் என்று.

மாணவர் விசாவில் வந்து விசா முடிந்தவர்கள், அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள், விசா இல்லாமல் இருந்துகொண்டு கார் ஓட்டி பிடிபட்டவர்கள், கள்ள விசாவில் நாட்டுக்குள் வந்தவர்கள், இன்சூரன்ஸ் நம்பர் இல்லாமல் டூரிஸ்ட் விசாவில் இருந்துகொண்டு வேலை செய்தவர்கள் என்று பலரும் இருந்தார்கள். இயலுமானவர்கள் தாங்கள் தாங்கள் சட்டத்தரணியூடாக வெளியில் போக பேசிக்கொண்டு இருந்தனர்.

இலங்கைக்கு அகதிகளை ஏற்றப்போகிறார்கள் என்ற பதற்றம் லண்டன் முழுவதிலும் தமிழர்கள் மத்தியில் வேகமாகப் பரவியது. தாங்கள் தாங்கள் அகதிகளைக் காப்பாற்ற, ஒரு சில சட்டத்தரணிகள் மிக வேகமாக வேலை செய்துகொண்டு இருந்தனர். ஒரு சில சட்டத்தரணிகள் அலட்டிக் கொள்ளவில்லை.

ஹோம் ஒபிஸுக்கு கோல் பண்ணிக் கேட்டால், [illegible] ஆட்களை அனுப்புவது பற்றி வாய் திறக்கிறார்கள் இல்லை. அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட அகதிகள், எப்படியாவது தங்களது சட்டத் தரணிகளைப் பிடித்து விமானத்தில் ஏற்றுவதைத் தடை செய்ய, படாதபாடு பட்டுக்கொண்டு இருந்தனர். அதில் அவனும் தனது லோயருடன் பேசிக்கொண்டு இருந்தான். கொழும்புக்குப் போய் சாவதைவிட, லண்டனில் எப்படியாவது இருந்துவிட வேண்டும் என்னும் பதகளிப்பு அவனில் தெரிந்தது.

அந்த மண்டபத்தின் கிழக்குப் பக்கமாக இருந்த ஜன்னல் திறந்து இருந்தது. திடீர் என்று அந்தப் பக்கம் பெரும் சத்தம் கேட்டது. எங்கள் ஊரைப்போல இங்கு உள்ள ஜன்னல்களுக்குக் கம்பிகள் இல்லை. சுவருக்கு இரண்டு பெரிய கதவுகள் மல்லாந்து திறந்து இருந்தன.

"ஐயோ, அவர் கழுத்திலை சுருக்கு போட்டிட்டார்" என்று ஜன்னலுக்குப் பக்கத்தில் நின்ற ஒருவர் கத்தினார். கண்மூடித் திறப்பதற்குள் அது நடந்து முடிந்துவிட்டது. தனது லுங்கியைக் கழற்றிக் கிழித்து, ஒருவர் ஜன்னல் ஓரத்தில் இருந்த கம்பியில் சுருக்கிட்டு வெளியில் பாய்ந்துவிட்டார்.

அவருக்குத் தொண்டையில் தூக்கு இறுகி வெளியில் தொங்கிக்கொண்டு இருந்தார். பெரிய உயரம் இல்லாத இடம் என்பதால், மூன்று ஆண்கள் திடீர் என்று வெளியில் குதித்து, அவருடைய கழுத்தில் இறுகி இருந்த லுங்கியை அவிழ்த்து எடுத்து விட்டார்கள். அகதிகள் தங்களை நாட்டுக்கு அனுப்பாமல் இருக்க இவ்வாறான தற்கொலை முயற்சியில் ஈடுபடுவது இப்போது வழக்கமாகிவிட்டது.

கைகளை பிளேடால் வெட்டிக்கொள்வது, கழுத்தில் சுருக்கிடுவது, தலையைச் சுவரில் அடித்துக் காயப்படுத்துவது, விமானத்தில் ஏற்றினால், ஆடைகளைக் களைந்துவிட்டு நிற்பது என்று எதிர்ப்பைக் காட்டி, நாடு கடத்துவதை எதிர்ப்பதற்கு இப்படிச் செய்வார்கள்.

இங்கு வெள்ளைக்காரருக்கு கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொள்வது புதிய விடயம். அவர்களுக்கு இந்த தற்கொலை முறை தெரியாது. இங்கு தூக்க மாத்திரை போடுவது, ஓடும் ரயிலில் விழுவது, நச்சு வாயு நிரம்பிய காருக்குள் இருந்து தற்கொலை செய்துகொள்வதுதான் தெரியும்.

அங்கு இருந்த அதிகாரிகள் 999-க்கு கோல் பண்ணிவிட்டார்கள். உடனடியாக அம்புலன்ஸ் வந்து தூக்குப் போட்ட தமிழருக்கு முதலுதவி கொடுத்து விட்டு, கழுத்துக்கு ஒரு கிறீம் போட்டுத் தடவி விட்டுப் போய்விட்டார்கள். "அவருக்கு சுவாசம் சரியாக வேலை செய்கிறது. பயப்பட ஒன்றும் இல்லை" என்று முதலுதவிக்காரர் சொன்னதோடு சரி. இப்போது அவர் சிறைபோன்ற கூண்டு ஒன்றுக்குள் கொண்டுபோய் விடப்பட்டார். அங்கு ஒன்றுமே இல்லை. ஒரு சிமெண்ட் பெஞ்ச் மட்டும் இருந்தது. படுக்க வேண்டியதுதான். தற்கொலைக்கு முயற்சி செய்யவே முடியாது.

இரவு யாருமே நித்திரை கொள்ளவில்லை. எல்லோருக்கும் சாண்ட்விச்சும் தேநீரும் கொடுத்தார்கள். ஒவ்வொருவரும் பசிக்கு ஏற்றதுபோல கேட்கக் கேட்க சாண்ட்விச் கொடுத்தார்கள். குழந்தைப் பிள்ளைகள் அழுதுகொண்டு இருந்தன. ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சோகமான கதைகள் இருந்தன. பிறகுதான் தெரிந்தது... அங்கு விசா முடிந்த சிங்கள, முஸ்லிம் மாணவர்களும், விசா பிரச்சினையால் அங்கு கொண்டுவரப்பட்டு இருக்கிறார்கள் என்கின்ற விசயம்.

இங்கு ஹோம் ஒபிஸ் மிகவும் கவனமாகவே இவர்களை நாடு கடத்தத் திட்டம் தீட்டி இருந்தது. இவர்களோடு சேர்த்து அகதிகளும் இருந்தார்கள். இவர்களை ஏன் நாடு கடத்துகிறார்கள் என்று கேட்பதற்கு யாருக்கும் திராணி இல்லை என்று ஹோம் ஒபிஸ் முடிவு எடுத்துவிட்டது. இரவு பெரும் சிரமத்தோடு கழிந்தது அவனுக்கு. மிகவும் கஸ்ரமான காலை விடிந்துவிட்டது.

காலை 8 மணிக்கு அதிகாரிகள் வந்தார்கள். 12 அதிகாரிகளும் பொலிஸாரும் வாகனங்களும் கூடவே வந்தன. அங்கு இருந்தவர்களுக்கு அந்தக்காலை சபிக்கப்பட்ட காலையாகவே இருந்தது.

எல்லோரையும் வரிசையாக வரச்சொன்னார்கள். அதிகாரிகளின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வரிசையாக வந்தார்கள் அவர்கள்.

ஒவ்வொருவருடைய பெயர், ஒரு வழிப் பயண அனுமதிப் பத்திரம் எல்லாம் சரிபார்க்கப்பட்டு வாகனங்களில் ஏற்றப்பட்டார்கள்.

அவனுக்கு வாகனத்தில் ஜன்னலோர இருக்கை கிடைத்தது. லண்டனை இறுதியாகப் பார்க்கிறோம். இனிமேல் சாகும் வரை இங்கு வர முடியாது என்று உறுதியாக நம்பினான். யுத்தத்தால் அழிக்கப்பட்ட, ஊரே இல்லாத தனது ஊருக்கு அவன் அனுப்பி வைக்கப்படுகிறான்.

தாய் இல்லை, தந்தை இல்லை. சகோதரர்களும் யுத்தத்தில் செத்துப் போனார்கள். அங்கு போய் என்ன செய்வது? கொழும்பில் புலனாய்வுப் பிரிவினரின் கெடுபிடிகளைத் தவிர்த்து ஊருக்குப் போக முடியுமா? போனாலும் ஊரில் ஆமிக்காரர் இருக்கவிடுவார்களா? தொழிலுக்கு என்ன செய்வது? மனம் முழுக்கப் பெரும் கொந்தளிப்பாக இருந்தது. ஒன்பது வருடங்களுக்குப் பிறகு ஊர், ஊராக இல்லாத தரிசு நிலம் ஒன்றுக்குப் போகப் போகிறேன் என்று நினைத்துக்கொண்டான்.

இதில் போகிற எல்லோருக்கும் ஏற்படுகிற நிலைமைதானே தனக்கும் என்று எண்ணிக் கொண்டான். சரி, வாறது வரட்டும் நடக்கிறதைக் காணுவோம். விதி என்று ஒன்று தன்னைக் கூட்டிக் கொண்டு போவதாக எண்ணினான்.

லண்டன் கெட்விக் விமான நிலையத்தில் கூட்டம் அதிகமாக இல்லை. அழைத்துப் போனவர்கள் எல்லோரையும் வேறொரு வாசலால் கூட்டிக்கொண்டு போனார்கள்.

அவனுக்கு முன்னால் தடுப்பு முகாமில் தற்கொலைக்கு முயன்றவரைக் கையில் விலங்கு போட்டு அழைத்துப் போனார்கள். அவர் மீண்டும் தற்கொலைக்கு முயலக் கூடும் என்ற பயம் அதிகாரிகளுக்கு.

அநேகமாக அடம்பிடித்தவர்கள் ஒன்று இரண்டு பேருக்குப் பக்கத்தில் அதிகாரிகள் கூடவே போனார்கள். விமானம் தயாராக இருந்தது. ஒவ்வொருவராக விமானத்தில் ஏற்றிக்கொண்டு இருந்தார்கள் அதிகாரிகள். பெண்கள் ஓவென்று குமுறி அழுதார்கள்.

வெளியில் தமிழ் தொலைக்காட்சிகள், வானொலிகள் எல்லாம் இலங்கையர்கள் நாடு கடத்தப்படுகிறார்கள் என்று அன்று நாள் முழுவதும் செய்திகளைத் தந்துகொண்டு இருந்தன. ஆனால், என்ன நடைபெறுகிறது என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஒரு சில சட்டத்தரணிகள் விமானம் புறப்படுவதற்கு முன்னால் தாங்கள் சார்பில் இருக்கும் அகதிகளைத் திருப்பி எடுப்பதற்குப் போராடிக்கொண்டிருந்தார்கள். முடியவில்லை.

எல்லோரும் விமானத்தில் ஏற்றப்பட்டுவிட்டார்கள்.

மாலை 5 மணிக்கு விமானம் இலங்கையர்களை ஏற்றிக்கொண்டு புறப்படப்போகிறது. விமானத்தைச் சரிபார்த்தார்கள். லண்டனைவிட்டு இவர்கள் போகப்போகிறார்கள். இதுதான் லண்டன் சீமையை இவர்கள் விமானத்தின் கண்ணாடிக்குள் காணும் கடைசித் தருணங்கள்.

30 நிமிடங்கள் இருக்கின்றன. மனோகரனுக்குத் தண்ணீர் தாகமாக இருந்தது. விமானப் பணிப் பெண்ணை அழைத்துக் கேட்டான்.

அவள் அவகாசப் பொறுத்து இருக்கும்படி கூறினாள். தண்ணீர் கொடுக்கச் சிறிது நேரமாகும் என்றும் சொன்னாள்.

அகதிகளை லண்டனில் வைத்துப் பராமரிக்கும் செலவைவிட, அவர்களை இப்படி ஏற்றி அனுப்பினால், ஒரே செலவோடு எல்லாம் முடிந்து விடும். அது மட்டும் அல்ல.... இனிமேல், இலங்கையில் இருந்து இங்கு லண்டனுக்கு அகதிகள் வரத்தும் குறைந்துவிடும் என்று பிரிட்டன் இந்த வேலையைச் செய்கிறது.

விமானத்தில் இன்னும் ஏ.சி. வேலை செய்யவில்லை. ஒரே வியர்வையாக இருந்தது. இன்னும் 15 நிமிடங்கள்தான் இருக்கின்றன. தனது சட்டத்தரணி வந்து தன்னைத் திருப்பி எடுப்பார் என்கிற நம்பிக்கை முழுதும் அறுந்துபோனது. எல்லாம் முடிந்துவிட்டது என்று அவன் நினைத்தான். அழுகை முட்டிக்கொண்டு வந்தது. ஆனால், கண்ணீர் வரவில்லை.

விமானம் புறப்பட்டது!





அடிவானத்திற்கப்பால்...

அப்துல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வயதுக்கு குறைந்த பெண்களுக்கு கைத்தொலைபேசி பாவிக்கத் தடை!



மகளிர் சுடர்

இது இங்கு இல்லை. இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில்.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள உதய்ப்பூர்வதி என்ற பகுதியில் 18 வயதுக்கும் கீழ் உள்ள பெண்பிள்ளைகள் கைத்தொலைபேசி பயன்படுத்த அவ்வூர் கிராம பஞ்சாயத்து தடை விதித்துள்ளது.

தகவல்களை எளிதாகப் பரிமாறிக் கொள்ளப் பயன்படும் கைத்தொலைபேசிகள் பல வகையில் ஆபத்தினை விளைவிப்பதாக உள்ளதால், ராஜஸ்தான் மாநிலத்தில் இருக்கும் உதய்ப்பூர் என்ற பகுதியில் 18 வயதுக்கும் கீழ் உள்ள பெண்கள் கைத்தொலைபேசி பயன்படுத்தக் கூடாது என்று கிராம பஞ்சாயத்து முடிவெடுத்துள்ளதாம்.

பல கிராமப் பகுதிகளில் பெண் குழந்தைகள், கைத்தொலைபேசி போன்ற இலத்திரனியல் தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்துவதால், தகாத மனிதர்களுடன் தொடர்புகள் ஏற்பட நிறைய வாய்ப்பிருக்கிறது. இதனால் பெண் குழந்தைகளின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது.


இதைக் கருத்தில் கொண்டு, பதினெட்டு வயதுக்கும் கீழ் உள்ள பெண் குழந்தைகள் செல் போன்களை பயன்படுத்த கிஷோர்புரா என்ற கிராம பஞ்சாயத்து தடை விதித்துள்ளது.



நமது சூழலிலும் பாடசாலை மாணவிகள் உட்பட இளம் பெண்கள் பலரும் கைத்தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர். சிலருக்கு இது காதோடு ஒட்டிப்பிறந்தது போலவே உள்ளது. வாகனப் போக்குவரத்து அதிகமுள்ள வீதிகளைக் கடக்கும்போது கூட கைத்தொலைபேசியில் உரையாடியபடியே அவர்கள் கடப்பதையும் காணமுடிகின்றது. இதனால் கைத்தொலை பேசி என்பது தவறானவர்களின் தொடர்புகளை ஏற்படுத்துவது மட்டுமன்றி விபத்துக்களையும் ஏற்படுத்த வழிசமைக்கின்றது.


இங்கு இதனை பஞ்சாயம் கூடி தடை விதிக்க முடியாது. பெண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் தான் கவனத்திலெடுக்க வேண்டும்.

## பிரெஞ் ரோஸ்ட்




வேலைக்குச்செல்லும் பெண்கள் வீட்டில் காலை உணவுக்கு அதிகமாகப் பாணையே பயன்படுத்துவார்கள். சிலசமயங்கள் இந்தப் பாண் உணவு சலிப்பை ஏற்படுத்தி விடும். பாணைப் பயன்படுத்தி வித்தியாசமாக உணவு தயாரிக்கலாம். அதில் ஒன்றுதான் பிரெஞ் ரோஸ்ட்.

தேவையான பொருட்கள்:
பாண் துண்டுகள் 2
முட்டை 1
பால் 1 மேசைக்கரண்டி
சீனி 1 மேசைக்கரண்டி
வெனிலா எசென்ஸ் 1/2 துளி
எண்ணெய் 2,3 துளிகள் போதுமாக இருக்கும்.



முதலில் முட்டையையும், பின்னர் மற்றைய பொருட்களையும் சேர்த்து நன்றாக அடித்து எடுத்துக் கொள்ளுங்கள்.
அடுத்த கலவையில் பாண் துண்டுகளைப் போட்டுப் பிரட்டி தோசைக்கல்லில் இட்டு, 2 பக்கமும் 2 நிமிடங்கள் வரை வாட்டி எடுங்கள்.
இதோ சுவையான பிரெஞ் ரோஸ்ட் ரெடி.

## சருமத்தை அழகாக்கும் உணவுகள்



சிலருக்கு செயற்கையான கிறீம்களைப் பயன்படுத்தி உடலை அழகாக்கப் பிடிக்காது. உண்ணும் உணவுகள் மூலமே சருமத்தை அழகாக்கலாம்.

உடலின் வெளி அழகுக்கும், உள் ஆரோக்கியத்துக்கும் மிகவும் முக்கியம் கீரை. எல்லா வகையான கீரையும் அதிகம் சாப்பிடலாம். குறிப்பாக வெந்தயக்கீரை, பசளைக்கீரை, முருங்கை கீரைகளில் அதிகமாக இரும்புச் சத்து மற்றும் ஜிங்க் சத்து என்பன இருக்கின்றன. இந்தக் கீரைகளுடன் விட்டமின் சி சத்துள்ள உணவுகள் சேர்த்துச் சாப்பிடும் பொழுது இன்னும் அதிகமான சத்துக்கள் கிடைக்கும். இதன் மூலம் கண்களுக்கு கருவளையம் குறையும், முகத்தில் பருக்கள் வருவது குறையும்.

அதிக வறண்ட சருமம் உள்ளவர்கள் உணவில் கொழுப்பு நிறைந்த உணவுகள் (உடல் நலனுக்கு ஏற்ப) உணவில் சேர்த்துக்கொள்ளவும், ஒலிவ் ஒயில், எள்ளெண்ணெய், கடலை எண்ணெய், நெய் போன்றவைகளை உணவில் சேர்த்துக்கொள்ளவும்.

தக்காளி:

அண்டி ஆக்ஸிடெண்ட்களான விட்டமின் ஏ மற்றும் விட்டமின் சி சத்துக்கள் நிறைந்த பழம் தக்காளி. விட்டமின் சி தோலுக்கு எலாஸ்டிக் தன்மை தருகிறது. சருமம் கறுப்பதையும் தடுக்கிறது.

**இளமையில் முதுமை:**

இளமையிலே சிலருக்கு முதுமையான தோற்றம் இருக்கும். அவர்கள் ஒரு கைப்பிடியளவு ஸ்ட்ராபெரி அல்லது 3 நெல்லிக்காய் சாப்பிடலாம். தேவையான சத்துக்கள் கிடைக்கும்.

மீன்:

மீனிலுள்ள ஒமேகா 3 என்ற பொருள் சரும செல்களை புதுப்பிக்கும். சருமத்தை பளபளக்கச் செய்யும். வாரத்துக்கு 3 நாள் மீன் சாப்பிடுவது நல்லது. மீன் சாப்பிடாதவர்கள் மீன் மாத்திரை சாப்பிடலாம்.

சோயாபீன்ஸ்சில் இருக்கும் ஈஸ்ட்ரோஜன் முகப்பருக்கள் வராமல் தடுக்கிறது. வாரத்துக்கு 3 நாள் இதனை உணவில் சேர்த்துக்கொண்டால் சருமம் புதுப் பொலிவுடனும், ஈரப்பசையுடனும் இருக்கும்.

கரட்:

இதிலுள்ள பீட்டா கரோட்டின் சருமத்தை பொலிவுடன் வைக்கும். தோடம்பழம், பப்பாளி, பூசணி, மாம்பழம் சாப்பிட்டாலும் சருமம் பொலிவுடன் இருக்கும்.

சிலருக்கு முகத்தில் பரு இல்லாமல் சுத்தமாக இருந்தாலும் ஏதோ முகத்தில் டல்லாகத் தெரியும். அவர்கள் அதிகமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். அப்பொழுது தான் சருமம் புத்துணர்ச்சி பெற்று ஈரப்பசையுடன் இருக்கும்.. குறைந்தது ஒரு நாளுக்கு 9 கப் தண்ணீர் குடித்தால் முகம் நன்றாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்கலாம்.

## உடல் நலம்



# கர்ப்பகாலத்தில் அன்டிபயாட்டிக் மருந்து பாவிக்கலாமா?


டொக்டர் எஸ்.சுரேந்திரகுமார்

**கேள்வி :** நான் 27 வயதுக் கர்ப்பிணி. இப்போது கர்ப்ப காலத்தின் 7ம் மாதம் நடக்கிறது. இந்த மாதத் தொடக்கத்தில் எனக்கு நடுங்குளிர் காய்ச்சல் ஏற்பட்டது. வைத்தியரிடம் சிகிச்சைக்கு சென்றபோது சிறுநீர் தொற்று (Urinary Tract Infection) உண்டு எனக் கண்டறியப்பட்டது. பரசிட்டமோல், அன்டிபயாட்டிக் மருந்துகள் தரப்பட்டு பூரண குணமடைந்தேன். நான் உட்கொண்ட மருந்துகளால் கருவில் உள்ள என் குழந்தைக்கு பாதிப்பு இருக்குமோ என அச்சப்படுகிறேன்.

**பதில் :** கர்ப்பத்தின் முதல் மூன்று மாதம் தான் கருவின் மிகமிக முக்கிய உறுப்புகள் உருப்பெறும் காலமாகும். இக்காலப்பகுதியில் Folic acid, விட்டமின் சி தவிர எந்த மருந்தையும் வைத்திய ஆலோசனை இன்றி எடுக்கக் கூடாது. எனினும், இந்த முதல் மூன்று மாதத்தில் காய்ச்சல் ஏற்பட்டால் கட்டாயம் பரசிட்டமோல் மாத்திரைகள் இரண்டை ஆறு மணித்தியாலங்களுக்கு ஒருமுறை காய்ச்சல் இருந்தால் பாவிக்க வேண்டும். இல்லாவிடில் காய்ச்சலின் வெப்பம் கருவைப் பாதித்து பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். அளவாக பரசிட்டமோலை உள்ளெடுத்தால் எந்தப் பாதிப்பும் இராது. பலருக்கு இதன் அர்த்தம் புரிவதில்லை. பரசிட்டமோலை அளவுக்கதிகமாக உள்ளெடுத்தால் உயிராபத்து பெரியவர்கள், சிறியவர்கள் எவருக்கும் ஏற்படலாமென இப்போது எல்லோரும் அறிவார்கள். ஆனால், அது அளவுக்கு மிஞ்சினால் மட்டுமே ஏற்படும் பிரச்சினையாகும். இதை எடுத்துக்கொண்டு பரசிட்டமோல் ஆபத்தானது என்ற முடிவுக்கு வந்து விட்டிருந்து பரசிட்டமோலை எடுத்து வரவே கூடாது என்று தவறாக பலர் தீர்மானிக்கின்றனர். 'அளவாக' என்ற இந்தச் சொல் இங்கே முக்கியமானது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சுதானே! அதுபோலவே பரசிட்டமோலும் அளவாக பயன்படுத்த வேண்டிய அவசியமான மருந்தாகும். அதுவும் கர்ப்ப காலத்தில் தாய்க்கு காய்ச்சல் வந்தால் காய்ச்சலுக்கு காரணம் கண்டு சிகிச்சை அளிக்க முன்பே பரசிட்டமோலை உள்ளெடுக்கத் தொடங்கிவிட வேண்டும். எப்படியாவது காய்ச்சலை ஒழித்துக்கட்டி விட இவ்வகையில் முயற்சிக்க வேண்டும். அதற்காக அளவுக்கதிகமாக பரசிட்டமோல் வில்லைகளை உபயோகிக்கக் கூடாது. ஒரு நாளில் அதாவது 24 மணித்தியாலத்தில் 6 மணித்தியாலங்களுக்கு ஒருதடவை 2 பரசிட்டமோல் மாத்திரைகளை (500mgX2=16) உட்கொள்வதில் ஆபத்தில்லை. எனினும் இவ்வாறு உட்கொண்டும் காய்ச்சல் அடங்கவில்லை அல்லது பரசிட்டமோல் உட்கொண்டு 6 மணித்தியாலங்கள் முடிவதற்கிடையில் காய்ச்சல் மீண்டும் வந்துவிடுகிறதாயின் பரசிட்டமோலின் அளவை கூட்டிக் கொண்டே போகக்கூடாது. இங்கேதான் அந்த "அளவு" என்ற முக்கியமான கோட்டைத் தாண்டக்கூடிய ஆபத்து காணப்படுகிறது. இப்போது காய்ச்சலின் காரணத்தைக் கண்டுபிடித்து அதற்குரிய சிகிச்சை பெறவேண்டும். நுண்ணுயிர் கொல்லி (Antibiotic) மருந்துகள் கூட பாதுகாப்பான வகைகள், கர்ப்ப காலத்தில் ஆபத்தின்றி பாவிக்கக் கூடியவை உள்ளன. அவற்றையே உங்கள் மருத்துவர் உங்களுக்குத் தந்திருப்பாரென நினைக்கிறேன். தகுதிவாய்ந்த மருத்துவர் தந்த மருந்து எனில் ஆபத்தில்லை. அதைவிடுத்து மருந்துக் கடையில் இருப்பவரிடம் வாங்குவது தான் ஆபத்தான விளையாட்டாகும். இவ்வளவு தொகை மருந்து மாத்திரைகளை உட்கொண்டேனே; இதனால் கருவிலுள்ள குழந்தைக்கு ஆபத்தாக முடியுமோ என அஞ்சவேண்டியதில்லை. உண்மையில் இந்த மருந்துகள் இல்லாவிடின் சிறுநீர் தொற்று உங்களில் உக்கிரமடைந்து காய்ச்சலும் கட்டுக்கடங்காது அதிகரித்து குழந்தைக்கு உயிராபத்து அல்லது குறை மாதப் பிரசவம் ஆகிய இரண்டுமே கூட ஏற்படலாம்.

கர்ப்ப காலத்தில் எந்த மருந்தும் உட்கொள்ளக் கூடாது என்கிற தப்பான எண்ணம் சமூகத்தில் வேர் விட்டிருப்பது எமக்குத் தெரியும். 'எந்த மருந்துமே' என்பதான சொற்றொடர் மிக முக்கியமானது. சில மருந்துகள் கர்ப்ப காலத்தில் எக்காரணம் கொண்டும் உட்கொள்ளவே கூடாது. இந்த மருந்துகள் எவை எவை என்பது உங்கள் டொக்டருக்கு நன்கு தெரிந்திருக்கும்.

இவற்றைத் தவிர்த்துவிட்டு இது போன்ற சந்தர்ப்பத்தில் தேவையான ஆபத்தற்ற மருந்துகளை கட்டாயம் உட்கொண்டே ஆக வேண்டும். இது தவிர இன்னும் பல மருந்துகள் கர்ப்பத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா? இல்லையா? என்பது இன்னும் சரியான பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப் படவில்லை. எனவே ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக இம்மருந்துகளை கர்ப்பகாலத்தில் தவிர்ப்பது நல்லது தான். அவ்வாறுதான் அம்மருந்து உற்பத்தியாளர்களும் மருந்துடன் வரும் அறிவுறுத்தல் தாளில் குறிப்பிடுகிறார்கள். ஒரு வேளை எதிர்காலத்தில் இந்த மருந்துகள் கர்ப்ப காலத்தில் பாவிக்கப்படக் கூடும் என்று மருத்துவ விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சி முடிவுகளினூடு நிரூபிக்கப்பட்டால் அவற்றையும் கர்ப்ப காலத்தில் பயன்படுத் தப்படலாம். உதாரணமாக நீரிழிவு வியாதிக்குப் பயன்படுத்தும் Metformin மாத்திரையானது முன்பு கர்ப்பகாலத்தில் பாவிக்கப்பட முடியாது என்றே டொக்டர்கள் நோயாளிகளுக்குச் சொல்லி வந்தனர். இன்றோ அதனால் ஆபத்தில்லை என்ற முடிவுக்கு டொக்டர்கள் வந்துவிட்டனர். அது எப்படி அந்தக் காலத்தில் Metformin உட்கொள்வது கர்ப்பத்துக்கு ஆபத்து என்றும் இப்போது திடீரென்று "அதனால் ஆபத்தில்லை" என்றும் கூறுகிறீர்கள் என ஒருவர் கேட்கலாம். ஆம் அந்தக் காலத்தில் Metformin மாத்திரை இருந்தாலும் அது கர்ப்பத்தில் ஆபத்தற்றது என்பது அப்போது சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை; இன்றோ இது சரிவர நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே ஆபத்தில்லை என டொக்டர்களாகிய நாம் துணிந்து சொல்கிறோம். இவ்வாறு நான் எழுதுவதால் "ஆஹா டொக்டரே அனுமதி தந்துவிட்டார்" என புளகாங்கிதமடைந்து பாமசியில் உள்ள சகல மருந்துகளையும் வாங்கி உங்கள் எண்ணத்துக்கு குடித்துத் தள்ள வேண்டாம். எது எது பாதுகாப்பானது என்பதை உங்கள் டொக்டரிடம் மட்டும் கேளுங்கள். பாமசியில் இருப்பவரிடம் தயவுசெய்து எதையும் கேட்காதீர்கள். 'அரை வைத்தியன் ஆயிரம் பேரைக் கொல்வான்' என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பாமசியில் சில நாட்கள் வேலை செய்து சில மருந்துகளை பழகியதும் அவர்களும் டொக்டர்களுக்கு சமமானவர்கள் என்று ஒருபோதும் நினைக்கக் கூடாது. சாதாரண மக்களை விட பாமசி விற்பனையாளருக்கு மருந்துகளை பற்றிய அறிவு அதிகம் என்பதால் அவர் டொக்டருக்கு சமமானவர் என்று கருதி விடக் கூடாது. சில டொக்டர்கள் நோயாளிகளுடன் சரியாக உரையாடி இந்த விபரங்களை சரியாக விளக்கப்படுத்தாமல் விடுவதால் நோயாளிகள் வேறு வழியின்றி பாமசியில் உள்ள விற்பனையாளரிடம் விபரம் கேட்டறிய முற்படுகின்றனர். இவ்வாறான ஒருசில டொக்டர்களை கைவிட்டு சரியாக உரையாடும் டொக்டரை கண்டுபிடியுங்கள். அப்போது பாமசியில் உள்ளவர்களிடம் தப்புத் தப்பாக விபரங்கள் கேட்டறியும் அவசியம் ஏற்படாது. இதுதவிர கர்ப்பத்தின் பிந்திய மாதங்களான 7ம், 8ம், 9ம் மாதங்களின் போது இருப்பதை விட அதிக அவதானமாக கர்ப்பத்தின் முதல் 3 மாதங்களில் இருக்க வேண்டும். இந்த முதல் 3 மாதத்தில் தான் உறுப்பு விருத்தி முக்கியமாக நடக்கிறது.




எனவே, ஆபத்தான மருந்துகளை இந்த முதல் 3 மாதத்தில் தவிர்ப்பது நல்லது தான். பிந்திய மாதங்களில் இவ்வளவு தூரம் ஆபத்து கிடையாது. எனினும் உங்கள் டொக்டரின் முடிவே இறுதியானது.

**வாசகர்களே!**
உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் எஸ்.சுரேந்திரகுமார் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உடல் நலம்
சுடர் ஒளி வாரமலர்,
இல.361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

# திராட்சைப் பழம் புற்றுநோயைத் தடுக்கின்றது



திராட்சைப் பழத்தில் உள்ள கப்ளேவனாய்டுகள் புற்றுநோய் ஏற்படுவதைத் தடுப்பதாக சமீபத்திய ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. புற்றுநோய் வகையில் மூன்றான பெருங்குடல் புற்றுநோயால் ஆண்டிற்கு 5 லட்சம் பேர் உலகம் முழுவதும் மரணமடைகின்றனர்.

இதனை சாதாரண திராட்சைப் பழம் தடுத்து விடுகிறதாம். தினசரி உணவில் கறுப்புத் திராட்சை சாப்பிட்டால் போதுமாம் பெருங்குடல் புற்றுநோய் ஏற்படுவதில்லை என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

திராட்சை ரசத்தில் 87.12 சதவிகிதம் தண்ணீரும், பொட்டாசியம் தாது உப்பும் இருக்கின்றன. இதுவே மருந்துப் பொருளாகச் செயல்படுகிறது. கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் திராட்சைப் பழத்தில் இருந்து பிரித்து எடுக்கப்படும் ரேஸ்வெரட்ரோல் என்ற சத்துப்பொருள் 100 சதவிகிதம் பெருங்குடல் புற்றுநோயைக் குணப்படுத்தி விடுவதை ஆய்வு மூலம் கண்டறிந்துள்ளனர். பெருங்குடல் புற்றுநோயாளிகளுள் ஒரு பிரிவினருக்கு 20 மில்லி கிராம் ரேஸ்வெரட்ரோல் மாத்திரை தினமும் கொடுக்கப்பட்டது.

இரண்டாவது பிரிவினருக்கு 120 கிராம் திராட்சைப் பழப்பொடியைத் தண்ணீரில் கலந்தும் அருந்தச் சொன்னார்கள். மூன்றாவது பிரிவினருக்கு 80 கிராம் திராட்சைப் பழப் பொடியை கலந்து அருந்தி வரச்சொன்னார்கள். சில நாட்களுக்குப் பின்னர் 80 கிராம் திராட்சைப் பழப் பொடியை அருந்தி வந்தவர்களுக்கு மட்டும் பெருங்குடல் புற்றுநோய் குறிப்பிட்ட அளவிற்கு குணமாகி இருந்தது.

அதிக அளவு திராட்சைப் பழப் பொடியும், மாத்திரையும் சாப்பிட்டவர்களைவிடக் குறைந்த அளவு திராட்சைப் பழப்பொடி மிகுந்த ஆற்றலுடன் செயல்பட்டு குணப்படுத்தியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தினசரி 50 முதல் 100 கிராம் வரை திராட்சைப் பழங்களை மென்று உண்பதால் ரேஸ்வெரட்ரோல் எளிதில் கிடைக்கும். திராட்சையில் உள்ள செயல்படும் கூட்டுப்பொருள் மிகுந்த ஆற்றலுடன் புற்றுநோயைத் தடுக்கிறது என்றும் ஆய்வாளர் கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

37

நா.யோகேந்திரநாதன்

அன்று அதிகாலை விதானையார் குளித்து விட்டுக் கோவிலுக்குப் புறப்படத்தயாரான போது சங்கடப் படலையைத் திறந்து கொண்டு சரவணை வருவதை அவதானித்து விட்டு முன் போட்டிக் கோவுக்கு வந்தார்.

"என்ன சரவணை விடியக் காலமை?" என ஆச்சரியத்துடன் கேட்டார்.

"பெரிசாய் ஒண்டுமில்லை. உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணும்" என்றான் அவன்.

சில நாட்களுக்கு முன்பு மணியாறன் மூலையில் ஒட்டப்பட்ட தமிழரசுக் கட்சியின் சுவரொட்டிகளைக் கிழிப்பித்ததைப் பற்றித் தான் அவன் கேட்கப் போகிறான் என்றே விதானையார் கருதினார். அவர் ஏற்கனவே அதை எதிர்பார்த்திருந்தார்.

"ம்... அப்படி என்னத்தைக் கதைக்கப் போறாய்?" என்று விட்டு மால் நோக்கி நடந்தார். அவரைப் பின்தொடர்ந்த சரவணையை வாங்கிலில் இருக்கும் படி கூறிவிட்டு தான் கதிரையில் அமர்ந்து கொண்டார்.

"ம்.. சொல்லு சரவணை?"

சரவணை ஒரு சிறிய தயக்கத்துடன் ஆரம்பித்தான். "ஐயா இனிமேல் என்னை ஒருதரும் சரவணை எண்டு கூப்பிட வேண்டாம்."

விதானையார் ஆச்சரியத்துடன் அவனை நோக்கி விட்டு "ஏன்.. என்ன நடந்தது?"

"நான் வீரபாகு முதலாளியோடை திருகோணமலைக்கு போனபோது என்ரை பொன்னுக்குட்டியன் எண்ட பேர் என்ரை சாதியைக் காட்டிக் குடுத்திடும் எண்டு நினைச்சு என்ரை பேரை சரவணை எண்டு மாத்தினனான். என்ரை சாதியை மறைச்சன். அப்ப நாங்கள் குறைஞ்சவங்கள் எண்டு நானே ஏற்றுக் கொண்ட மாதிரி தானே!"

அவனின் வார்த்தைகள் அவனுள் ஏதோ ஒருவித மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது போல் தோன்றியது விதானையாருக்கு.

"சரி. இப்ப அதுக்கு என்ன?" எனக் கேட்டார் அவர்.

"ஐயா! ராத்திரி கூட்டத்துக்குப் பிறகு நான், நீங்கள், குடியரசர், பொன்னம்பலம், சிங்கன் எண்டு எல்லாரும் சமன் எண்டு தெரிஞ்சு போச்சு. இனி ஏன் நான் சாதியை மறைக்க வேணும். பொன்னுக் குட்டியன் எல்லாருக்கும் சமனானவன்."

பொன்.கந்தையா தேர்தலில் போட்டியிட வந்ததால் ஏற்படவுள்ள ஆபத்தைப் புரிந்து கொண்டார். எனினும் அந்த நேரத்தில் அவனை ஆமோதிப்பது போல் நடிப்பதை விட வேறு வழியிருக்கவில்லை.

விதானையார் மெல்லச் சிரித்தவாறே "அது தான் நீ சிங்கனை மாப்பிளையாக்கி செய்து காட்டிப் போட்டியே" என்றார்.

"அது நான் இல்லை ஐயா. என்ரை பெட்டை."

"உன்ரை பெட்டை உன்னைப் போலை தானே இருப்பாள்" என்றார் அவர் மெல்லிய ஒரு சிரிப்புடன்.


"ஐயா. என்ரை பிள்ளை இனி பொன்.கந்தையா வின்ரை எல்லாக் கூட்டங்களிலும் பேச வேணும். உங்கடை பிள்ளையும் என்ரை பிள்ளையும் ஒரே மேடையிலை நிற்க வேணும்."

விதானையாருக்கு திடீரென நெற்றிப் பொட்டில் ஏறிய கோபத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார். எனினும் சமாளித்தவாறு, "அதுக்கென்ன கந்தப் பண்ணையட்டை சொல்லுறன்" என்றார். அவர் மனதுக்குள் சொர்ணத்தை மேடை ஏற்றுவதில்லை என்று முடிவு செய்து கொண்டார்.

அவர் கதையை மாற்றும் முகமாக "என்ன மணியாறன்மூலையிலை தமிழரசுக் கட்சி நோட்டீஸ் ஒட்டியிருக்கிறாய்" எனக் கேட்டார்.

"அது ஏதோ வீரபாகு முதலாளி தந்தார் எண்டதுக்காகக் கொண்டு வந்து ஒட்டினனான். இப்ப நான் எங்கை நிற்க வேணுமெண்டு எனக்கு விளங்கியிட்டுது. இனி நான் கந்தையா தம்பி பக்கம் தான்" என்றான் அவன் உறுதியாக.

எல்லாமே விதானையாரின் எதிர்பார்ப்புக்கு மாறாக இருப்பதை எண்ணிய போது வியப்பாகவும் ஒருவித குழப்பமாகவும் இருந்தது. சின்னவன் மேல் தான் வைத்திருக்கும் அன்பும் முத்துலட்சுமி தனது பிள்ளையென்பதும் ஒருமுறை நினைவில் வந்து போனது. ஆனால் அதுவேறு, பொன்னுக்குட்டி சொல்வது வேறு என நினைத்துத் தன்னைத் திருப்திப்படுத்திக் கொண்டார். அவர் சின்னனில எவ்வளவு தான் அன்பு வைத்திருந்த போதிலும் அவனைக் கனகாம்பிகைக்குச் சமனாக ஏற்பதை அவரின் மனம் என்றுமே எண்ணிக் கூடப் பார்த்த தில்லை. பொன்னுக்குட்டி போன்றவர்களின் உணர்ச்சிகளை அவர்கள் பக்கம் நிற்பது போல்



நின்று திசை திருப்பி விடுவதில் மிகுந்த அனுபவம் பெற்ற இவர் அவன் சொன்ன விடயங்களைப் பெரிதாக எடுக்கவில்லை.

"பொன்னு நேற்று பெட்டை கவலை தாங்காமல் மேடையிலை அழுது போட்டாள். அடிக்கடி மேடையிலை ஏத்த அவள் சிங்கனை நினைச்சு அழுதே செத்துப் போவள். எதுக்கும் யோசிச்சு செய்" என்றார் விதானையார்.

"சரியய்யா நான் வாறன்" என்று கூறி விட்டுப் புறப்பட்டான் சரவணை.

காலை ஏழு மணியளவில் கமலியின் வீட்டுக்கு வந்த முத்துலட்சுமி அறைக் கதவு திறந்திருக்கவே உள்ளே எட்டிப் பார்த்தாள். கமலி சிங்கனின் படத்தை நெஞ்சுடன் அணைத்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள்.

முத்து மெல்ல "அக்கா" எனக் கூப்பிட்டாள். திடுக்கிட்டு விழித்த கமலி "ஓ... நல்லாய் நேரம் போட்டுது" என்றவாறே எழுந்து சிங்கனின் படத்தை ஒருமுறை முத்தமிட்டு விட்டு அதைச் சுவரில் மாட்டினாள். கமலி தலையைக் கோதி முடிந்து விட்டு "இரடி" என்றவாறு தானும் எதிர்த் திண்ணையில் அமர்ந்து கொண்டாள்.

"என்னக்கா.. ராத்திரி கூட்ட மேடையிலை கவலையிலை அழுது போட்டியள் எண்டு மச்சான் சொன்னார்."

கமலி ஒருமுறை சிங்கனின் படத்தைப் பார்த்து விட்டு "கவலை என்டைக்கும் மாறாத கவலை தான். ஆனால் நான் அழுதது கவலையிலை இல்லை" என்றாள். அவள் அப்படிச் சொன்ன போது அவள் முகம் சற்றுச் சிவந்தது போல் முத்துவுக்குத் தோன்றியது.

"அப்ப..." என இழுத்தாள் அவள்.

"தாங்க முடியாத ஆத்திரத்திலை..." என்றாள் கமலி.

முத்து கமலியின் கோபாவேசத்தின் அர்த்தத்தை நன்றாகவே புரிந்து வைத்திருந்த படியால் அவளின் வார்த்தைகள் ஆச்சரியத்தை ஏற்படுத்த வில்லை.

கமலி தொடர்ந்தாள்.

"அவ்வளவு பெரிய சனக் கூட்டத்தைக் கண்ட வுடனை ஒருக்கால் தடுமாறித்தான் போனனான். பிறகு ஏதோ ஒரு ஆவேசம் வந்தது போலை இருந்தது. வாயிலை வந்ததைப் பொழிஞ்சு விட்டன்."

"ஒவ்வொரு கூட்டத்திலையும் உங்களைப் பேச வைக்க வேணும் எண்டு ராத்திரியே கதைச் சவையாம் எண்டு மச்சான் சொன்னவர்" என்றாள் முத்து.

கமலி உறுதியுடன் சொன்னாள். "அவை கேட்டாலும் கேளாட்டியும் நான் பேசுறது தான்"

கமலியின் துணிச்சல், உறுதி என்பன மீது முத்துவுக்கு உயர்ந்த மதிப்பு இருந்த போதிலும் தன்னால் அப்படி இருக்க முடியுமா என முத்து தன்னைத் தானே கேட்டுக் கொள்வதுண்டு.

அங்கு வந்த இளையவன் தாவாரத்தில் சாத்தி வைக்கப்பட்டிருந்த போத்தலை எடுத்து சரவணைக்கான காலைக் கள்ளை அதற்குள் ஊற்றியவாறே "கமலி ராத்திரி ஒரு கலக்கு கலக்கி விட்டாய்" என்றான்.

"அப்ப சொர்ணத்தின்ரை பேச்சு சரியில்லையே?" என வெடுக்கென்று கேட்டாள் கமலி.

இளையவன் "ஆர் அப்படி சொன்னது? அது விஷயங்களை வடிவாய் விளங்கப்படுத்திச்சுது. நீ நாலு வசனத்திலை சனத்தை உசுப்பேத்தி விட்டிட்டாய்" என்றான் இளையவன். சொர்ணத்தைப் பற்றிக் கதைக்கும் போது மனதில் ஒருவித குளிர்மை படர்வதை அவன் உணர்ந்து கொண்டான். ஏனோ அதைத் தவிர்க்க வேண்டும் என்ற எண்ணம் அப்போது எழவில்லை. கமலி கேட்டாள் "என்ன இண்டைக்கு நேரத்துக்குச் சீவி முடிச்சுப் போட்டாய்?"

"ஓ.. நெல்லியடிக்கு ஒருக்கால் போக வேணும். ஆறுமுகத்தாரைக் கொண்டு ஒரு புதுப்பாளைக் கத்தி அடிப்பிச்சனான். அதைச் சாணை பிடிக்க வேணும்"

"அப்ப பழங்கத்தியை என்ன செய்யப் போறாய்?" எனக் கேட்டாள் கமலி.

அவன் மெல்லச் சிரித்துக் கொண்டே "என்ன செய்யிறது. கொண்டு போய் இறப்பிலை செருகி விட்டால் ஆபத்தந்தரத்துக்கு உதவும்" என்றான்.

கமலி "அதை எனக்குத் தாவன்" எனக் கேட்டாள்.

"ஏனக்கா உனக்குப் பாளைக் கத்தி?" என வியப்புடன் கேட்டாள் முத்துலட்சுமி.

கமலியின் முகம் இறுகியது.

"பொன்னம்பலம் எப்பவெண்டாலும் ஒருநாள் வெளியிலை வருவன் தானே... அப்ப அவன்ரை கழுத்தைச் சீவ வேணும்."

இளையவன் சிரித்துக் கொண்டே "புரோக்கர் வேலை பாத்துக் கொண்டு காவாலி கடைப்புலியாய் திரிஞ்சவனைப் பெரிய மனுஷனாக்கப் போறியே?" எனக் கேட்டான் இளையவன்.

கமலி வியப்புடன் கேட்டாள். "நீ என்ன சொல்லுறாய்?"


"அப்படி நீ செய்தால் அவங்கடை சனமெல்லாம் தங்கடை சாதிக்காகச் செத்தவன் எண்டு போற்ற ஆரம்பிச்சிடும். ஆனால் இப்ப ஒவ்வொரு தவணைக்கும் கைவிலங்கோடை சங்கிலியாலை பிணைச்சு றோட்டாலை கொண்டு வாற அவமானம் அவர்கள் தொடர்ந்து பட வேணும். தூக்கிலை தொங்குறதை நினைச்சுப் பயந்து பயந்தே சாகவேணும்." இளையவன் சொல்வதில் நியாயமிருப்பது போல அவளுக்குத் தோன்றிய போதும் சிங்கன் ஒற்றைப் பனையடியில் சூடுபட்டு விழுந்து கிடந்த காட்சி மனதில் தோன்றி அவளின் கொலைவெறியை நியாயப்படுத்தியது.

"நீ என்னத்தைச் சொல்லு. என்ரை கையாலை அவனை வெட்டினால் தான் சிங்கன்ரை ஆவி சாந்தியடையும்" என்றாள் கமலி. அவளின் முகம் மேலும் சிவந்து இறுகியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சையிலும் முறைகேடா?



■ ஹரன்

இலங்கையின் கல்வித்துறைப் பரீட்சைக் கட்டமைப்பும் சீர்குலைந்து போவதான தோற்றப்பாடு உருவாகி வரும் தகவல்கள் வெளியாகி வருகின்றன. உயர்தரப் பரீட்சையில் ஏற்கனவே எழுந்துள்ள தொடர் குற்றச்சாட்டுகள், அதன் பின்னரான மாணவர்களின் போராட்டங்கள் ஓய்வதற்கிடையில் மரத்தில் இருந்து விழுந்தவனை மாடேறி மிதித்ததைப் போல நடந்து முடிந்த ஐந்தாம் புலமைப்பரிசில் பரீட்சையும் குழப்பத்தில் முடிந்ததான தகவல்கள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமிருக்கின்றன. தென்னிலங்கைப் பகுதியிலேயே இப்பிரச்சினை சூடு பிடித்திருப்பதாக தென்னிலங்கையிலிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவித்த வண்ணமுள்ளன.

ஏற்கனவே 2012 உயர்தர மாணவர் அமைப்பு என்ற பெயரில் ஒரு அமைப்பு உதயமாகி கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடாத்தி உயர்தரப் பரீட்சையில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் குறைபாடுகள் தொடர்பில் போராடப் போவதாகவும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் பின் தென்னிலங்கையின் சில பகுதிகளிலிருந்து வெளிவரும் தகவல்களும் முறைப்பாடுகளும் அரசுக்கு மேலும் சிக்கலானதாக அமைந்துள்ளன. ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை கூட திறம்பட நடாத்த முடியாத அரசுக்கு ஆட்சிக் கதிரையில் இருப்பதற்கு எந்த அருகதையும் இல்லை என எதிர்க்கட்சிகளும் தம்பாட்டுக்கு குரலெழுப்பி வருகின்றன.

கடந்த மாதம் 26 ஆம் திகதி நாட்டில் உள்ள 1000ற்கு மேற்பட்ட பரீட்சை நிலையங்களில் சுமார் 3 இலட்சம் மாணவர்களை உள்ளடக்கியதான புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெற்றது. பரீட்சை நடைபெற்ற தினத்தன்றே பரீட்சையை வெற்றிகரமாக நடாத்தி முடித்துவிட்டதாக அரசு புளகாங்கிதம் அடைந்தது. ஆனால் அரசின் இந்த நிம்மதி, சந்தோசம் நிலைப்பதற்கு இடையில் அதிலும் குழப்பம் நிகழ்ந்ததான தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக கொழும்பில் வைத்து கருத்துத் தெரிவித்த ஆசிரியர் சேவைச் சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க கடந்த ஒகஸ்ட் 26 ஆம் திகதி நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தவறுகள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாக பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அதாவது குறித்த புலமைப்பரிசில் பரீட்சையின் 2ம் பகுதி வினாப்பத்திரத்திற்கான வினாக்கள் பரீட்சை இடம்பெற்ற தினத்திற்கு முன்தினம் இரவும், பரீட்சை தினத்தன்றும் நாட்டின் பல பகுதிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. முதல்நாள் இரவு (25ம் திகதி) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தனியார் கல்வி நிலையங்களின் ஊடாக பரீட்சை வினாத்தாளின் 2 ஆவது வினாப்பத்திரத்தில் அடங்கியுள்ள சில வினாக்கள் பெற்றோருக்கும் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை ரம்புக்கன, பொல்காவல, கந்தளாய், அநுராதபுரம், கம்பஹா ஆகிய பகுதிகளில் உள்ள சில தனியார் கல்வி நிலையங்களுக்கு முதல் நாள் இரவு வழங்கப்பட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அது மாத்திரமல்லாமல் புலமைப் பரீட்சையில் இடம்பெற்ற ஆங்கில மொழி, தமிழ்மொழி, தேசியக் கொடி சம்பந்தமான கேள்விகளும் கட்டுரைத் தலைப்பும் சில மாணவர்களுக்கு பரீட்சையின் போது வழங்கப்படும் அரை மணிநேர இடைவெளியின் போது வழங்கப்பட்டதாக நமக்கு தகவல் கிடைத்ததாகவும் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் கம்பஹா சிறிபோதி வித்தியாலயம், களனி குருகுல வித்தியாலயம், களனி தர்மலோகா மகா வித்தியாலயம், பொல்காவல மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பரீட்சை இடம் பெறுவதற்கு முதலே பரீட்சை கேள்விகள் மாணவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே, இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பிலான விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் பரீட்சையை இரத்துச் செய்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான தீர்வினை வழங்க ஏதுவாக பரீட்சையை மீண்டும் நடாத்த வேண்டுமெனவும் மஹிந்த ஜெயசிங்க அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இவரின் குற்றச்சாட்டு 5ம் தர புலமைப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பரீட்சை இடம்பெறுவதற்கு முன் வினாத்தாள் வெளியாதல் என்பது சாத்தியப்படுமா என்ற சந்தேகம் தாங்கிய கேள்வி பொது மக்கள் மனதில் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டுள்ளது. பரீட்சை மண்டபத்திற்கு வினாத்தாள் வருவதற்கு முன் நன்றாக வினாத்தாள் வெளித் தெரியாதபடி சீல் வைக்கப்பட்டு பொலிஸாரின் வழித்துணையுடன் கொண்டு வரப்படும் நிலையில் இந்த முறை எவ்வாறு இத்தகைய ஒரு குற்றச்சாட்டு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டது என்ற குழப்பங்கள் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளன. அத்துடன் பரீட்சை இடம்பெறும் தினத்திலேயே பரீட்சை மண்டபங்களுக்கு கல்வித் திணைக்கள வாகனங்கள் மூலமாக விநியோகிக்கப்படும் பரீட்சை வினாத்தாள்கள் ஆசிரியர் சேவைச் சங்கம் குறிப்பிடுவது போல முதல்நாள் எவ்வாறு வெளியாகியிருக்கலாம் என்ற சந்தேகமும் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இது தொடர்பாக கருத்து தெரிவித்த அரசில் அங்கம் வகிக்கும் சிரேஸ்ட அமைச்சர் ஒருவர் எதிர்கட்சிகள் தமது அரசியல் வங்குரோத்து நிலையை மூடி மறைப்பதற்காக இத்தகைய கீழ்த்தரமான பிரசாரங்களை மேற்கொள்கின்றன எனவும் கல்வி சம்பந்தமான பிரச்சினைகளை பாரிய பிரச்சினையாக கிளப்பி கல்வி மீது மக்களும் மாணவர்களும் வைத்திருக்கும் நடவடிக்கையை சீர்குலைக்க முயல்வதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். அத்துடன் 93ஆம் ஆண்டும் தான் உயர்தரம் படித்த காலப் பகுதியிலும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலப்பகுதியிலும் இத்தகைய சில குழப்பங்கள் ஏற்பட்டதாகவும் ஆனால் அதை அன்று யாரும் அரசியலாக எடுத்து பூதாகரமாக்க காட்டவில்லை எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் தற்போதைய எதிர்க்கட்சிகள் தமது அரசியல் வங்குரோத்து நிலையை மூடி மறைக்க இத்தகைய கீழ்த்தரமான பிரச்சாரங்களை நடாத்துவதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் தம்மீது விரல் நீட்டி குற்றஞ்சாட்டுமாறும் தம்மீது சேறு பூச முயலுமாறும் ஆனால் கல்வித்துறையில் பரீட்சை கட்டமைப்பை சீர்குலைத்து பரீட்சை மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்க வேண்டாமென்றும் எதிர்கட்சிகளிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக எதிர்கட்சி அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் [illegible] திஸ்ஸ அத்தநாயக்க தரம் 5 புலமைப் பரீட்சை வினாத்தாளை கூட ஒழுங்காக தயாரித்து நீதியான முறையில் பரீட்சையை நடாத்த முடியாத அதிகாரிகளை தம்வசம் வைத்திருக்கும் அரசு அது தொடர்பில் வெட்கப்பட வேண்டுமெனவும், குறித்த பிரச்சினையோடு தொடர்புபட்டுள்ள அமைச்சர்கள் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கைகளை எடுக்க திராணியற்ற, வக்கற்ற அரசு ஆட்சியில் நீடித்து இருக்கும் தகைமையை இழந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டின் எதிர்கால சந்ததியின் வாழ்க்கையை பாதிக்கும் செயற்பாட்டிற்கு வழிசேர்க்கும் இத்தகைய கல்விச் சீர்கேடுகளுக்கான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்று உடனடியாக தவறை உணர்ந்து பதவி விலக வேண்டுமெனவும் இல்லையேல் மக்கள் அரசின் இத்தகைய கல்விச் சீர்கேடுகளுக்கு எதிராக அணிதிரண்டு அரசை ஆட்சிக் கதிரையை விட்டு அகற்றும் சூழ்நிலை ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் நிகழ்ந்ததாக குற்றஞ்சாட்டப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் பரீட்சைக்கு முதல் நாளிலும் பரீட்சை நடைபெற்ற நாளின் இடைவேளை நேரத்திலும் வினாக்கள் வெளியிடப்பட்டனவா என்பதை ஆராயும் நடவடிக்கையில் குற்றப்புலனாய்வுப் பிரிவு இறங்கியுள்ளது. கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவின் வேண்டுதலின் பேரில் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனின் உத்தரவுக்கமைய விசாரணைகளை நடாத்தப்பட்ட வண்ணமுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் முதற்கட்டமாக குற்றப்புலனாய்வுப் பிரிவு பரீட்சை ஆணையாளர் டபிள்யு.எம்.புஸ்பகுமார மற்றும் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரிடம் விசாரணைகளை நடாத்தி வாக்குமூலங்களை பதிவுசெய்துள்ளது. அத்துடன் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்படும் இடங்களுக்கு நேரடியாக சென்று புலனாய்வு விசாரணைகளை நடாத்தி வருவதான தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக பரீட்சை இடம்பெற்ற சில தினங்களின் இக்குற்றச்சாட்டுத் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யு.என்.புஸ்பகுமார குறிப்பிட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை நடாத்தும் பொறுப்பை குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளோம் எனத் தெரிவித்தார், அத்துடன் இது தொடர்பான விசாரணைகளை பரீட்சைத் திணைக்களத்தின் விசாரணைப் பிரிவினரிடமும் ஒப்படைத்துள்ளதாகவும் அவர்கள் இது தொடர்பான விசாரணைகளை நடாத்தி வருவதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மறுபுறத்தில் இக்குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தந்தி அனுப்பும் போராட்டத்தில் அநுராதபுரத்தை சேர்ந்த சில பெற்றோர்கள் ஈடுபட்டு வருவதாகவும் அவர்களுக்கு தோள்கொடுக்க தமது சங்கம் தயாராக இருப்பதாகவும் அத்துடன் எதிர்காலத்தில் ஏனைய பிரதேச பெற்றோர்களையும் ஒன்றிணைத்து ஜனாதிபதிக்கு தந்தியனுப்பும் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது. அரசு இப்போராட்டத்திற்கு செவிசாய்த்து உரிய தீர்வினை வழங்காமல் செயற்படுமாக இருந்தால் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் பெற்றோர்களை ஒன்றிணைத்து வீதியில் இறங்கி பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தவும் நாம் தயங்க மாட்டோம் எனவும் ஆசிரியர் சேவை சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை 10 வயது பிஞ்சு மாணவர்களை பந்தயக் குதிரைகளாக்கி அதில் பெற்றோரும் ஆசிரியர்களும் சவாரிசெய்யும் 5ம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை தேவைதானா என்ற கேள்வியும் ஏற்கனவே எழுந்திருந்தது. தேசிய மற்றும் பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் நோக்கில் பல தசாப்தங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பரீட்சையின் போக்கு சுயகௌரவத்திற்கான பெற்றோரின் போராட்டம் என வர்ணிக்கப்படும் அளவிற்கு நிலைமாறியுள்ள நிலையில் கடந்த புலமைப்பரிசில் பரீட்சை பரபரப்பை ஏற்படுத்தி விசாரணை வரை சென்றுள்ளமை மக்களை அதிர்ச்சியுள் ஆழ்த்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் மொழி இடுப்புடைந்த போக்கு!

இரண்டாம் மொழிகள் ஒரே தேசமென சில வருடங்களுக்கு முன் தெருவெல்லாம் முழக்கக் கேட்டன. இன்று அவை நின்று போய் ஒரே நாடு, ஒரே மொழி என மௌனப் புரட்சி நடந்து, சிலைகள் காணாமல் போகும் தெய்வ நிந்தனைக் காலத்தில் கடந்த ஐந்து வருடங்களில் மலைநாட்டு தமிழர்கள் சிலரும், இரை நாட்டு சோனகர் சிலரும் யாழ்ப்பாண வன்னி வழி கொழும்பு தமிழர்களும் தமிழை சிங்களவரிடம் எவ்வாறு சீரணித்துள்ளார்கள் என்பதை எல்லாம் ஆலோசனை வாதிகள் வெட்கம் மறந்து வெளியில் சொல்ல வேண்டிய நேரமிது!

காரியங்கள் நடக்கும் மேசைகளில் குனிந்து கிடக்கும் கோவைகள் நகர வேண்டுமானால் தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகள் நிறைவேற வேண்டும். மக்கள் தமது தாய்மொழியில் கேட்கும் சேவைகளை வழங்க வேண்டும். ஏட்டுச்சம்பவங்கள் அப்படிதான் கூறுகின்றன. மலையக மக்கள் அதிகமாக உள்ள அம்பேகமுவ பிரதேச செயலகம் ஒரு மலையகத் தமிழ் உதவி அரசாங்க அதிபரின் கீழ் இயங்குவதுடன் அலுவலகம் பொகவந்தலாவ போன்ற நகருக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். முப்பது வருட மலையக மக்கள் சேவை செய்த மந்திரிமாருக்கு அதனை செய்ய முடியாத நிலை இருந்தது; இருக்கிறது. இனியும் இருக்கும். அவர்களின் இருப்புகள் எல்லாம் இல்லாமல் போய், மதிப்புகள் எல்லாம் மழுங்கிப் போகும் நிலை வந்துள்ளது.



இரத்தினபுரி தமிழர்களும், அம்பாறை முஸ்லிம்களும் இரண்டாம் மொழியாக சிங்களத்தை கற்காமலேயே எழுத, வாசிக்க, உரையாட கருமமாற்ற கூடிய தேர்ச்சியை பெற்றுக்கொண்டனர். தமது தொழில் தகைமைக்கும், பதவி உயர்வுக்கும் அரசகருமமொழியின் தேர்ச்சிகள் அவர்களுக்குத் தேவையாக இருந்தது. களுத்துறை, மொனறாகலை சிங்கள அதிபர்களுக்கு இருந்த ஒரே குறிக்கோள் ஊக்கப்படியை பெற்றுக் கொள்வதொன்றாகவே இருந்தன. எனவே பரீட்சை வினா, விடைகளை மனப்பாடம் செய்வது, பரீட்சை விடைகளை உதவியாகப் பெறுவது, பரீட்சை மண்டபத்தில் தாறுமாறாக நடந்து விரல் சூப்புவது, இதன் மூலம் இரண்டாம்மொழி தரச் சான்றிதழ் ஒன்றை கடிதவடிவில் பெற்றுக் கொண்டுள்ளமை மூலம் எவருக்கும் உதவாத பிரயோக கருமங்களை ஆற்றத் தொடங்கி உள்ளமையும் வெளிப்படையாக காணக்கிடக்கின்றன.


இரண்டாம் மொழிப் பிரயோகத்தில் 'போட்டுது வாருங்கோ' வென சில யாழ்ப்பாணப் பதங்களை கொடுத்து விட இலங்கை பண்டிதர் பரீட்சைக்கு நிகரான தோர் பரீட்சைத்திட்டத்தில் பெரும்பான்மை ஊழியர்கள் இணைக்கப்பட்டுள்ளதாகக் காட்டிச் சாதித்துள்ளார்கள்! இங்கு வளவாளர் அல்லது மொழி ஆலோசனையாளர் என்பவர்கள் ஐந்து வருடங்களில் கணிசமான பணம் பண்ணல்களை செய்து கொண்டார்கள் என்பதில் எவ்வளவும் ஐயமில்லை. அவர்களால் உருவாக்கப்பட்ட மொழி அமுலாக்க பணிப்பாளர்களால் அம்பாறை சோனகரும் இரத்தினபுரித் தமிழர்களும் ஐந்து விழுக்காடு வரையிலேயே நன்மையடைந்துள்ளார்கள் கொஞ்சம் தமிழ் தெரிந்த ஊழியர்களால் மேலும் தொந்தரவு, துன்பம், தமிழ்கொலை, கொச்சைமொழி பேசுதல் என புதிய ரூப தண்டனைகளை வைத்தியசாலை, கச்சேரி, பிரதேச சபைகளில் மக்கள் அனுபவித்து வருகிறார்கள்.

இரத்தினபுரியில் "ஒங்களுக்கு ரெண்டு நூறு தான் சல்லி கிடைக்குது?" என தொழிலாளர் வறுமைபற்றி வேட்பாளர் பேசுவது? 'ஸாஸ்ரீ' என பதுளை மாவட்டத்தில் இரண்டாம்மொழி அம்மணிகள் எழுதுவது, நாவலப்பிட்டி புகையிரத நிலையப் பெயர்ப்பலகையில் எழுதி வைத்த சொற்களையும், இட பெயர்களையும் சிங்கள கலாசாரப் பேணலுடன் சொல்லி முடிப்பது, கிராமிய வைத்தியசாலை மும்மொழி அறிவிப்புகளில் தமிழ்மொழியின் சொற்கள் மட்டும் உடைபட்டு எழுதிக் கிடப்பது, தோட்ட துரைமார் அரைகுறை கெட்டவார்த்தைகளால் தொழிலாளியை திட்டுவது இவை இன்னும் தொடரும் அவலங்கள்.

இவை அனைத்தையும் அனுபவிக்கும் மக்களிடம் வந்து 'ஒன்னா இருங்க ஒத்துமை நல்லது' என பேசினால், வலைக்குள் விழாமல் இருக்க மக்கள் தெரிந்திருப்பார்கள். அதற்காக காட்டிக்கொடுப்பவர்களுக்கு கொடி பிடிப்பார்களோ என எதிர்பார்க்க முடியாது.

**மலையகம்** — நிர்மல்

---



# கிழக்கின் எழுகதிர் மலைகளில்

யுத்த அவலங்களைத் தொடர்ந்து மக்களை ஒரு ஜனநாயக வாக்கெடுப்புக்கு செல்ல அரசாங்கம் அழைத்துள்ளது. வடக்கில் நடந்த நிகழ்வுகள் மெத்தச்சரியெனக் காட்டும் ஒரு வரைபடமாகவே இத்தேர்தல் முடிவுகளை வெளிப்படுத்த மந்திரி சபை தீர்மானித்திருந்தது. அதில் தமிழ் மக்களை வடக்கு, கிழக்கு எனப் பிரித்துப் பேசி, கிழக்கு மக்களை தமிழர் எனவும், முஸ்லிம் எனவும் பிரித்து, முஸ்லிம் மக்களை கிண்ணியா, ஏறாவூர், அக்கரைப்பற்று என பிரித்து, தமிழ் மக்களை படுவான்கரை, எழுவான்கரை, கோமாரி என பிரித்து தனித்தனி மனிதர்களை அதிகாரத்தில் வைத்து பிரித்தாளும் கொள்கைகளை முன்னெடுக்கவும் நினைத்து காரியமாற்றியது.

தம்புள்ள பள்ளிவாசல், ராஜகிரிய பள்ளிவாசல் பிரச்சனை, பாணமை பிள்ளையார் கோவில் பிரச்சனை என்பன தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரதேச எல்லைகள் கடந்தும் கொதிப்படையச் செய்துள்ளன. மத்திய மாகாண சபையின் உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏதோ வேற்றுக் கிரகத்தில் அவை நடந்துள்ளதாக கண் எடுத்தும் பாராமல் உள்ளனர். தமிழ் மூன்றுமை எமது உரிமை என சவால் விடும் இவர்கள் முஸ்லிம் மக்களின் பள்ளிவாசல் பிரச்சனையின் போது விருந்து சாப்பிடுவதிலும், பிள்ளையார் சிலை உடைப்பின் போது ஒரே கட்டவுட் போஸ்டரில் சிரிப்பதிலும் கூடிய கவனம் எடுத்தனர். ஒரு இராமனோ, இரண்டு கிருஸ்ணனோ இவை பற்றி பேசாமல் சிந்தித்து மக்களே வாருங்கள் என அழைத்து வந்தனர். அதாவது கொஞ்சம் சிந்திக்கும் மக்களையும் மயங்கச் செய்வதற்கே அவர்கள் கூப்பாடு போடுகிறார்கள்.

தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினை பற்றியெரிந்த போது கொடும்பாவிகளை எரித்தவர்கள் இன்று கூடிக் குலாவது, வெறோ ஆட்சியை பிடிக்க வேண்டும் என்பதற்காகவே அன்றி தமிழ் ஆள வேண்டும் என்ற கோரிக்கைக்காக அல்ல! அதேவேளை பலமுறை காலத்தையில் பயங்கரவாதம் தலை தூக்கிய போது இந்திய யாத்திரை போன சங்கங்கள், முள்ளிவாய்க்கால் யுத்த நிகழ்வுகள் அவ்வளவு மோசமாக இல்லை என மனசாட்சிக்கு விரோதமாக இந்திய தூதர்களிடம் பேசும் தலைமைகள் இனி மலைநாட்டை காடாக்கி விட்டே தமது பதவிகளை காப்பாற்றும் என்பதை மக்கள் அறிந்துள்ளார்கள். வெறுப்படைந்துள்ளார்கள்.

திருமலையிலும், அம்பாறையிலும் வாழும் இந்திய வம்சாவழி மக்கள் எல்லா கொடுமைகளையும் பார்த்து அனுபவித்தவர்கள். அவர்கள் எந்தப் போலி தலைமையையும் தூக்கி எறிந்து விடுவார்கள். அதன் எதிரான அலை அங்கு மட்டுமல்ல இனி நுவரெலியாவிலும், கண்டியிலும் நிச்சயமாக பிரதிபலிக்கக் காட்டும் என பொது மக்கள் நினைப்பதிலும் உண்மைகள் உள்ளன.



— நிர்மல்

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நக்குவாவைக்கு வந்து முகாம் அமைக்கும் சங்கங்கள் தமது இருப்பை மட்டுமே உறுதிப்படுத்தும். மக்கள் பிரச்சினையின் போது தனித்தனியாக பிரிந்து முடிவுகளை எடுப்பார்கள். தீர்வுகளை மட்டும் தடுத்து ஜெயிப்பார்கள். இவை சப்ரகமுவ பல முன்றுகளை பாரானோ!

---

## உலகின் மிகப்பெரிய கடல் பூங்கா திறப்பு

அவுஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள குக் தீவில் உலகின் மிகப்பெரிய கடல் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. பசிபிக் கடல் பிராந்தியத்தில் உள்ள இந்தப் பூங்கா 4 லட்சத்து 11 ஆயிரம் சதுர மைல் பரப்பளவு கொண்டது. இந்த பூங்கா பிரான்சை விட 2 மடங்கு பெரியதாகவும், அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனை விட பெரியதாகவும் உள்ளது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தாறு வயதில் ஐம்பது கணவர்களா ?



சமூகச் சீரழிவுகள் தொடர்பான நம்ப முடியாத பல செய்திகள் இன்று ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பாலியல் வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய செய்திகளுடன் இவ்வாறெல்லாம் நடக்குமா? என வியக்கக்கூடிய, வெறுக்கத்தக்க பல செய்திகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அண்மைய நாட்களாக தமிழக ஊடகங்களில் பரபரப்பாகிக்கொண்டிருப்பது, ஒரு பெண் ஐம்பது பேரைத் திருமணம் செய்து ஏமாற்றியதான செய்திதான். இருபத்தாறே வயதான ஒரு பெண் எப்படி ஐம்பது பேரைத் திருமணம் செய்திருக்கக் கூடும் என்பது நம்பமுடியாததாகவே இருக்கின்றது. ஆனாலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களை அவர் திருமணம் செய்திருக்கலாம் அல்லது அவர்களோடு தொடர்பு வைத்திருக்கலாம் என்றே நம்பப்படுகின்றது. பாதிக்கப்பட்டதாகக் கூறும் அப்பெண்ணின் கணவர்கள் என்று கூறப்படுபவர்களே புகார்களையும் கொடுத்திருக்கின்றார்களாம். எனினும், ஊடகங்கள் இப்பெண் குறித்த தகவல்களை ஊதிப்பெருப்பித்து விற்றுத்தள்ளி விட்டதாகவே சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். தலைமறைவாகியிருந்த அப்பெண் தற்போது பொலிஸாரிடம் பிடிபட்டு சிறையிலடைக்கப் பட்டுள்ளார். அவர் பிடிபடுவதற்கு முன்னர் தமிழகத்திருந்து வெளிவரும் 'நக்கீரன்' பத்திரிகைக்கு பேட்டியொன்றைக் கொடுத்திருக்கிறார்.

கேரளப்பெண்ணான அவரின் பெயர் சஹானாஸ். இந்தப்பெண் தன் மீதான குற்றச்சாட்டுக்கள் பலவற்றை இப்பேட்டியில் மறுதலித்துள்ளார்.

**சஹானாஸ்:** உங்ககிட்ட இதைச் சொல்றதால என் கஷ்டம் கொஞ்சமாவது கொறையுமில்ல... கேரளாவில பத்தனம்திட்டாவுல ரெண்டு அக்கா, ஒரு அண்ணாவோட பிறந்தேன். எனக்கு அம்பது பேரோட கல்யாணம் ஆச்சன்னு சொல்றது சரியா இல்ல. லைஃப்ல நான் பண்ணின ஒரே தப்பு போரூர் மணிகண்டனை விட்டுட்டு புளியந்தோப்பு பிரசன்னாவை மேரேஜ் செஞ்சதுதான்.

நீங்க இப்போ கர்ப்பிணின்னு சொல்லப்படற விஷயம்...? பிரசன்னா இதை மறுத்திருக்காரே?

**சஹானாஸ்:** டி.என்.ஏ. டெஸ்ட்டுல தெரிஞ்சுருமே. பிரசன்னா அக்ஸப்ட் பண்ணலேன்னாலும், பேபிக்கு இனிஷியல் 'பி'யிலதான் ஆரம்பிக்கும். அத நான் பாத்துக்கிறேன். முதல்ல என்னைப் பத்தி ஏன் இவ்வளவு தப்பா நியூஸ் வருதுன்னு நீங்க தெரிஞ்சுக்கணும். கேரளால அட்வடைஸ்மெண்ட் பாத்துட்டு 2006-ல மெட்ராஸ் வந்து ஒரு ஜொப்ல சேர்ந்தேன். அந்த சுப்பர் மார்க்கெட் ஓனர்தான் இவ்வளவு கதையும் ப்ளே பண்ற ஆளு. ஒரு போட்டோவை வாங்கறதுக்காகத்தான் நான் இவ்வளவு கஷ்டத்தையும் அனுபவிக்கிறேன்.

அது என்ன போட்டோ?

**சஹானாஸ்:** சுப்பர் மார்க்கெட்டல லேடிஸ் டிரஸ் சேஞ்ச் பண்ற ரூம்ல அந்தாளு கேமரா பிக்ஸ் பண்ணி வச்சிருக்கார். என்னோட நியூட்... போட்டோ இப்படித்தான் அவர்கிட்ட மாட்டிகிச்சி. இதுமாதிரி எல்லா பொண்ணுங்களையும் அவர் படமெடுத்து வச்சிருக்காரு. நான்தான் இதை கண்டுபிடிச்சேன். இதில்லாமஅந்தாளு செய்ற இல்லீகல் பிஸினஸ் பத்தி புல் டீடெய்ல் எனக்கு மட்டும்தான் தெரியும். ஒருநாள் அந்தாளு ரூட் விட்டுப் பாத்தாரு. நான் சிக்கலே. கடைசியா இந்த போட்டோவைக் காட்டி மிரட்டினாரு. 26 வயது பெண் என்மேல அறுபது வயது ஆளுக்கு வந்த ஆசை இருக்கே...

தமிழ் நல்லா பேசுறீங்க. கேரளா வாடை லேசாகத்தானே இருக்கு?

**சஹானாஸ்:** நீங்க என்ன கேக்கறீங்கன்னு தெரியுது. கேரளாவுல பத்தனம்திட்டா தான் என் நேட்டிவ். நான் உருது முஸ்லிம். ஸோ... உருதும், மலையாளமும் நல்லா வரும். இங்கிலிஷ், தமிழ் பேசுவேன். தமிழ் படிக்கத் தெரியாது. உங்க நியூஸைலே ப்ரெண்ட்ஸ்ங்கதான் படிச்சுக் காட்டுனாங்க.

நீங்க 'லோ' முடிச்சிருக் கிறதாவும், ஐ.ஏ.எஸ். ஸ்டடி பண்ணிட்டு இருக்கறதாவும் பிரசன்னா சொல்லியி ருக்காரே? எந்த வருஷம் 'லோ' முடிச்சீங்க?

**சஹானாஸ்:** நான் லோ படிக்கல.

நீங்க சொல்றபடி உங்க முதல் கணவர் போரூர் மணிகண்டனும், பிரசன்னா சொன்னதைத்தானே சொல்றாரு?

**சஹானாஸ்:** இவங்க ரெண்டுபேருமே இப்போ அந்த சுப்பர் மார்க்கெட் ஓனரோட ஆளா மாறிட்டாங்க. அதனால அப்படித்தான் பேசுவாங்க. ஆக்சுவலா நான் படிச்சதே பி.ஏ. ஹிஸ்ரி மட்டும்தான்.

நீங்க அட்வகேட்டுக்கான டிரஸ்ல பலமுறை ஸ்கூட்டியில வந்ததை பிரசன்னா, மணிகண்டன் ரெண்டுபேருமே கன்ஃபாம் பண்றாங்களே...

**சஹானாஸ்:** அவங்களுக்கு அந்த அறுபது வயது ஆளு, மண்டையில நல்லா ஏத்தி விட்டிருக்காரு. அவ்வளவுதான் சொல்வேன்.

திருச்சி பூஜா ரோடு ராகுலுக்கும் உங்களுக்கும் சென்னை வடபழனியில கல்யாணம் நடந்ததை ராகுல் ஒப்புக் கொண்டிருக்கிறார். அதேபோல்தான் அடையார் சரவணனும்... உங்கள் மீது போலீசில் புகார் செய்த 7 பேரில் 4 பேர் இதுவரை நேரில் வந்துள்ளனர். நீங்களோ மணிகண்டன், பிரசன்னா இருவரை மட்டுமே கணக்கில் காட்டுகிறீர்கள்.

**சஹானாஸ்:** மணிகண்டன் கூட மே, 2011-ல மேரேஜ் பண்ணி 2 மாசம்தான் வாழ்ந்தேன். உள்ளே நுழைஞ்சி ஊர் பஞ்சாயத்து மாதிரி பண்ணி எங்களை பிரிச்சு என்னை அனாதையாக்கிட்டாரு சுப்பர் மார்க்கெட் முதலாளி. பிறகுதான் பிரசன்னாவை மேரேஜ் பண்ணினேன். ராகுல் விஷயம் (சற்று யோசனையுடன்) ஒரு சினிமா கனவு மாதிரி. அவர் சினிமா ஆர்ட் டைரக்டர். ரொம்ப நல்லவர். யெஸ்... மேரேஜ் நடந்தது உண்மைதான். இதுக்குமேல இதுல பேச விரும்பல. அந்த விஷயம் வேண்டாமே... பிரிஞ்சிட்ட பிறகு பேச என்ன இருக்கு?

சரி... விட்டுடுவோம். இதுவரைக்கும் மூணு... அடையார் சரவணன்...?

**சஹானாஸ்:** ஜஸ்ட் ஃப்ரெண்ட் அவ்வளவுதான். சொஸைட்டியில ஒரு பொண்ணு தனியா துணையில்லாம வாழ்ந்தா என் முதலாளி மாதிரி கிழட்டுப் பூனைங்க கிட்டயும் சில மண்டைக்குச்சிங்க கிட்டயும் மாட்டி சீரழிய வேண்டியதுதான். மணிகண்டனோட வாழத் தொடங்குனதும் பிரிச்சாச்சு. அதுக்கு முன்னால ராகுலோட வாழ ஆரம்பிச்சு -அதுவும் அந்தாளு பிரிச்சாச்சு.

இப்போ பிரசன்னாவும் போயாச்சு. சரவணன், சீனிவாசன்னு என் ஹஸ்பெண்ட் லிஸ்ட்ல பேப்பர்ல வருது. படிச்சுக் கேட்டா தலை சுத்துது. ஃப்ரெண்ட்ஸோட கூட எடுத்துக்கிட்ட போட்டோவையெல்லாம் கலெக்ட் பண்ணி, அந்தாளு என் ஹஸ்பெண்ட்ன்னு சொல்றாரு. நான் வேலை பார்த்தப்போ தரவேண்டிய சம்பளத்தை பாங்க் அக்கவுண்ட்ல ஏத்திடறேன்னு சொல்லி ஒரு வருஷம் ஏமாத்தியாச்சு. ஒருநாள் நான் சண்டை பிடிச்சதும் 1 லட்சத்து 88 ஆயிரம் ரூபாயை கையில குடுத்துட்டு இப்போ திருட்டுப் பட்டம் கட்றாரு. அவருக்கு நான் வேணும் அவ்வளவு தான். எனக்கு அந்தாளுகிட்ட இருக்கிற போட்டோ காப்பி வேணும், அதுக்கு தான் இவ்வளவு நாள் பொறுமையா இருந்தேன். நான் வெளியில வந்து எல்லாத்தையும் போலீஸ்ல சொல்லத்தான் போறேன். விடமாட்டேன். என் உயிருக்கு ஆபத்து கண்டிப்பா வரும். இப்பவும் என்னை கொன்னுப்போட அந்தாளோட ஆளுங்க தேடிக்கிட்டுதான் இருக்கு. நாலு பிச்சைக்காரியோட ஒருத்தியா ரயில்வே ஸ்டேஷன்ல நைட்ல பசியோட படுத்துக்கிட்டு இந்த ஒரு வாரமா நான் செத்துக் கிட்டிருக்கேன்.

நீங்களாகவே இருவரை மணிகண்டன், பிரசன்னா, ராகுல் ஆகியோரோடு கல்யாணம் நடந்ததா சொல்லியிருக்கீங்க. வேப்பேரி பொலீஸ்ல நீங்க ஏமாத்துனதா சொல்லி 2010-லேயே ராஜேஷ்னு ஒருத்தரு புகார் கொடுத்திருப்பதா சொல்றாங்க. பிரசன்னாவோட புளியந்தோப்புல நீங்க வாழ்ந்தபோது சுரேஷ்னு ஒருத்தரு உங்களை என் மனைவின்னு சொல்லி புகார் கொடுத்திருக்காரு. ஆனா... நீங்களோ எல்லாத்துக்கும் உங்க முதலாளிதான் காரணம்ங்கிறீங்க?

**சஹானாஸ்:** ராஜேஷ்ங்கிற கேரக்டரே நீங்க சொல்லித்தான் தெரியுது. வேப்பேரியில குடுத்த கம்ப்ளைண்ட் வேற... என்கூட வேலை பார்க்கிற பொண்ணோட செயினை வாங்கிப் போட்டுக்கிட்டு ஊருக்குப்போன இடத்துல கொஞ்சம் லேட்டாயிடுச்சு. என் சுப்பர் மார்க்கெட் ஓனர் சொல்லி அந்தப் பொண்ணு என்மேல கம்ப்ளைண்ட் குடுத்தா. போலீஸ் என்னைக் கூப்பிட்டாங்க. நேரில் போயி விளக்கம் சொல்லி செயினை குடுத்துட்டேன். மேற்றர் ஓவர்.

அதேபோல புளியந்தோப்பு சுரேஷும் என்மேல கொடுத்தது பொய்ப் புகார். அதையும் நீங்க இன்ஸ்பெக்டர் வசந்திகிட்டயே கேக்கலாம். இதுக்கும் காரணம் அந்தாளுதான். எக்மோர் கமிஷனர் ஆபீஸ்ல அந்தாளு 23-ந் தேதி ஒரு கம்ப்ளைண்ட் குடுத்திருக்காரு. என்னைப் பத்தி தான் புகாரே. 1 லட்சத்து 88 ஆயிரத்தோடு ஓடிட்டேன்னிருக்காரு. அன்னைக்கி சாயந்திரமே என்னோட செல்போன் நம்பருக்குப் போன் பண்ணி இப்ப கூட கம்ப்ளைண்டை விற்றோ பண்ணிக் கிறேன். நீ, என்கூட வரேன்னு சொல்லு... பிரசன்னா, மணிகண்டன் எல்லாரையும் ஆஃப் பண்ணிடறேன்னு சொல்றாரு. சஹானா என்ன சாதாரணமான ஒரு பொண்ணுதானேன்னு என்னை பெர்சி கேம் ஆடிப் பாக்கி றாரு அந்த பிஸினஸ்மேன். நான் வெளிய வந்து அவரோட முகத்திரையையும், போட்டோவுல இருக் கிற ஹஸ்பெண்ட்ஸ்ங் கதையையும் கிழிக்கத்தான் போறேன். பாக்கத் தானே போறீங்க...



யார் சொல்வது உண்மை என்று தெரியவில்லை. ஆனாலும் 26 வயதில் ஐம்பது கணவர்கள் இருந்தமை நிரூபிக்கப்பட்டால் அது ஒரு கின்னஸ் சாதனையாகவும் பதிவு செய்யப்படலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பல் பரமசிவம்



## காலாட்டி அம்மான்.

ஒரு ஐம்பது வருசத்துக்கு முன்னம் நான் ஒரு சின்னப் பொடியன். ஐம்பது வருசத்துக்கு முன்னம் என்ன? இப்பவும் நான் ஒரு சின்னப்பிள்ளை மாதிரித்தான். இப்பத்தைப் பேப்பர்களிலையும் 'அறுபது வயது வயோதிபரை மோதிய லொறி தப்பி ஓட்டம்' என்று செய்தி வரேக்கை, வயிறு பற்றி எரியும்.

'அறுபது வயது நபர்' என்று மட்டும் போட்டால் பிழையோ?... அதென்ன அறுபது வயது வயோதிபர்...? எனக்கு உதெல்லாம் பிடிக்காது.

என்னத்தில தொடங்கினனான்?... ஆ... ஒரு ஐம்பது வருசத்துக்கு முன்னையா ஏபிசிடி தெரிஞ்சாலே ஒரு இங்கிலீஸ் படிச்ச ஆக்கள் மாதிரி... 'இங்கிலீஸ்' தெரிஞ்ச ஆக்கள்தான் 'லோங்ஸ்' போடுற காலம்... 'இங்கிலீஸ்' தெரியாத ஆக்கள் 'லோங்ஸ்' போட்டால் அப்பத்தையில் பகிடிகள் 'பஸ்சில இங்கிலீசில' ஏதாவது கேட்டு மானங்கெடுத்துப் போடுவங்கள்...

அப்ப நான் பிறவுண் றோட்டால வந்தன். ஐம்பது வருசத்துக்கு முன்னம்... ஒரு தெருவின்ர பேர் இங்கிலீசில போட்டிருந்தது. 'காலாட்டி அம்மான் றோட்...' அட காலாட்டிஅம்மானின்ர பேரிலயும் ஒரு 'றோட்' என்று ஆச்சரியப்பட்டன். பேந்தும், 'காலாட்டி அம்மான்' என்று எனக்கு 'இங்கிலீஸ்' வாசிக்கத் தெரியும் என்று உரத்து வாசிக்க, பக்கத்தில வந்து கொண்டிருந்த லோங்ஸ் போட்டவர் "இற் இஸ் நொட் காலாட்டி அம்மான், இற் இஸ் கலட்டி அம்மன் றோட்", என்று கண்களையும் வாயினை வைக்கக் கொண்டு சொன்னார்.

எனக்கு ஒரு மாதிரிப் போச்சுது... இது இப்ப ஐம்பது வருசத்துக்குப் பிறகு... கலட்டி அம்மன் கோவில் றோட் பிறவுண் வீதிச் சந்தியால வரேக்கை அந்த ஞாபகம் வருகுது.

லீடகலீ என்பது முன்னுக்கு இருந்து வாசிச்சாலும் 'லீடகலீ'. பின்னுக்கு இருந்து வாசிச்சாலும் லீடகலீ... என்று எங்களுக்குப் படிப்பிச்ச சேர் சொன்னவர். அதுக்குப் பிறகு எதைக் கண்டாலும் கடைசியில இருந்து வாசிக்கிற பழக்கம் வந்துட்டுது...

ஒரு றோட்டின்ர பேரைக் கண்ட உடனை கடைசியில இருந்து வாசிக்கிறதில ஒரு சந்தோசம். நம்ம றோட் என்று ஒரு றோட்... 'Namma' றோட் என்று பின்பக்கம் இருந்து நான் வாசித்தது 'Ammam' றோட்டைத்தான். அப்படி வாசிக்கேக்க புதுப்புதுப் பெயர்கள் கிடைக்கும்.

இதுக்குள்ளை அறிவு இலக்கியம் என்று ஒன்று...

College Road என்பதை College இல் இருக்கிற முதலெழுத்து 'C'யையும் Road என்றதில இருக்கிற 'R'ஐயும் பாரோ அடிச்சுப் போட்டாங்கள். அதைச் சத்தம் போட்டு நான் வாசிச்சுப் பட்ட பாடு...

### மருண்டவன் கண்ணுக்கு...

கொழுத்துற இந்த வெய்யிலுக்கு மரநிழல் ஒரு இதந்தான். நாலுமணி வெயில் சுட நண்டாகல் வெயிலாய் வாட்டுது. கொஞ்சம் இளைப்பாறுவமெண்டுட்டு என்ரை பழக்கிடையாளன் 'றலியை' பிறவுண் வீதி அம்மன் வீதி தொடங்கிற சந்தி கோயிலடியில சாத்திப் போட்டு பதிச்ச அடுக்கிக் கிடந்த 'லைற் போஸ்ற்' போஸ்ற்றை தோளில கிடந்த துவாயால தட்டிப் போட்டு இருந்தன். ஆரோ பின்னுக்குத் துரத்தினம் போல அதுக்குப் பறந்து ஓடி வார மாதிரி ஒரு 'பல்சர்' வந்து நின்றுது. நான் சாய்ந்திருந்த 'லைற் போஸ்ற்' லிலேயே அவன்ர காலை ஊன்றிக் கொண்டு நின்டான். ஒரு இருபத்து நாலு, இருபத்தைந்து மதிக்கக் கூடிய விடலை... பிறந்த திகதி மாதத்தை எடுத்துப் பார்த்தால் சிலவேளை பதினேழு, பதினெட்டு வயதாகவும் அந்தப் பையன் இருக்கலாம்... மளமள வென்று அவசரமாகப் பொக்கற்றுக்குள்ளை கையை விட்டுத் துழாவினான். மூன்று 'காண்ட்போன்' கையிலை வந்தது. அலறித்துடிச்ச 'காண்ட்போனைக் காதுக்குக் கிட்டக் கொண்டுபோய் "ஹலோ" என்டான்.

"சொல்லு மச்சான்... என்ன?... என்ன...? மோட்டச் சயிக்கிளை வந்தனான். இதில நிற்பாட்டிப் போட்டுக் கதைக்கிறன்..." அங்காலுப் பக்கத்தாலை கதைக்கிறவரும் ஏதோ பக்கத்தில நின்டு கதைக்கிற மாதிரிச் 'சவுண்டாய்'த்தான் கதைச்சுக் கேட்டுது. ஏதோ உயிர்போற விசயம் மாதிரி இருக்கவே நான் உசாராகி காதைக் கொடுத்துக் கேட்டுக் கொண்டு வேறையெங்கேயோ பார்த்துக் கொண்டு இருந்தன். அது தான் பரமசிவத்தின் 'ஸ்பெசாலிற்றி'

மற்றப் பக்கத்தில் இருந்து...

"அட மச்சான்... இங்க பிறவுண் றோட்டில ரெக்குக்கு முன்னால நின்டு கதைக்கிறன்... இதில நிற்பாட்டிப் போட்டு ஒரு இளநீர் வாங்கிக் குடிச்சுக் கொண்டு நிற்கிற மச்சான்..."

"ஆ... நிற்க..."

"ஒரு பிளஸ்ஸர் சிவப்பு மோட்டச் சயிக்கிளை ஆரோ ஒருத்தி சிவப்பு நிறக் காஞ்சிபுரச் சாறியோடை சேலைத் தலைப்பால இழுத்துப் போர்த்துக் கொண்டு 'ஸ்பீட்'டாய் போய்ச்சுது மச்சான்..."

"அட இன்றைக்கு கலியாண வீட்டு நாள்... ஆயிரம் பேர் போய் வருகினம்... அதுக்கு நீ ஏன் கொட்டாவி விடுகிறாய்?..."


மறுபக்கம், "அட அது இல்லை... என்னைப் பார்த்து சிரிச்சு... கையும் காட்டிப் போட்டுப் போய்ச்சுது மச்சான்... சச... பலவீனமா வருகுது...!"

என்ரை பக்கமிருந்து, "டேய்... பைக் நம்பர் பார்க்கவில்லையே?... நம்பரைச் சொன்னால் ஆரான் என்டு 'டப்' என்டு சொல்லுவன்... 24 மணிநேரமும் இதே வேலையாத் திரியிற எனக்குத் தெரியாதே?"

அங்காலை இருந்து "உன்னை விட கூட எனக்குத் தெரியும்... ஆனால் 'பிளஸ்ஸரில' 'றெஜிஸ்ரேட் நம்பர்' இல்லை... 'கொம்பனி - சொறி நம்பர்' அதை டப்பென்டு பார்த்துச் சொல்லேலுமே...?"

இந்தப் பக்கம் இருந்து "கலரைப் பார்த்தியே? கறுப்போ சிவப்போ...?"

மற்றவன் "அட என்ன கலர்... தெரிக்கைப்பழக் கலர்... இழுத்துப் போர்த்த சேலைத் தலைப்புக் குள்ளால இடை தெரிய... காஞ்சிபுரம் சாறிக்கு ஆள் சிவப்போ, மஞ்சளோ என்டு சொல்ல முடியாத ஒரு தனிக் கலர்..."



இங்கு "உன்னைப் பார்த்துச் சிரிச்சதோ...?"

"சிரிச்சதோ... கையுமெல்லே காட்டிப் போட்டுப் போனது... பல்லின்ர வடிவென்ன...? ஹெல் மெட்டுக்குள்ளால நீளத் தலைமயிர் காற்றில பறக்க..."

என்ரை பக்கம் நின்டவருக்குத் தவிப்புத் தாங்கேலாமல் போச்சுது

"என்ன மச்சான்? குங்குமப் பொட்டோ, கறுப்புப் பொட்டோ? அவர் அங்கையிருந்து..." "அதை ஆர் அந்த 'ஸ்பீட்'டுக்குள்ளை கவனிச்சது... தோடு... வைரத்தோடாகத்தான் இருக்க வேணும். மின்னி மின்னி பளிச்..."

இது இஞ்சையிருந்து "எந்தப் பக்கம் போனது மச்சான்?"

அது அங்கை இருந்து "கம்பஸ் பக்கமாய்ப் போனது. பின்னுக்கும் ரெண்டு மூண்டு லேடீஸ் ஸ்கூட்டியிலயும் பிளஸ்ஸரிலயும்... எங்கேயோ சேர்ந்து போயிற்றா வந்து கொண்டிருந்தவை போலிருக்கு" என்று அவர் அங்கை சொல்லி முடிக்கேல்லை... இவர் ஏதோ பதறிப்பட்டார். பார்த்தால் ஒரு காஞ்சிபுரச் சாறிப் பெண் தக தக சிவப்பு பிளஸ்ஸரில கம்பஸ் பக்கம் இருந்து வந்து கலட்டி அம்மன் வீதிப் பக்கமா திரும்பி 'ஸ்பீட்'டாய் அந்தத் தம்பி வர்ணிச்ச அதே அங்க லட்சணங்கள். இந்தத் தம்பியையும் பார்த்துச் சிரிச்ச மாதிரிக் கிடந்தது. தற்செயலாய்த் தான் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்த போது என்னைப் பார்த்துச் சிரிச்ச மாதிரியும் இருந்தது. சேலைத் தலைப்பு காற்றில் பறக்க ஹெல்மெட்டுக் குள்ளால தலை மயிரும் விரிந்து பறக்க ச்சா... என்னைப்பீட்...

"டேய் மச்சான்... நீ சொன்ன அதே ஆள்... கலட்டி அம்மன் வீதியால போகுது. டப்பென்று வா... பலோ பண்ணுவம்..." என்று துடிச்சுப் போச்சுது பையன்...

கண்மூடி முழிக்கிறதுக்கிடையில் இன்னொரு பல்சர் வந்து கோயிலடி நான் இருந்த 'லைற் போஸ்ற்' நடியில வந்து 'சடின் பிரேக்' முக்காற் சுற்றுச் சுற்றி வந்த பையன் அவசரப் படுத்தினான். "எதால மச்சான் போனது... 'டப்'பென்று 'ஸ்ராட்' பண்ணு" என்று பையன்கள் அவசரப்பட, போன 'பிளஸ்ஸர்' திரும்பி வந்து கொண்டிருந்தது. இந்த இரண்டு பையன்களும் வாய் பிளக்க திரும்ப அதே சிவப்பு பிளஸ்ஸர் வந்து இவர்களது காலடியில் நின்றது. வந்தவர் ஹெல்மெட்டைக் கழற்றவே தலைமயிர் அதில் சிக்கிக் கொஞ்சம் கஷ்டப் படுத்தியது. போர்த்தி இருந்த துணி விலகவே செகர் சோதியாய் மேனி [illegible] மினுங்கிச் சிரித்தது. ஒரு தெய்வீகச் சிரிப்பு... அது சேலைத்தலைப்பு பல்லை நல்ல வெள்ளைப்போட்டமைந்த காஞ்சிபுரம் பட்டுச்சாறிலை சிவப்பு, மஞ்சள் நிறத்தில் டேய் எங்கடை லெஷ்மனை சர்மா... எங்க கோண்டை கூடப் படிச்ச லெஷ்மனை சர்மா..."

"சிங்கப்பூரில இருந்து எப்ப வந்தனி மச்சான்... இன்றைக்கேதும் விசேஷமோ?" உடலெல்லாம் வெள்ளைப் பாலோடமைந்த தனது பட்டு முழு வேஷ்டியை - வேட்டியா அது? சரியாக் கூறச் சேலை போல தான். அதைச் சரி செய்தவாறு

"ஓ... எங்கடை சொந்தக் கோயில் கும்பாபிஷேகம்... நாங்கள் எல்லோரும் நிக்கவேணும் என்டு எங்கடை ஐயாவுக்கு விருப்பம்.. அங்கை இங்கை ஓடித்திரிய என்டு ஒரு 'பிளஸ்ஸர்' எடுத்தனான். போகேக்கை சின்னம்மா வீட்டை குடுத்துவிட்டுப் போகப் போறன். என்ன? படிக்கேக்கை என்னைப் பொத்தி, கடுக்கன் என்டெல்லாம் பகிடி பண்ணினீங்கள் இப்ப தலை பேர்த்து கடுக்கனும் போட்டு ஆ... பார்க்கச் சந்தோஷமாக இருக்குது..."

ஏனைய கதைக்கப் பிடிக்க வாயைப் பிளந்து கொண்டு இருவரும் கேட்டுக் கொண்டு இருந்தனர்.

## வாழ்வும் சாவும்

முல்லா ஒரு கிளையை அறுக்கலாம் என்று ரம்பத்துடன் மரத்தின் மீதேறினார்.

அந்தப் பக்கமாகப் போன ஒருவர், "நன்கு கவனியுங்கள்! உட்கார்ந்திருக்கும் கிளையையே நீங்கள் அறுக்கிறீர்கள். கிளையோடு நீங்களும் கீழே விழுந்து விடுவீர்கள்" என்று முல்லாவைப் பார்த்து அவர் சத்தம் போட்டார்.

"நீங்கள் சொல்வதை நம்புவதற்கு நானென்ன முட்டாளா அல்லது எதிர்காலத்தை எனக்குச் சொல்லக்கூடிய ஞானியா நீங்கள்?" என்று எதிர்ப்புக் குரல் கொடுத்தார் முல்லா.



சொல்லி முடித்தவுடனேயே கிளையோடு தரையில் விழுந்தார் முல்லா.

தன்னுடன் பேசிய மனிதனைப் பார்க்க அடித்துப் பிடித்து ஓடினார் முல்லா.

"நீங்கள் சொன்னது பலித்து விட்டது! இப்போது சொல்லுங்கள், நான் எப்படி இறப்பேன்?"

தான் முக்காலமும் உணர்ந்த ஞானியல்ல என்று அந்த மனிதன் முல்லாவிடம் எவ்வளவுதான் எடுத்துச் சொல்லியும் முல்லா சமாதானமாகவில்லை.

கடைசியில் அந்த மனிதன் பொறுமையிழந்து எரிச்சலில் சொன்னான்: "நீங்கள் இப்போதே கூட இறக்கலாம்."

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனேயே தரையில் விழுந்து அசையாமல் கிடந்தார் முல்லா.

அருகிலிருந்தவர்களெல்லாம் முல்லா அப்படி விறைத்துக் கிடப்பதைப் பார்த்து அவரை சவப்பெட்டிக்குள் வைத்தனர்.


புதைகுழி இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கும் போது எந்த வழி சுருக்கமான வழி என்பதையொட்டி அவர்களுக்குள் பெருத்த சர்ச்சை வந்தது.

பொறுமையிழந்து போன முல்லா மெதுவாக தன் தலையை சவப் பெட்டியிலிருந்து வெளியே நீட்டிச் சொன்னார்:

"நான் உயிருடனிருந்த போது வழக்கமாக இங்கிருந்து இடது புறமாய் திரும்புவேன். அதுதான் விரைவாகப் போகும் வழி" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் அழகு எதில் தங்கியுள்ளது?



## பித்தன் பதில்கள்



**ஞா.கொங்காதரன், மட்டக்களப்பு.**
கே: அமைதியான சுபாவம் கொண்ட பெண்களை நம்பலாமா பித்தரே?
ப: புயலுக்குப் பின்னாலும் அமைதி நிலவுவதுண்டு. இந்த விடயத்தில் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்ற எச்சரிக்கை உணர்வு அவசியம்.

**பி.ஷினோரினி, கொழும்பு-13.**
கே: பித்தரே, எடுத்த முயற்சியில் தொடர் தோல்வி ஏற்பட்டாலும் சோர்ந்து விடாமல் மீண்டும் மீண்டும் முயற்சிப்போர் குறித்த என்ன நினைக்கிறீர்?
ப: முயற்சி திருவினையாக்கும் என்பது அனுபவமொழி. அதற்காக வெளிநாடு போய்விடும் முயற்சியில் தோல்வி தொடர்ந்தாலும் மீண்டும் மீண்டும் முயற்சிப்பதால் கைப்பணம் வற்றி ஓட்டாண்டி ஆகவும் நேர்கிறதல்லவா?



**பொ.நாகலிங்கம், பளை.**
கே: அப்பாவித்தனம் என்கிறார்களே? அதற்கோர் உதாரணம் தருவீரா?
ப: யாழ்ப்பாணத்தில் இரட்டைத்தட்டு பஸ் அறிமுகமான காலகட்டத்தில் பாடசாலை மாணவர்களாகிய நானும் எனது நண்பனொருவனும் இரட்டைத் தட்டு பஸ்ஸில் பயணம் செய்யும் ஆவலில் ஒரு நாள் ஒரு பஸ்ஸில் ஏறிக் கொண்டோம். கீழ்த்தட்டில் பயணிகள் நெருக்கம். என்னைக் கீழே நிற்க அனுமதித்த பஸ் நடத்துநர் மேல் தட்டில் போய் அமருமாறு எனது நண்பனை மேலே அனுப்பி வைத்தார். மேல் தட்டுக்குச் சென்ற நண்பன் ஒருசில நிமிடங்களில் பேயறைந்தவன் போல படிகளில் இறங்கி கீழே வந்து என்னருகில் நின்று கொண்டான். ஏன் வந்தாய்? என்று வினவியதற்கு, கீழே பஸ் டிரைவர் பஸ்ஸை ஓட்டுகிறார். மேலே டிரைவரே இல்லை. பஸ் ஓடுகிறது. பயங்கரமாய் இருந்தது அதுதான் மேல் தட்டிலிருந்து இறங்கி வந்து விட்டேன் என்றானே பார்க்கலாம். அப்பாவித்தனம் என்பதற்கு இதைவிடப் பொருத்தமான உதாரணம் எனக்குத் தேவையில்லை.



**க.அமுதன், மன்னார்.**
கே: பித்தரே, பெண்களின் அழகு எதில் தங்கியுள்ளது?
ப: அழகு பெண்களில் தங்கியில்லை. உங்கள் கண்களில், பார்வையில் தான் தங்கியுள்ளது.

**த.முல்லைமணி, முல்லைத்தீவு.**
கே: பித்தரே, ஒரு எழுத்தாளனாக ஆக வேண்டும் என்பது எனது பள்ளிக்காலம் முதல் தொடரும் ஆசை. அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்.
ப: வெறும் கை முழம் போடாது. நிறைய வாசி... வாசிக்கப்படுவாய். நிறைய எழுது... ஒரு நாள் எழுதப்படுவாய்.

**வ.அரியரத்தினம், கண்டி.**
கே: சம்சாரத்தை ஏன் மின்சாரத்துடன் ஒப்பிடுகிறார்கள் பித்தரே?
ப: இரண்டையும் தொட்டால் 'ஷொக்' அடிக்கும் என்பதாலா? அல்லது உச்சரிப்பில் ஒற்றுமை இருக்கிறது என்பதாலா? என்று தீர்மானிக்க முடியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டாலும் 'ஷொக்' அனுபவம் உண்மையைப் புரிய வைக்கும்.

**கே.கே. ரவீந்திரன், வவுனியா.**
கே: தண்ணி, தண்ணி என்று ஆலாய்ப் பறக்கிறார்களே ஒரு சிலர். அந்தத் தண்ணியில் அப்படி என்னதான் இருக்கிறது பித்தரே?
ப: குடிக்கிற தண்ணியா? போடுகிற தண்ணியா? குடிக்கிற தண்ணியிலை ஐதரசனும், ஒட்சிசனும் உள்ளன. போடுகிற தண்ணியிலை போதை இருக்கப்பா டோவ்த. போட்டுப் பார்த்தால் தான் புரியும் அது.



**அ.சிவேந்தினி, மன்னார்.**
கே: பித்தரே, ஒரு பெண்ணுக்கு அழகு தருவது எது? ஆபத்தை ஏற்படுத்துவது எது?
ப: அழகு தருவது புன்னகை. ஆபத்தை ஏற்படுத்துவது அவளது பொன் நகை. அன்பு, பொறுமை, கருணை இவையே பெண்ணுக்கு அமைய வேண்டிய அணிகலன்கள்.

**ம.தில்லைநாதன், வரணி.**
கே: எமது காதலிக்காக எனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுக்க நான் தயாராயிருக்கிறேன் பித்தரே.
ப: நீர் என்ன கொடுப்பது? திருமணம் முடிந்த பின் உமது காதலி தானாகவே உம்மிடமிருந்து இவையெல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளப் போகிறாள். நீர் ஓட்டாண்டியாய் நடுத்தெருவில் நிற்கும் போது இந்தப் பித்தனின் எதிர்கூறலைப் புரிந்து கொள்வீர்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 537

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | | ■ |
| 6 | | ■ | 7 | | | ■ | 8 |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | |
| 14 | | | ■ | 15 | | | ■ |
| | ■ | 16 | 17 | | ■ | 18 | 19 |
| ■ | 20 | | | ■ | 21 | | |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர் : ........................................

விலாசம்: ........................................

........................................

கையொப்பம்: ........................................

### மேலிருந்து கீழ்

01. மாதை
02. கிரகங்களின் ஒன்று
03. அறிவீனம் உடையவன்
04. முகம்
05. ஓர் இசைச் சொல்.
08. வேறுபாடுகளைக் குறிக்கும்
09. ஒரு பிரபந்த வகை
10. கம்பன் மகன்
12. ஒரு திசையின் சுருக்கம்
13. படர்க்கை டன்மையைக் குறிக்கும் சொல்
15. ஓட்டை
17. ஓர் அரிசி வகை
19. ஒழுங்கில் அமைந்தது
20. மையம்

### இடமிருந்து வலம்

01. நிகழக்கூடாத ஒன்று
06. பழம்
07. சமயம்
09. கை
10. சிரகம்
11. கவிஞன்
13. கயிறு
14. இதுவும் கயிறு. பெரியது
15. ஒருவகைப் பூச்சி
16. உரம்
18. தூக்கிச் செல்
20. விரலின் பகுதி
21. மிதமிஞ்சிய
22. எரிக்கப்படும் உருவப் பொம்மை
23. நீக்கு

### சொற்சிலம்பம் போட்டி

### இல. 537

சொற்சிலம்பம் 537 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் செப்ரெம்பர் 26 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா150 உம் மூன்றாவது பரிசாக ரூபா100உம் வழங்கப்படும். சரியான விடைகளை எழுதியிருப்போர் மத்தியில் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி**

**சுடர் ஒளி**

யாழ். அலுவலகம்,

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல: 534 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.பஞ்சபூதம், 02.சமா, 03.பாம்பு, 04.பாடகர், 05.தவழ், 06.கர்ச்சனை, 09.மங்க, 11.வீபி, 13.கானகம், 16.பலம், 17.பதில், 18.சதாப், 19.நிறை, 20.மது, 21.சபா.

**இடமிருந்து வலம்**

01.பஞ்சமாபாதகம், 07.பாண்டவர், 08.சம, 10.புகழ்ச்சி, 12.பூங்கா, 14.சபி, 15.துலைப், 16.பானை, 17.பல், 19.நிம்மதி, 21.சதுர, ...

### போட்டி இல. 534 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** ந.மகேஸ்பரராஜா, இல- 21/22, புது முகத்துவார வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

**2ஆம் பரிசு** கி.பவித்திரா, எள்ளுப்பிட்டி, மாந்தை, மன்னார்.

**3ஆம் பரிசு** ம.துஷ்ஷரிசா, அளம்பில், முள்ளைத்தீவு.

### பாராட்டுப் பெறுவோர்

(1) சி.கார்த்திகா,
சந்தை வீதி,
வந்தாறு மூலை.

(2) மங்களம் மனோரஞ்சன்,
இல 69, வட்டவிதானை வீதி,
கல்முனை - 02.

(3) கு.தௌரிரேணி,
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(4) க.ஜெறோம்,
இல 33, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(5) சி.எழில்வேள்,
இல 59, சங்கமித்த மாவத்த,
கொழும்பு - 13.

(6) ரி.கந்தையா,
இல - 11-5/1 சென்.லோறன்ஸ் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

(7) த.பாலகுமார்,
அணிஞ்சிலடி ஒழுங்கை,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.

(8) அ.இ.பாக்கியராஜா,
'ஜெயசதனம்',
களுவாஞ்சிக்குடி

(9) கே.எம்.மில்காணி,
இல 14, புளியடி குறுக்கு வீதி,
ஏறாவூர் - 06.

(10) திருமதி.வி.சித்திரவேல்
சந்தை வீதி,
வந்தாறு மூலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு

## கூடைப்பந்து வீரருடன் காதல் - ஷரபோவா



ரஷியாவைச் சேர்ந்த முன்னணி டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா. கவர்ச்சிப் புயலான அவர் இந்த ஆண்டு பிரெஞ்சு ஓபன் பட்டத்தைக் கைப்பற்றினார். தற்போது உலக தரவரிசைப் பட்டியலில் ஷரபோவா 3-வது இடத்தில் உள்ளார். அவருக்கும் கூடைப்பந்து வீரர் சாசா உஜாசிங்குக்கும் இடையே காதல் இருந்தது.

இருவருக்கும் இடையே திருமண நிச்சயதார்த்தம் நடந்து விட்டது. ஆனால் திருமணம் எப்போது நடைபெறும் என்று இருவரும் அறிவிக்கவில்லை. ஷரபோவா லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று இறுதிப் போட்டியில் செரீனாவிடம் தோற்றார். அதன் பிறகு நடந்த கனடா ஓபன் போட்டியில் அவர் கலந்து கொள்ளவில்லை. உடல் நலக்கோளாறு காரணமாக அவர் அந்தப் போட்டியில் இருந்து விலகி இருந்தார்.

ஷரபோவா கர்ப்பம் அடைந்ததால் கனடா ஓபன் போட்டியில் ஆடவில்லை என்று தகவல் வெளியாகி இருந்தது. இதை அவர் மறுத்து இருந்தார். இதற்கிடையே அமெரிக்க ஓபன் டென்னிஸ் முதல் சுற்றில் வெற்றி பெற்றார். அப்போது அவர் தான் கர்ப்பம் அடைந்ததாக பயந்துவிட்டதாக கூறினார். இது தொடர்பாக ஷரபோவா கூறியதாவது:-

நான் தற்போது நல்ல நிலையில் இருக்கிறேன். உடல் நலம் சரியில்லாமல் இருந்தபோது ரத்த பரிசோதனை செய்தேன். அப்போது கர்ப்பமாக இருப்பமோ என்று பயந்துவிட்டேன். அப்படி எதுவும் இல்லை. இந்த ஆண்டில் அமெரிக்கா ஓபன் எனது கடைசி ஆட்டம் இல்லை என்கிறார் சரபோவா.

## மாற்றுத் திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக் போட்டி லண்டனில்




லண்டனில் சமீபத்தில் ஒலிம்பிக் திருவிழா நடந்தது. தற்போது அங்கு மாற்று திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக் போட்டி நடத்தப்படுகிறது. இந்தப் போட்டி செப்ரெம்பர் 9ஆம் திகதி வரை நடக்கிறது.


166 நாடுகளில் இருந்து 4,200 பேர் இதில் கலந்து கொள்கிறார்கள். 20 விளையாட்டுகள் 503 பிரிவுகளில் நடக்கிறது. இந்தப் போட்டியை இங்கிலாந்து ராணி எலிசபெத் ஆரம்பித்து வைத்தார்.

## 20 ஓவர் உலக கோப்பையை இலங்கை அணி வெல்லும் -மலிங்கா

20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இலங்கையில் செப்ரெம்பர் 18-ந் தேதி முதல் ஒக்டோபர் 7ஆம் தேதி வரை நடக்கிறது. இந்தப் போட்டி குறித்து இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்கா அளித்த பேட்டியில் கூறியதாவது:-

20 ஓவர் உலகக் கோப்பை போட்டிக்கு சிறப்பாகத் தயாராகுவதற்கு இலங்கை பிரிமியர் லீக் போட்டி சரியானதாகும். எல்லா இலங்கை வீரர்களும் ஆடுகளத்தின் தன்மை குறித்து நன்கு அறிந்து இருப்பார்கள். எனவே நாங்கள் 20 ஓவர் உலகக் கோப்பையை வெல்ல வாய்ப்பு உள்ளது. 20 ஓவர் உலக கோப்பையை வெல்ல எங்களுக்கு நல்ல அனுகூலம் இருக்கிறது.

நாங்கள் உலகக் கோப்பை போட்டிக்குத் தயாராக இருக்கிறோம். இலங்கை பிரிமியர் லீக் போட்டி முதல்முறையாக நடக்கிறது. உள்ளூர் வீரர்கள் 20 ஓவர் லீக் போட்டிக்கு ஏற்ப தங்களை அனுசரித்துக் கொள்வார்கள். 20 ஓவர் போட்டியில் எப்படி ஆட வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாது.




அவர்கள் அதனை கற்றுக் கொண்டு வருங் காலத்தில் சிறப்பாகச் செயல்படுவார்கள். இது இலங்கை அணிக்கு நல்ல விடயமாகும். இலங்கை பிரிமியர் லீக் போட்டியில் நான் எனது திறமைக்கு தக்கபடி விளையாடவில்லை. ஆனால் 20 ஓவர் உலகக் கோப்பை போட்டியில் என்னால் சிறப்பாக செயல்பட முடியும் என்று நம்புகிறேன் என்கிறார் மலிங்கா.

இலங்கை அணியின் கப்டன் ஜெயவர்த்தனே கூறுகையில், '20 ஓவர் போட்டிக்கு நாங்கள் சிறப்பாகத் தயாராகி இருக்கிறோம். உலகக் கோப்பையை நெருங்கும் நேரத்தில் வீரர்கள் காயம் தான் கவலை அளிக்கிறது. உலகக் கோப்பை போட்டிக்கு எல்லாம் சரியாகி விடும் என்று நினைக்கிறோம். உலகக் கோப்பை போட்டியில் சிறப்பாக செயல்பட முடியும் என்று நம்பிக்கை இருக்கிறது. உலக கிரிக்கெட்டில் லட்சுமண் சிறப்பு வாய்ந்த வீரர். அவர் ஓய்வு பெற்றது இழப்பாகும். அவர் இந்திய அணியின் வெற்றிக்கு நிறைய பங்களிப்பை அளித்துள்ளார்' என்றார் .

## இலங்கைக் கல்வி அமைச்சின் 2ஆம் கட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள்

இலங்கை கல்வி அமைச்சினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படுகின்ற பெரு விளையாட்டுப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளுக்கான இரண்டாம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளன.

இரண்டாம் கட்டப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் மாத்தளை எட்வேட் பாக் விளையாட்டு மைதானத்திலும் வேனாட் அலுவிகார் விளையாட்டு மைதானத்திலும் எதிர்வரும் 15ஆம் 16ஆம் 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

வடமாகாண அணி சார்பில் ஆண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் கலந்துகொள்ளவுள்ளன.

பெண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியன கலந்துகொள்ளவுள்ளன.

## 3வது முறையாகவும் ஜூனியர் உலக கோப்பையை கைப்பற்றிய இந்தியா

ஆஸ்திரேலியாவில் நடந்த இளைஞர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் 3வது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்த இந்திய அணி வீரர்கள் நாடு திரும்பினர். மும்பை, சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்தில் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மும்பை கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் மற்றும் ஏராளமான ரசிகர்கள் திரண்டு இளம் சம்பியன்களை வாழ்த்தி வரவேற்றனர். ஆஸ்திரேலிய அணியுடன் நடந்த பரபரப்பான பைனலில், அபாரமாக விளையாடி சதம் விளாசிய கப்டன் உன்முக்த் சந்த் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

உலக கோப்பையை வென்றது மகிழ்ச்சியாக உள்ளது. எல்லா வீரர்களும் ஒருங்கிணைந்து விளையாடியதால் கிடைத்த வெற்றி இது. மிகவும் பெருமையாக உணர்கிறோம். சீனியர் அணியில் இடம் பிடிப்பீர்களா என்று கேட்கிறார்கள். அதற்கு இன்னும் நீண்ட தூரம் உள்ளது. நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாட உள்ள இந்திய ஏ அணியில் இடம் பிடித்துள்ளேன். அந்தத் தொடரில் சிறப்பாக விளையாடுவதில் மட்டுமே கவனம் செலுத்துவேன். சிறு வயதில் இருந்தே டைரி எழுதும் பழக்கம் உள்ளது. அதனால் எனது விளையாட்டுத் திறன் மேம்படுவதாக நம்புகிறேன். உலகக் கோப்பையை வெல்லவும் எனக்கு அது உதவியது என நினைக்கிறேன், இவ்வாறு உன்முக்த் சந்த் கூறினார்.



விளையாட்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அபிமான

அரச ஊழியர்களின் உன்னத சேவைக்காக


Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.



## அபிமானத்திற்குரிய அரச சேவையாளர்களாகிய நீங்கள் நாட்டுக்காகச் செய்கின்ற உன்னத சேவைக்காக

நாட்டுக்காகவும் எமக்காகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றும் அரச ஊழியர்களாகிய நீங்களே இத்தேசத்தின் உறுதித்தூண்கள். அபிவிருத்தியோடு கூட வேகமாக முன்னோக்கிப் பயணிக்கும் எமது நாட்டின் சக்தியும் நீங்களே. உங்களது உன்னத சேவையை கௌரவிக்கும் பொருட்டே, நிலையான, தடங்கலற்ற, அதிவேக இணைய வசதியைக் கொண்ட 'அபிமான' SLT புறோட்பேண்ட் புதிய பக்கேஜினை, உங்களுக்கே உரிய விஷேட விலையில் வழங்குகிறோம்.

**ரூ. 6,990/- பெறுமதிமிக்க வயர்லஸ் ரவுடரானது, 'அபிமான' பக்கேஜிற்காக அதிவிஷேட விலை ரூ. 1,990/-* ற்கு**



*வரையறுக்கப்பட்ட கொடுப்பனவு

**அபிமான பக்கேஜ் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| ஆரம்பக் கட்டணம் | | ரூ. 1,000 |
| மாதாந்த கட்டணம் | | ரூ. 390 |
| டவுன்லோட் வேகம் | ஆகக்கூடிய | 2 Mbps |
| | ஆகக்குறைந்த | 512 kbps |
| அப்லோட் வேகம் | | 512 kbps |
| மாதாந்த பாவனை அளவு* | | 1.5 GB |
| இலவச பாவனை: அப்லோட் (நெருக்கடி மற்றும் நெருக்கடியற்ற) டவுன்லோட் (நெருக்கடியற்ற) | | 0.5 GB |
| மாதாந்த பாவனை (மொத்தம்) | | 2.0 GB |
| மேலதிக பாவனை | | • மேலதிக 1 MB க்கு 25 சதம்<br>• 10 GBக்கு பின் வேகம் 64kbps ஆகும்<br>• 10 GBக்கு பின் மேலதிக கட்டணம் இல்லை |
| விசேட சலுகைகள் | | 3 ஈ-மெயில் கணக்கு மற்றும் 2 MB web space |

* மாதாந்த பாவனை அளவு (நெருக்கடி நேரங்களில் டவுன்லோட் செய்யக்கூடிய அதிகபட்ச அளவு):
அப்லோட் - நெருக்கடி மற்றும் நெருக்கடியற்ற. டவுன்லோட் - நெருக்கடி மற்றும் நெருக்கடியற்ற

TRC/SLT/Promo/12/04

உங்கள் நிறுவனத்தினால் உங்கள் சேவையை உறுதிப்படுத்திய கடிதத்துடன் தேசிய அடையாள அட்டையையும் நீங்கள் சமர்ப்பித்தல் போதுமானது. நீங்கள் ஓய்வூதியம் பெறுபவராயின், உங்கள் ஓய்வூதிய அட்டையுடன் தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும். உரிய மெகாலைன் இணைப்பினை உங்கள் பெயரின் கீழ் பெற்றிருத்தல் வேண்டும்.

கவனிக்க வேண்டியவை:

1. அரச துறையின் ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் மட்டுமே 'அபிமான' பக்கேஜினைப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போதைய பக்கேஜிலிருந்து 'அபிமான' பக்கேஜிற்கு மாறுவதற்கு ரூ. 500/- மட்டுமே அறவிடப்படும். (புதிய ரவுட்டர் ஒன்றை விஷேட விலையான ரூ. 1,990/- ற்கு பெற்றுக்கொள்ள விரும்பம் எனின், பக்கேஜ் மாற்றத்திற்கு ரூ. 1,000/- அறவிடப்படும்)
2. வேகமானது இணைப்பின் தூரம் மற்றும் நிலைமைக்கு ஏற்ப மாறுபடலாம்.
3. டவுன்லோட் மற்றும் அப்லோட் செய்வதற்கான நெருக்கடியற்ற நேரம் (ஓஃப்-பீக்), நள்ளிரவு 12 முதல் காலை 6 மணி வரையான காலமாகும்.

**உங்கள் 'அபிமான' பக்கேஜினைப் பெற்றுக்கொள்ள,**
**அருகிலுள்ள டெலிஷொப் அல்லது பிரதேச டெலிகொம் காரியாலயத்திற்கு விஜயம் செய்யுங்கள்!**

* இக்கட்டணங்களுக்கு அரசாங்க வரிகள் மற்றும் கட்டணங்கள் உள்ளடக்கப்படும். *நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.slt.lk துரித அழைப்பு 1212

PHOENIX DDM

**BROADBAND**
சக்தியளிப்பது Megaline

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஸ்மோலொஜி படிப்புக்கு உதவும் சூப்பர் கம்ப்யூட்டர்




கடந்த மாதம் இங்கிலாந்தில் ஒலிம்பிக் மட்டும் துவங்கவில்லை.. இன்னொரு முக்கியமான நிகழ்வும் நடந்திருக்கிறது. பிரபஞ்சத்தைப் பற்றி ஆராயும் கொஸ்மோலொஜி படிப்புக்கு உதவுவதற்காகவே உருவாக்கப்பட்ட உலகின் முதல் கொஸ்மோலொஜி சூப்பர் கம்ப்யூட்டர் இங்கிலாந்தில் கடந்த ஜூலை மாதம்தான் அறிமுகப் படுத்தப்பட்டது. வானவியலிலும் பிரபஞ்ச அறிவியலிலும் இந்த சூப்பர் கம்ப்யூட்டர் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லப்பட்டாலும், இருக்கும் சிக்கலில் இது வேறு தேவையா என்றும் பேச்சு எழுந்திருக்கிறது. ஆம், ஒரு சூப்பர் கம்ப்யூட்டரை நிர்வகிப்பது என்பது யானையைக் கட்டி மூன்று வேளை தீனி போடுவது போன்றது.

உதாரணத்துக்கு, கடந்த 2010 முதல் 2011 வரை உலகின் நம்பர் வன் சூப்பர் கம்ப்யூட்டராக இருந்த கே கணினியைப் பற்றிப் பார்ப்போமே. நாம் வீட்டில் பயன்படுத்தும் கணினியில் இப்போதெல்லாம் இரண்டு அல்லது மூன்று கோர் ப்ராசஸர்கள் வருகின்றன. இந்த கே கணினியின் ப்ராசஸர் கோர்களின் எண்ணிக்கை 5,48,352. இந்தக் கணினிக்குத் தேவையான வன்பொருட்கள் எல்லாம் நீண்ட பெரிய அறை ஒன்றில் ரேக்குகள் அமைத்து அடுக்கப்பட்டிருக்கும். அப்படி 672 ரேக்குகளைக் கொண்டது கே கணினி. இத்தனை பிரமாண்டமான கணினிகள் இயங்க வேண்டுமென்றால், அதற்கான மின்சாரமும் பிரமாண்ட அளவில் தான் தேவைப்படும்.

உதாரணத்துக்கு கே கணினி, தான் இயங்குவதற்கு 9.9 மெகா வோட் மின்சாரத்தை எடுத்துக் கொள்கிறது. இதற்காக வருடத்துக்கு மின்சார செலவு மட்டுமே ஒரு கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகிறது. உலகின் டாப் 10 சூப்பர் கம்பியூட்டர் என்று பட்டியலிடப் பட்டுள்ள பத்து கணினிகளும் இயங்க மொத்தம் 42.8 மெகா வோட் மின்சாரம் செலவாகிறது. இதை 40 ஆயிரம் வீடுகளுக்கு வழங்க முடியுமாம். புவி வெப்பமடைதல், மின்சார சிக்கனம் என்றெல்லாம் உலகமே பேசிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இன்னும் ஒரு சூப்பர் கணினி தேவையா என்பதே சமூக ஆர்வலர்களின் கேள்வி!

பெரிய செலவுதான் என்றாலும் இது தண்டச் செலவில்லை. நாளைய உலகுக்காக செய்யப்படும் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு மிகுந்த செயல் திறன் கொண்ட கணினிகள் கண்டிப்பாகத் தேவை. அதற்காகத்தான் உலக நாடுகள் பலவும் போட்டி போட்டுக் கொண்டு சூப்பர் கணினிகளைத் தயாரிக்கின்றன. உலகில் உள்ள முக்கியமான 500 சூப்பர் கம்ப்யூட்டர்களில், 274 அமெரிக்காவுக்குச் சொந்தமானவை. அடுத்தபடியாக சீனாவில் 41 உள்ளன. இந்தியாவில் 40 உள்ளது.

# நீச்சல் அடிக்கும் ரோபோ!



மனிதர்கள் செய்யும் எல்லாவற்றையும் ரோபோ செய்யும்போது நீச்சலடிக்கக் கூடாதா? எனவேதான் டோக்கியோ தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மொடோமு நகஷிமா தலைமையிலான குழுவினர் உலகின் முதல் ரோபோ நீச்சல் வீரனை உருவாக்கியுள்ளனர். இதற்கு ஸ்வுமனாய்ட்' எனப் பெயரிட்டிருக்கிறார்கள். குட்டியாக, அதிக எடை இல்லாத ஒரு ரோபோவை தெப்பம் போல் மிதக்க விட்டு நீச்சலடிக்க வைப்பது ரொம்பவே சுலபம்தான். ஆனால், மனிதனைப் போலவே உயரம், எடை போன்றவற்றைக் கொண்டிருக்கும் ஒரு ரோபோவை நீச்சலடிக்க வைப்பது மிகப் பெரும் கஷ்டம். அதைத்தான் செய்து காட்டியிருக்கிறது இந்த ஜப்பானிய ரோபோ.

3டி ஸ்கேனர் கொண்டு ஒரு நீச்சல் வீரரின் உடலமைப்பைப் போலவே அச்சு அசலாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ரோபோ மனிதனைப் போலவே கைகளை வீசி நீந்தும். மனிதர்கள் போடும் பின் நீச்சல், பட்டர்ஃப்ளை ஸ்ட்ரோக் என எல்லாவற்றையும் ஒரு கை பார்க்கும். நீச்சல் தெரியாமல் தண்ணீரில் தத்தளிப்பவர்களைக் காப்பாற்றுவதற்கு மட்டுமல்லாமல், நீச்சல் தொடர்பான ஆராய்ச்சிக்கும் இந்த ஸ்வுமனாய்ட்' உதவும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். நீர்நிலைகளில் பாதுகாப்புப் பணி, மற்றும் ரோந்துப் பணிகளிலும் இந்த ரோபோவை ஈடுபடுத்தலாம் என்பது அவர்களின் நம்பிக்கை.

ரோந்துப் பணிகளில் இருக்கும் நீச்சல் வீரர்களை ஜி.பி.ஆர்.எஸ் பொருத்தி கண்காணிப்பதும், கேமராக்கள் பொருத்தி செயல்பாடுகளைத் துல்லியமாக கணிப்பதும் சிரமம். ஆனால், இந்த ரோபோவில் இது சுலபமாக சாத்தியமாகும். நீச்சல் வேகம் உட்பட பல்வேறு இயக்கங்களை துல்லியமாகக் கணிக்கவும் உதவியாக அமையும். உலகின் அதிவேக நீச்சல் வீரர் என்ற சாதனைப் படைத்தவரைப் போல மூன்று மடங்கு வேகத்தில் நீந்தும் திறன் படைத்ததாம் இந்த 'ஸ்வுமனாய்ட்'. அடுத்த ஒலிம்பிக் போட்டியின் நீச்சல் பிரிவில் இந்த ரோபோவை அனுமதித்தால் ஏராளமான தங்கப் பதக்கங்களை அள்ளி, அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கேல் ஃபெல்ப்ஸ் படைத்திருக்கும் உலக சாதனைகளை முறியடிப்பது நிச்சயம்.

# அறிமுகமாகின்றது LG Optimus L9 கைப்பேசிகள்



LG நிறுவனமானது இரட்டை சிம் வசதி கொண்டதும் நவீன தொழில்நுட்பத்தில் அமைந்தமதுமான Optimus L9 எனப்படும் கைப்பேசிகளை விரைவில் அறிமுகப்படுத்துகின்றது.

கொரிய நாட்டிலில் தயாரிக்கப்பட்டு வரும் இக்கைப்பேசிகள் கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக்கூடியவாறு உருவாக்கப்படுகின்றன.

மேலும் 1GHz வேகத்தில் செயற்படவுள்ள புரோசசர், 4.7 அங்குலமுடைய தொடுதிரை, 5 மெகாபிக்சல்கள் உடைய கமெரா போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாவும் காணப் படுகின்றன.



125 கிராம்களே உடைய இக்கைப்பேசியின் உள்ளக நினைவகமானது 4GB வரை காணப் படுவதுடன் 44 வகையான மொழிகளுக்கு துலக்கத்தை ஏற்படுத்தக்கூடிய Optical Character Recognition மென்பொருளையும் தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனிதனின் உணர்ச்சிகளை கண்டுபிடிக்கும் ரோபோ

பேச்சு, முக பாவம் ஆகியவற்றைக் கொண்டே ஒருவரது உணர்ச்சிகளைக் கண்டுபிடிக்கும் ரோபோவை பின்லாந்து விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

மனிதனின் உணர்ச்சிகளைக் கண்டுபிடிக்கும் ரோபோவை உருவாக்கும் ஆராய்ச்சியில் பின்லாந்தின் அவுலு பல்கலைக்கழக பேராசிரியர்கள் மேடி பிடிகெய்னன், ஜுகா ரோனிங் தலைமையிலான குழுவினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

இவர்களது ஆராய்ச்சி தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதுபற்றி மேடி கூறுகையில், மனிதனின் பேச்சு, முகபாவம், குரல் ஏற்ற, இறக்கம் ஆகியவற்றை கொண்டே அவரது உணர்ச்சியை இந்த ரோபோ துல்லியமாக தெரிந்துகொண்டு விடும். வழக்கமான வீடியோ கமெரா, மனிதனின் முகம் மற்றும் வாய் அசைவுகள், நெற்றி சுருக்கம் ஆகியவற்றை துல்லியமாக பதிவு செய்யும் கைனட் டெப்த் கமெரா, சத்தங்களை பதிவு செய்யும் மைக்ரோ போன், பிரத்தியேக மென்பொருள், பிராசசர் ஆகியவற்றின் உதவியுடன் இந்த ரோபோ செயல்படுகிறது.

எதிராளியின் மனோபாவத்துக்கு ஏற்ப ரோபோவும் தன் முகத்தை மாற்றிக்கொள்ளும். நோயாளிகளின் முக மாற்றங்களை தொடர்ந்து கண்காணிப்பது, குற்ற விசாரணைகள் போன்ற பணிகளில் இந்த வகை ரோபோக்கள் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சீன பல் கலைக்கழகம் உள்பட உலகின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த ஆராய்ச்சி நடந்தது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2012 செப்ரெம்பர் 05 ஆம் திகதி வெளியிடப்பட்டது.